# அத்தியாயம் 5

# பொருளாதார மற்றும் நலன்புரிச் செலவுகள்

## 5.1 பொது நோக்கு

பொருளாதார உட்கட்டமைப்பைப் பொறுத்த வரையில் 2002ஆம் ஆண்டானது வழங்கலுக்கான தடைகளை நீக்குதல், தொழிற்பாட்டுச் செயற்றிறனை அதிகரிக்கச்செய்தல், சந்தைகளில் சிறந்த போட்டியை உருவாக்குதல், விலையிடற் கொள்கைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மற்றும் தனியார் முதலீட்டினை ஊக்குவித்ததல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பரந்தளவில் நிறுவனரீதியான மற்றும் சந்தை சீர்திருத்தங்களின் அறிமுகத்தினைக் கொண்டு குறிப்பிடத்தக்க ஆண்டாகக் காணப்படுகிறது. இச் சீர்திருத்தங்கள் மின்வலு, பெற்றோலியம், கப்பல் எரிபொருள் வழங்கல், சிவில் விமானப் போக்குவரத்து தொலைத்தொடர்பூட்டல் மற்றும் பயணிப் போக்குவரத்து மற்றும் பயன்பாட்டுப் பணிகளின் ஒழுங்கு முறைப்படுத்தல் விடயங்கள் ஆகியவற்றை விசேடமாக உள்ளடக்கியிருந்தன. சீர்திருத்தங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. இச் சீர்திருத்தங்கள் இவ்வுட்கட்ட மைப்புத்துறைகளில் நீண்டகாலமாகக் காணப்பட்ட அமைப்பு ரீதியான இசைவின்மைகளை நீக்குவதுடன் குறிப்பிடத்தக்க நீண்டகாலப் பொருளாதார நன்மைகளை உருவாக்குமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

ஒழுங்குமுறைப்படுத்ததப்பட்ட விலையிடற் கொள்கையொன்று போதாமல் இருந்தமையே நாட்டின் உட்கட்டமைப்புப் பணிகளின் மேம்பாட்டுக்கான முக்கிய தடையாகக் காணப்பட்டது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டாக, மின்வலுவழங்கல், பெற்றோலியம், பயணிகள் போக்குவரத்து, உள்நாட்டு நீர்வழங்கல் மற்றும் அஞ்சல் பணிகள் ஆகியவற்றைப் பொறுத்ததவரையில் அதிகரிக்கப்பட்ட அரச வரிகளின் ஊடாக திறனின்மையின் காரணமாக ஏற்படும் செலவினையும் உள்ளடக்கியமையை பொதுமக்கள் ஏற றுக்கொண்ட போதிலும் தீர்வையானது கொள்விலை மீட்பு விலையை விடக் குறைவாகக் காணப்பட்ட இம்முறையானது தனியார் துறையினரின் வருகையினை ஊக்கமிழக்கச் செய்து இறுதியில் முழுச்சுமையினையும் அரசே சுமக்க வேண்டிய நிலையை தோற்றுவித்ததுடன் நாட்டுக்குத் தேவையான உட்கட்டமைப்புக்கான மேலதிக முதலீடுகளையும் தடைசெய்தது. நியாயமானதும் நெகிழ்ச்சியுடையதும் மற்றும் வெளிப்படையானதுமான விலையிடற் கொள்கையொன்று வழங்குனர் மற்றும் நுகர்வோர் ஆகிய இருபகுதியினருக்கும் மற்றும் முழுமையாகப் பார்க்கையில் பொருளாதாரத்துக்கும் நன்மைகளை ஏற்படுத்துகிறது. இது, நிச்சயமற்ற தன்மையினைக் குறைத்தல், உள்ளீட்டுச் செலவில் வீழ்ச்சி ஏற்படுகையில் சாதகமான வீழ்ச்சிகளை ஏற்படுத்துதல் வரவு செலவுத்திட்டம் மற்றும் பேரண்டப் பொருளா தாரத்தில் சமநிலையை ஏற்படுத்துதல் ஆகிய வற்றினூடாகவும் சந்தையில் காணப்பட்ட விலைத்திரிபுகளை இல்லாமற் செய்ததனூடாகவுமே அடையப்பட்டது 2002ஆம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான தன்னியக்க விலைச்சீர்திருத்தப் பொறிமுறையொன்றினையும் வீதிப்பயணிப் போக்குவரத்துக்கான நெகிழ்ச்சியுடைய பேருந்துக் கட்டணக் கொள்கையொன்றினையும் அரசு அறிமுகம் செய்தது. எனினும், நெகிழ்ச்சியுடைய விலையிடற் கொள்கை யிலிருந்து ஆகக்கூடிய தன்மைகளைப் பெற றுக் கொள்வதற்காக மிகச்சிறந்த ஒழுங்குமுறைப்படுத்தல் வரைச்சட்டமொன்றுடனான போட்டித் தன்மையுடைய சந்தை நிலைமையை நடைமுறைப்படுத்துதல் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. இவ் விலையிடற் கொள்கை ஏனைய பயன்பாட்டுப் பணிகள் குறிப்பாக மின்வலு, நீர் மற்றும் புகையிரதப் பாதைப்பணிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கக்கூடிய முறையில் விரிவாக்கப்படவேண்டும்.

அரசு பெற்றோலிய உற்பத்திகள், கப்பல் எரிபொருள் வழங்கல், மின்வலு உருவாக்கம் மற்றும் வழங்கல் ஆகியவற்றுக்காக போட்டித் தன்மையுடைய சந்தைகளை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் 1961இல் நிறுவப்பட்டதிலிருந்து 40 ஆண்டுகளாகக் கொண்டிருந்த தனியுரிமையின் பின் 2002இல் பெற்றோலிய உற்பத்திகளுக்கான உள்நாட்டுச் சந்தை போட்டிக்காக திறந்துவிடப்பட்டது. மேலும், கப்பல் எரிபொருள் வழங்கலுக்கான வலுவான சந்தையை உருவாக்கும் நோக்குடன் வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் 2002ஆம் ஆண்டில் தனியார் மயமாக்கப்பட்டது. மின்வலுத்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவசியமாகத் தேவைப்படும் சட்ட வரைச் சட்டமொன்றினை வழங்கும் வகையில் புதிய மின்வலுச் சீராக்கச் சட்டமொன்று 2002ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச் சீர்திருத்தங்களின் கீழ் இலங்கை மின்சபையின் முக்கிய நடவடிக்கைகள் பரந்து அமைக்கப்பட்டன. விரிவான அடிப்படையில் அமைந்த மின்வலு உருவாக்கம் மற்றும் வழங்கல் முறையொன்று அமைக்கப்படும். மேலும் பன்னாட்டு வழிகளின் தொழிற்பாட்டினை உள்ளடக்கி தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் தாராளமயமாக்கலை இலகுவாக்கும் வகையில் 2002ஆம் ஆண்டில் புதிய தொடர்பூட்டல் கொள்கையொன்று அறிவிக்கப்பட்டது. கொள்கை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்குக் கூடிய அளவில் நெகிழ்ச்சித்தன்மையை வழங்கும் வகையில் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைத்துமையுடன், சிறிய விமானப் போக்குவரத்துத்துறையில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தங்கள் 2002ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன. அதேவேளையில் வீதிப் பயணிப் போக்குவரத்துத் தொழிற்பாட்டுக்காக அரச தனியார் பங்குடமைகளை அறிமுகம் செய்து வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த உரிமை மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டிய முறை பற்றிய இறுதித் தீர்மானம் 2003 இல் எடுக்கப்பட வேண்டியதாகும். இலங்கை பயன்பாட்டுப்பணிகள் ஆணைக்குழு நிறுவப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை

யானது சந்தை அடிப்படையிலான போட்டித்தன்மையுடைய பயன்பாட்டுப் பணிகள் தொடர்பில் நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கைத் தன்மையைக் கட்டியெழுப்புவதில் முன்னேற்றகரமான முக்கியமானதொரு படியாக அமைந்தது. எஞ்சிய விடயங்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக புகையிரதப்பகுதி மற்றும் அஞ்சல் பணிகளை உள்ளடக்கி அவற்றுக்குப் பொருத்தமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அதே வேளையில், அரசு 1998இல் அறிமுகப்படுத்திய கல்விச் சீர்திருத்தங்களையும், 1997இல் அறிமுகப்படுத்திய நலச் சீர்திருத்தங்களையும் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சிக்கனமற்ற விலையிடற் கொள்கையானது தனியார்துறையின் வருகையினைத் தடைசெய்த வேளையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் அரச முதலீடு முக்கியமாக தொடர்ச்சியான வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடுகளின் காரணமாக 2002இல் மேலும் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார உட்கட்டமைப்பிலான அரச முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் சமூக உட்கட்டமைப்பிலான முதலீடு 2002ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதத்திலேயே மாறாதிருந்தது. இம்முதலீட்டு மட்டம் உட்கட்டமைப்பினது தற்போதைய இருப்பின் பெறுமதியை உள்ளடக்குவதற்கு ஓரளவுக்கு மட்டுமே போதியதாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 5.1**
உட்கட்டமைப்பில் அரச முதலீடு

| ஆண்டு | பொருளாதாரப் பணிகள் | | சமுகப் பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில் | மொ.உ.உ. இன் % | ரூ. மில் | மொ.உ.உ. இன் % | ரூ. மில் | மொ.உ.உ. இன் % |
| 1992 | 20,444 | 4.8 | 6,137 | 1.4 | 26,581 | 6.2 |
| 1993 | 29,600 | 5.9 | 6,075 | 1.2 | 35,675 | 7.1 |
| 1994 | 29,304 | 5.1 | 7,677 | 1.3 | 36,981 | 6.4 |
| 1995 | 36,106 | 5.4 | 9,854 | 1.5 | 45,960 | 6.9 |
| 1996 | 31,409 | 4.1 | 10,322 | 1.3 | 41,731 | 5.4 |
| 1997 | 32,481 | 3.6 | 11,552 | 1.3 | 44,033 | 4.9 |
| 1998 | 44,677 | 4.4 | 15,528 | 1.5 | 60,205 | 5.9 |
| 1999 | 44,940 | 4.1 | 17,493 | 1.6 | 62,433 | 5.6 |
| 2000 | 54,650 | 4.3 | 16,471 | 1.3 | 71,121 | 5.7 |
| 2001 | 54,906 | 3.9 | 14,559 | 1.0 | 69,465 | 4.9 |
| 2002 (அ) | 51,678 | 3.3 | 15,690 | 1.0 | 67,368 | 4.3 |

(அ) தற்காலிகமானவை　　　　மூலம்: இலங்கை மத்திய வங்கி.

எனவே அரசின் வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் அரசின் தொழிற்பாடுகளோடு இணைந்த செயற்றிறனின்மை ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு உட்கட்டமைப்புப் பணிகளில் தனியார் முதலீட்டினை ஊக்குவிப்பது இன்றியமையாததாகும். அண்மை ஆண்டுகளில் தனியார்துறையானது தொலைத்தொடர்பூட்டல், வலு உருவாக்கம், நலம் மற்றும் கல்வி ஆகிய விடயங்களில் முதலீடு செய்வதில் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டினைக் காட்டியது. இத்துடன்,தனியார் துறை முதலீடுகள் நேரடியான தலையீட்டோடு கட்டு, உடைமையாக்கி, தொழிற்படுத்து, கட்டு, உடைமையாக்கி, மாற்றல் செய் என்ற ஒழுங்குகள் பணி ஒப்பந்தங்கள், முகாமை ஒப்பந்தங்கள், உபாய அடிப்படையிலான பங்குடமைகள் மற்றும் நேரடியான தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றினூடாக இலகுபடுத்தப்படலாம். அதேநேரத்தில் குறுங்கால வழிமுறையொன்றாக அரச முதலீடுகளை குறிப்பாக தனியார் துறையினர் முதலீடு செய்ய பின்வாங்கும் விடயங்களில் அதிகரித்தல் ஏற்புடையதாகும்.

## 5.2 நலத்துறை

பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல நிலைமை ஆகியன பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவையாகும். நாடொன்றின் நல நிலைமை பொதுவாக அபிவிருத்தியின் விளைவாகவே கருதப்படுகிறது. எனினும் பொருளாதார அபிவிருத்திக்கு சிறந்த நல நிலமையொன்றின் பங்களிப்பானது கொள்கைத் தயாரிப்பாளர்களின் பெரும்பாலோரால் கவனத்துக்கெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் உலக சுகாதார நிறுவனத்தினால் 2000ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நலம் தொடர்பான ஆணைக்குழு நலத்துறையிலான முதலீடுகள் குறிப்பாக அபிவிருத்தியடையும் நாடுகளில் மிக அதிகமான அளவில் பொருளாதார நன்மைகளை விளைவிக்கும் என வலியுறுத்திக் கூறியுள்ளது. மேலும் நலம் வறுமைக் குறைப்பு மற்றும் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கிடையிலான இணைப்புக்கள் பொதுவாக விளங்கிக்கொள்ளப்பட்டதை விட அதிகளவுக்கு உறுதி வாய்ந்தனவாகக் காணப்படுகின்றனவென்தபதையும் எடுத்துக்காட்டியுள்ளது. அதே வேளையில் 2000ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரமாம் ஆண்டு உச்சிமாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் வறுமை நிலையின் உடனடியான குறைப்பையும் வறியோரின் நலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் வேண்டி நின்றன. புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளின் கீழான நிதியியல் உபாயமானது. நலப்பணிகளின் சிறப்பான முன்னுரிமையை உள்ளடக்கி 2003ஆம் ஆண்டளவில் மொத்ததேசிய உற்பத்தியில் நலத்துடனான உள்நாட்டு வரவுசெலவுத்திட்ட மூலவளங்களில் 2007 இல் மொத்த தேசிய உற்பத்தியில் 1 சதவீத அதிகரிப்பையும் 2015ஆம் ஆண்டளவில் மொத்த தேசிய உற்பத்தியில் 2 சதவீத அதிகரிப்பையும் எதிர்பார்க்கிறது. விரும்பத்தக்க இவ்விலக்குகளை அடைவதற்கு உதவி வழங்குவோரின் அதிகரித்த அளவிலான உதவியும் எதிர்பார்க்கப்படுகிறது.

1940களிலும் 1950களிலும் பெருந்தோட்டத் துறைகளின் மிகைகள் மீது தாராளமான வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டமையும் மற்றும் 1960களிலும் 1970களிலும் பன்னாட்டு வர்த்தகம் மீதான வரிகளில் பெருமளவுக்குத் தங்கியிருந்ததையும் நலத்துறையில் அதிகளவில் நேரடி முதலீடுகளை மேற்கொள்வதனையும் மேலும் பல சமூகநலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலில் பாரிய அளவில் ஈடுபடுவதனையும் அரசுக்கு இயலச் செய்தது. இது இறப்பு வீதங்கள் சிசு மற்றும் தாய் மரண வீதங்கள் மற்றும் வாழ்வுக்காலம் ஆகியவற்றின் நியதிகளில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் நலத் தரங்களுடன் ஏறக்குறையச் சமநிலையில் இலங்கைகாணப்படுவதனை

இயலச் செய்தது. எனினும் வரவுசெலவுத்திட்ட ரீதியிலான முன்னேற்றங்கள் மோசமடைந்தமை மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய செலவினத்தினால் ஏற்பட்ட போட்டியுடனான கேள்விகள் ஆகியவற்றினால் 1990 களில் தேவைப்பட்ட மட்டங்களுக்குக் கீழ் நலத்துறையிலான இலங்கையின் முதலீடுகள் நாட்டில் நலத்தேவைகள் ஏற்பட்டிருந்தமைக்கும் எதிராக வீழ்ச்சியடைந்தன. கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தினால் தொகுக்கப்பட்ட இலங்கை தேசிய நலக் கணக்குகளின் (யூன் 2002) படி மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதமாக மொத்ததேசிய நலச் செலவினம் 1999இல் 3.5 சதவீதமாகக் காணப்பட்டது. மொத்த நலச்செலவினத்தில் அரசின் பங்களிப்பு 48 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் குடும்பங்களின் பங்களிப்பு 46 சதவீதமாகக் காணப்பட்டது. எஞ்சியவை தொழில் தருநர்களின் (3 சதவீதம்) தனியார் காப்புறுதி (1 சதவீதம்) இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் (2 சதவீதம்) ஆகியவற்றினால் நிதியிடப்பட்டன. இது சந்தை அடிப்படையிலான நல முதலீட்டு முறைகளுக்கு பொருத்தமான தனியார் முதலீட்டு சிநேக பூர்வக்கொள்கை மாற்றங்களினூடாக அதிகளவிலான வாய்ப்புக்கள் காணப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. இதனால் நலத்துறையில் முதலீட்டினை அதிகரிக்கச் செய்வதில் தனியார் துறையின் அதிகரித்த பங்கேற்பு தனியார் காப்புறுதி மற்றும் சமூகக் காப்புறுதித் திட்டங்களின் அதிகரிப்பு ஆகியன உதவக் கூடியதாயிருக்கும்.

**அட்டவணை 5.2**
**அரச நலத்துறைப் பணிகள்**

| விடயம் | 2000 | 2001 | 2002(அ) |
|---|---|---|---|
| மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருத்துவத்தைக் கையாள்பவை எண்ணிக்கை) | 578 | 585 | 605 |
| படுக்கைகள் எண்ணிக்கை | 58,423 | 58,833 | 59,781 |
| மத்திய மருந்தகங்கள் எண்ணிக்கை | 389 | 389 | 385 |
| மருத்துவர்களின் எண்ணிக்கை | 6,873 | 7,235 | 7,459 |
| துணை மருத்துவர்களின் எண்ணிக்கை | 1,332 | 1,330 | 1,295 |
| ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை | 16,161 | 16,130 | 16,455 |
| தாதிமார் எண்ணிக்கை(ஆ) | 14,931 | 15,061 | 16,139 |
| உடன் கவனிப்பாளர் எண்ணிக்கை | 7,309 | 7,163 | 6,955 |
| உள் நோயாளர் எண்ணிக்கை ('000) | 4,015 | வி.கி . | வி.கி |
| வெளி நோயாளர் எண்ணிக்கை ('000) | 43,329 | வி.கி | வி.கி |
| மொத்த நலத்துறைச் செலவு (ரூ.மில்.) | 20,696 | 18,772 | 24,946 |
| நடைமுறைச் செலவு (ரூ.மில்.) | 15,394 | 14,785 | 20,233 |
| மூலதனச் செலவு (ரூ.மில்.) | 5,302 | 3,987 | 4,713 |

மூலங்கள்: நலத்துறை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) 2000 நலத்துறை ஆண்டு செய்தித் திரட்டின்படி 2000 எண்தொகைகள் திருத்தப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நல நிலைமைகளிலும் மற்றும் நலப்பணிகளிலும் தொடர்ச்சியான நலத்துறை பிரச்சனைகள் (வறுமை மாற்றத்திற்குரிய காலம் மற்றும் நலம் உலக சுகாதார நிறுவனம் கொழும்பு, மாச்சு 2002) அடையாளங் காணப்பட்டுள்ளன. தற்போதுள்ள நிலைமையில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளாக ஊட்டச்சத்து குறைவு ஆகக்கூடிய மட்டத்தில் முக்கியமாக சிறு பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களிடையே காணப்படுதல், மலேரியா மற்றும் டெங்கு போன்ற தொற்று நோய்களின் மீட்டெழுச்சி, எஸ்.ரி.டி, எயிட்ஸ் அதிகரித்த வீதத்தில் காணப்படுதல் இருதய நோய்கள், நீரிழிவு அதிகளவிலான இரத்த அழுத்தம், மனநோய் துர்ப் பிரயோகத்திற்கு வழிவகுக்கக் கூடிய மாற்றமடையும் வாழ்க்கை முறைகள், ஆரோக்கியமற்ற உணவு நடைமுறைகள் மனஅழுத்தம் மற்றும் தற்கொலை போன்ற தொற்று நோயல்லாத நோய்களின் அதிகரிப்பு ஆகியன அடையாளங் காணப்பட்டுள்ளன. நலப்பணிகளைப் பொறுத்தவரையில் நல ஊக்குவிப்பிலான குறைபாடுகள், குறைபாடுடைய நோய்த்தடுப்புக் கவனிப்புப் பணிகள் பயிற்றப்பட்ட ஆளணியினருக்கான தட்டுப்பாடு குறைபாடுடைய முகாமைத்துவம் ஒழுங்குமுறைகள் குறைவாகக் காணப்படுதல் போன்ற நோயைக் குணமாக்கும் நலப்பணிகளில் காணப்படும் பிரச்சனைகள் என்பனவே முக்கிய பிரச்சனைகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன. மேலும், கிடைக்கத்தக்க மூலவளங்களின் சமமற்ற விநியோகம், பொருத்தமான மாற்றல் முறைகளின் பற்றாக்குறை மற்றும் சில வைத்தியசாலைகளில் காணப்பட்ட இடநெருக்கடி ஆகிய பிரச்சினைகள் காணப்பட்ட வேளையில் ஏனையவை குறைப்பயன்பாட்டைக் கொண்டு நாட்டின் நல முறையினைத் தொடர்ந்தும் அச்சுறுத்தின.

நல அமைச்சு 1997இல் சனாதிபதி செயலணிக்குழுவினால் நலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கியமான விதந்துரைப்புக்களைத் தொடர்ந்தும் 2002ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தியது. இவை ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு வைத்தியசாலையையாவது அபிவிருத்தி செய்தல், ஊனமுற்ற வயதில் மூத்த மற்றும் மன நோயாளிகள் ஆகியோருக்கான நலப் பணிகளை வலுவடையச்செய்தல், நல ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல், நிறுவன ரீதியான அமைப்பு வேலைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் மனித மூலவளங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு வைத்திய சாலையையாவது மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அல்யோபதிக்முறை எனப்படும் மேல்நாட்டு எதிர்மறை வைத்திய முறையின் கீழ் 28 வைத்திய சாலைகளையும் சுதேச வைத்திய முறையின் கீழ் 23 வைத்தியசாலைகளையும் மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. மனநல வசதிகளை ஊக்குவிக்கவும் அவற்றைப் பன்முகப் படுத்தவும் மனநோயாளிகளுக்கான ஏழு புனர்வாழ்வு நிலையங்களை நிறுவுவதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பெருந்தோட்டப்பகுதியில் நலத்தை வலுப்படுத்தும் நோக்குடன் 54 தோட்ட வைத்தியசாலைகளை அரசு கையேற்பதற்குத் திட்டமிடப்பட்டது. இவற்றில் 21 வைத்தியசாலைகள் ஏற்கனவே கையேற்கப்பட்டுள்ளன. வயோதிபர்கள் ஊனமுற்றோர் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றோர் ஆகியோருக்காக சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பாடசாலை நலம் தொடர்பான மேம்படுத்தல் மற்றும் நலத்துறை தொடர்பான சட்டமியற்றுதலில் திருத்தங்கள் மேற்கொள்ளல் ஆகியவையும் 2002இல் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மேலைத்தேய வைத்திய முறையை வழங்கும் அரச வைத்தியசாலைகளின் மொத்த எண்ணிக்கை முக்கியமாக தோட்ட வைத்தியசாலைகளைக் கையேற்றுக் கொண்டதன் காரணமாக 20ஆல் அதிகரித்து 605ஆக விளங்கியது. இவ் வைத்தியசாலைகளில் உள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 2 சதவீதத்தால் அதிகரித்து 59,781ஆக விளங்கியது. நல அமைச்சின் படி 8,300 படுக்கைகளைக் கொண்ட 175 தனியார் மருத்துவ நிறுவனங்கள் காணப்படுகின்றன. அத்துடன் 2,567 படுக்கைகளைக் கொண்டுள்ள 49 ஆயுள்வேத அரச வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. இதன்படி 2002ஆம் ஆண்டின் இறுதியில் 1000 ஆட்களுக்கான படுக்கைகளின் எண்ணிக்கை 3.6ஆக விளங்கியது. அரச வைத்தியசாலைகளில் தகைமைபெற்ற வைத்தியர்களின் மொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 3 சத வீதத்தால் அதிகரித்து 7,459ஆக விளங்கியது. ஏறக்குறைய 800 தகைமை பெற்ற வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் புரிபவர்களாக அல்லது தனியார் வைத்தியசாலைகளில் பணி புரிபவர்களாக இருக்கின்றனரென நலஅமைச்சு மதிப்பீடு செய்துள்ளது. 2002ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் வைத்தியரொருவருக்கு 2,300 ஆட்கள் இருப்பார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. அரச வைத்தியசாலைகளில் தாதிகளின் மொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் அதிகரித்து 16,139ஆக விளங்கியது. நல அமைச்சு தனியார் வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் தாதிகளின் எண்ணிக்கை 6,955ஆக இருக்குமென மதிப்பீடு செய்துள்ளது. இதன்படி 100,000 குடித்தொகைக்கான தாதிகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 97இலிருந்து 121க்கு அதிகரித்தது. பயிற்றப்பட்ட நல ஆளணியினரின் பற்றாக்குறையினால் நாட்டின் நலப்பணிகள் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவித்தன. 2000ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் 697 வைத்திய நிபுணர்கள் மட்டுமே இருந்தனர். அனைத்து அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் பயிற்றப்பட்ட தாதிகள் மற்றும் துணை மருத்துவ அலுவலர்களுக்கான மிக நெருக்கடியான பற்றாக்குறையைக் கொண்டிருந்தன. வளர்ச்சியடைந்து செல்லும் தேவைகளுக்கேற்ற வகையில் அரச பயிற்சி நிறுவனங்களில் ஆட்களைச் சேர்த்துக்கொள்ளல் அமையாத காரணத்தினால் தரங்கள் மற்றும் நியமங்களுக்கமைய அவசியமான மனிதவலுவினைப் பயிற்றுவிப்பதற்கு தனியார் துறையை அனுமதிப்பதே சிறந்ததாகும்.

2002ஆம் ஆண்டில் டெங்குக்காய்ச்சல் அதிகளவில் ஏற்பட்டமையானது நோய்க்கட்டுப்பாட்டு இயக்கங்களுக்குத் தொடர்ந்தும் சவாலாகவே காணப்பட்டது. 2001ஆம் ஆண்டில் காணப்பட்ட 3,771 டெங்கு நோயாளிகளுடன் ஒப்பிடுகையில் 2002இல் 2,461 நோயாளிகள் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 2001ஆம் ஆண்டின் 47 இறப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2002இல் டெங்குக் காய்ச்சலால் இறந்தோரின் தொகை 63ஆகக் காணப்பட்டது. இந்நோய் பரவுவதற்கான முக்கிய காரணங்களாக சுற்றாடல் பாதிப்பு கவனயீனம் மற்றும் நோய் கண்டுபிடிப்புப் பிரச்சினைகள் ஆகியவையே காணப்பட்டிருந்தன. மலேரியா கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2001இல் ஏற்பட்ட 68 சதவீத வீழ்ச்சியினைத் தொடர்ந்து 2002இல் 38 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தநது. மலேரியாவினால் இறந்தோரின் மொத்த எண்ணிக்கை 2001இன் 53இலிருந்து 30ஆக வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 5.3**
**தனியார் வைத்தியசாலைகளின் செயலாற்றம் (அ)**

| விடயம் | 2001 | 2002 (ஆ) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. வைத்தியசாலைப் படுக்கைகளின் எண்ணிக்கை | 961 | 974 | 1 |
| 2. நோயாளர்களின் எண்ணிக்கை | | | |
| உள்ளக நோயாளர் | 46,897 | 51,418 | 10 |
| வெளியக நோயாளர் | 349,436 | 388,069 | 11 |
| 3. வைத்தியர்கள் | 711 | 749 | 5 |
| நிரந்தரம் | 107 | 86 | -20 |
| வருகைதரும் வைத்தியர்கள் | 511 | 583 | 14 |
| பகுதிநேர வைத்தியர்கள் | 93 | 80 | -14 |
| 4. தாதி அலுவலர் | 1,496 | 1,491 | 0 |
| தாதிகள் | 1,079 | 1,110 | 3 |
| தகைமைபெற்றோர் | 799 | 762 | -5 |
| பயிற்சி | 280 | 348 | 24 |
| கண்காணிப்பாளர் | 417 | 381 | -9 |
| 5. ஏனைய அலுவலர் | 1,069 | 1,117 | 4 |
| தொழில்நுட்ப அலுவலர் | 243 | 277 | 14 |
| நிருவாக அலுவலர் | 190 | 211 | 11 |
| ஏனையோர் (தொழிலாளர்போன்றோர்) | 636 | 629 | -1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) மேல் மாகாணம் (12), தென் மாகாணம் (7), மத்திய மாகாணம் (3), வடமேல் மாகாணம் (3), கிழக்கு மாகாணம் (1) மற்றும் ஊவா (1) ஆகிய மாகாணங்களிலமைந்துள்ள 27 தனியார் வைத்தியசாலைகளினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி.

(ஆ) தற்காலிகமானவை

நலம் மீதான மொத்த அரச செலவினம் 2002ஆம் ஆண்டில் ரூ. 24,946 மில்லியனாக அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.6 சதவீதமாக விளங்கியிருந்தது. நலக் கவனிப்பு மீதான அரச செலவினம் முக்கியமாக வரவுசெலவுக் கட்டுப்பாடுகளின் காரணமாக அண்மைய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பாக குறைவாகக் காணப்பட்டது. இது அரச நலப் பணிகளில் அளவு மற்றும் தரரீதியிலான வீழ்ச்சியொன்றுக்கு வழி வகுத்த வேளையில் தனியார்துறை நலக்கவனிப்புப் பணிகளுக்கான கேள்வியில் விரிவை ஏற்படுத்துவதற்கும் வழிகோலியது. தற்போது குணமாக்கும் நலக் கவனிப்புப் பணிகளில் 50 சதவீதத்துக்கு மேல் தனியார்துறையினாலேயே வழங்கப்படுகின்றன. எனினும், நோய்த்தடுப்பு நலக்கவனிப்பு வசதிகளை அவை தேவைப்படும் மக்களுக்கு போதிய கவனத்தோடு வழங்குவதில் அரசு அதிக அளவில் ஈடுபட்டுள்ளதோடு நலக் கவனிப்பு பணிகளில் ஊக்குவித்தல். நலக்கவனிப்புப் பணிகளை விரிவாக்குவதற்கு முக்கியமாகும்.

நலம், ஊட்டச்சத்து மற்றும் நலன்புரி அமைச்சு 2002ஆம் ஆண்டு பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தியது. மாளிகாவத்தையிலுள்ள தேசிய

நெப்ரோலஜி டயாலிசிஸ் மாற்றுச்சிகிச்சை நிலையத்தின் கட்டுமான தேவைகள் 2002ஆம் ஆண்டில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இந்நிலமையானது 111 படுக்கைகளைக் கொண்டிருப்பதுடன் சிறுநீரக நோய்களைக் கண்டுபிடித்தல் டயாலிசிஸ் மற்றும் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை ஆகியவற்றுக்கான வசதிகளையும் கொண்டிருக்கும். இச்செயற்றிட்டத்துக்கான மொத்தச் செலவு ரூ. 290 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரத்தினபுரி பொது வைத்தியசாலை மற்றும் மாத்தறை மாகாண வைத்தியசாலை ஆகியவற்றின் நலப்பணிகளைத் தரமுயர்த்தும் நோக்குடன் உட்கட்டமைப்பினை மேம்படுத்தவும் ஜப்பானின் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரின் உதவியுடன் நவீன மருத்துவ உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரத்தம் மற்றும் இரத்த உற்பத்திகள் பாதுகாப்பாகவும் போதிய அளவிலும் மற்றும் இலகுவாகவும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு புதிய தேசிய இரத்தம் செலுத்தும் நிலையமொன்றை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வரைபடம் 5.1**
**நலன்புரி, கல்வி மீதான அரசின் செலவு**




## 5.3 கல்வி

இலங்கை அபிவிருத்தியடையும் நாடாக இருந்தும் படிப்பறிவுள்ளவர்களைப் பொறுத்தவரையில் அதிஉயர் வீதமாகக் கிட்டத்தட்ட 90 சதவீதத்தை அடைந்துள்ளது. எனினும் அறிவிக்கப்பட்ட இத்தகைய அதிஉயர் படிப்பறிவு வீதமானது தாக்குப் பிடிக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடிய அளவுக்கு திருப்திகரமான கற்கைகளினால் அடையப்பட்டவையெனக் கருதப்பட முடியாததாகும். "இலங்கையின் மீண்டெழும் எதிர்காலம்" என்ற அறிக்கை தற்போதைய கல்வி முறையில் காணப்படும் அதிக அளவிலான கட்டுப்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றன. அவையாவன தரக் கட்டுப்பாடுகள், நிறுவன ரீதியான கட்டுப்பாடுகள், மொழிக்கட்டுப்பாடுகள், மூன்றாந்தரக் கல்விக் கட்டுப்பாடுகள் என்பனவாகும். பணிவழங்குவதிலான பிரதேச சமமின்மை, தனியார்துறைப் பங்கேற்பினைத் தடை செய்யும் சட்ட ரீதியான கட்டுப்பாடுகள், ஆசிரியர்களை குறிப்பாக தூர இடங்களில் போதிய அளவில் பணியில் அமர்த்தாமை, அதிக அளவில் மையப்படுத்தப்பட்ட கல்வி முகாமைத்துவ முறை, வகுப்பறைகளிலான உள்ளீடுகளின் கடுமையான பற்றாக்குறை, கல்வி மூலவளங்கள் சமமாக வழங்கப்படாமை மற்றும் பல்கலாச்சாரச் சமூகமொன்றில் சமூக ஒற்றுமையை ஊக்குவிப்பதில் கல்வியின் பங்குக்குச் செலுத்தப்படும் கவனம் போதியதாகக் காணப்படாமை ஆகியனவே தர அடிப்படையிலும் மற்றும் நிறுவன ரீதியாகவும் காணப்படும் கட்டுப்பாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. பன்னாட்டு மொழிகளில் குறிப்பாக ஆங்கிலத்தில் போதிய திறமை காணப்படாமையே உலக சந்தைகளிலும் உள்நாட்டுத் தனியார் துறைகளிலுமான பங்குபற்றலை மட்டுப்படுத்துவதாகக் காணப்படுகின்றது. மூன்றாந்தரக் கல்வி வாய்ப்புக்கள் போதிய அளவில் காணப்படாமையும் தேர்ச்சி மற்றும் திறமை இடைவெளிகள் பட்டதாரிகளிடையே காணப்படுவதும் குறிப்பாக பல்கலைக்கழகக் கல்வித்துறையில் காணப்படும் மிக முக்கியமான பிரச்சினையாகும்.

### பொதுக்கல்வி

முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கல்விச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் 2002ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் நாடு முழுவதும் நடைபெற்றது. பாடவிதானத் திருத்தம் ஆசிரியர்களுக்கான வழிகாட்டிகளின் முன்னேற்பாடான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் பாடப்புத்தகங்கள் தயாரித்தல் போன்ற அனைத்துத் தயாரிப்பு நடவடிக்கைகளும் தரம் 1 இலிருந்து தரம் 5 வரை இவ்வாண்டில் நிறைவு பெற்றன. தொழிற்பாட்டு ரீதியிலான குறைபாடுகள் மற்றும் கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் தவறுகள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் சீர்திருத்தங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. செயற்பாட்டு அறைகள் போதிய அளவில் இல்லாமை, பிரபலமான பள்ளிக்கூடங்களில் சில வகுப்புக்களில் மாணவர்களின் தொகை மேலதிகமாக இருத்தல் மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறை குறிப்பாக பிராந்திய மட்டத்தில் காணப்படுதல் போன்ற பிரச்சனைகளே சீர்திருத்தங்களைப் பயன்தரும் விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாகக் காணப்படும் காரணிகளாகும். மேலாண்மையாளர்களின் காலந்தாழ்த்தாத கவனிப்பே இத்தகைய குறைபாடுகளைச் சரி செய்வதற்குத் தேவைப்படுவதாகும்.

2002ஆம் ஆண்டின் பாடசாலைத் தொகை மதிப்பீட்டின் படி தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களை உள்ளடக்கியும் பன்னாட்டுப் பாடசாலைகளைத் தவிர்த்தும் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகள் 10,505 ஆகக் காணப்பட்டன. இவ்வாண்டில் 65 அரச பாடசாலைகள் மூடப்பட்டமைக்கு கிராமியப் பாடசாலைகளில் வழங்கப்பட்ட கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து சென்ற காரணத்தினால் மாணவர்களின் தொகை குறைவாகக் காணப்பட்டமையே காரணமாகும். அதேபோல, அரச பாடசாலைகளில் மாணவர்களின் தொகை 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2002ஆம் ஆண்டில் 4,026,233 ஆக விளங்கியது. இதற்கு பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளின் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் மற்றும் தனியார் பன்னாட்டுப் பாடசாலைகளில் கூடுதலான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்க காரணங்களாகும்.

2002ஆம் ஆண்டில் பாடசாலை அடர்த்தியானது 7 சதுர கிலோ மீட்டர்களுக்கு ஒரு பாடசாலை என்ற அளவில் காணப்பட்டது. பாடசாலையொன்றுக்கான மாணவர்களின் சராசரி எண்ணிக்கை 2001ஆம் ஆண்டில் 423இலிருந்து 2002ஆம் ஆண்டில் 410ஆக வீழ்ச்சியடைந்தது. பாடசாலை மாணவன் / ஆசிரியர் விகிதாசாரம் 2002இல் சிறிதளவில் அதிகரித்து 21ஆக விளங்கியது. 2002ஆம் ஆண்டின் இறுதியளவில் 96,917 மாணவர்களுடன் 80 தனியார் பாடசாலைகளும் 54,968 மாணவர்களுடன் 599 பிரிவேனாக்களும் காணப்பட்டன. அண்மைய ஆண்டுகளில் தனியார் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை சார்பு ரீதியில் அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் சிறிதளவில் அதிகரித்து 191,812ஆக விளங்கிய வேளையில் தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களது எண்ணிக்கை இவ்வாண்டில் 6 சதவீதத்தால் அதிகரித்து 4,584ஆக விளங்கியது.

மாணவர்களுக்குக் கல்வியை வழங்கும் அதிக எண்ணிக்கையிலான பன்னாட்டுப் பாடசாலைகள் நாட்டிலுள்ளன. கடல்கடந்த நாடுகளின் கல்வித்தகைமைகளுக்குக்கேற்ப அவை மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றன. இதனால் தகைமை பெறும் மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதி தேடிக்கொள்வதை இவை இயலச் செய் கின்றன. இப் பாடசாலைகளினால் பேணப்படும் கல்வி சம்பந்தமான பெறுகைகள் அத்தகைய பாடசாலை களுக்கு பெற்றார்களின் உதவி கிடைக்கச் செய்வ தற்கான வழிகாட்டிகளாகக் காணப்படுவதனால் இவை முக்கியமாக சந்தையால் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள மாணவர்களைத் தக்கவைத்துக் கொள்ளுதல் மற்றும் புதிய மாணவர்களைக் கவருதல் ஆகியவற்றுக்கு பாடசாலைகளிடையே காணப்படும் போட்டியானது சந்தையில் தொடர்ந்தும் போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு தொழிற்பாடுகள் ஆசிரியர்களின் தகைமைகள், மற்றும் தரநியமங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்தும் மீளாய்வு செய்வதற்கு முகாமைச் சபைகளைத் தூண்டுவதாகக் காணப்படுகின்றது. பன்னாட்டுப் பாடசாலைகளுக்கான சந்தையை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு முறைமையொன்றை ஏற்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

கல்வியின் தரத்தையும் கல்விச் சீர்திருத்தங்களின் பயன்பாட்டையும் அதிகரிக்கச்செய்யும் நோக்கமாக பல்வேறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் 2002ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. பாடசாலை முகாமையை வலுப்படுத்துவதற்காக பாடசாலை அடிப்படையிலான முகாமையொன்றின் கீழ் பாடசாலைச் சபைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. வகுப்பறைக்குள்ளே ஏற்படுத்தப்படும் மாணவனின் செயலாற்றம் பற்றிய ஆசிரியர்களினதும் பெற்றாரினதும் புரிந்துணர்வினூடாக தரமான கல்வியை ஊக்குவிப்பதற்கென பாடசாலை அடிப்படையிலான மதிப்பீட்டு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு வலயத்தினுள்ளும் க.பொ.த (உ.த.) சீர்திருத்தங்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணிப்பதற்காக வலய கண்காணிப்புச் சபைகள் நிறுவப்பட்டன. மேலும், பிரபலமான பாடசாலைகளில் தரம் 1 இற்குப் பிள்ளைகளை அனுமதிப்பதில் ஏற்படும் கடும் போட்டியைக் குறைக்கும் நோக்குடன் புதிய மாதிரியான முதலாந்தரப் பாடசாலைச் செயற்றிட்டமொன்று 2002ஆம் ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்டது. இதேவேளை 381 பாடசாலைகள் "நவோதய" பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கென பிரதேச செயலக அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன.

கல்வித்தரத்தை முன்னேற்றுவதில் ஆசிரியரைப் பயிற்றுவித்தல் மிக முக்கியமானதாகும். 2002ஆம் ஆண்டளவில் பெரும்பாலும் பயிற்றப்படாத அனைத்து சிங்கள மொழி மூல ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைளில் பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், பரஸ்பரம் கற்றுக்கொள்ளும் செய்முறைகளினூடாக பாடங்களைக் கற்பித்தலை மேம்படுத்தும் நோக்குடன் ஆசிரியர் தரப்பட்டங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. இதன்படி, ஆசிரியர்கள் பிரதேச மற்றும் வலய மட்டங்களில் பாடக் குழுக்களாகக் கூடித் தமது பிரச்சனைகளைக் கலந்துரையாடவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஊக்குவிக்கப்பட்டனர்.

அரசின் அனுசரணையுடனான மாணவர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் 2002ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. பாடசாலைச் சீருடைகளுக்கான துணிவகைகள் ரூ. 999 மில்லியன் செலவில் 4 மில்லியன் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வேளையில் பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கியதில் அரசுக்கு மேலும் ரூ. 950 மில்லியன் கொண்ட செலவு ஏற்பட்டது. அத்துடன் திறமை வாய்ந்த மற்றும் சலுகையற்ற மாணவர்களின் நன்மை கருதி பல்வேறு புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களும் ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்களும் நடை முறைப்படுத்தப்பட்டன. இத்தகைய பரந்தளவிலான இலவச வசதிகள் தாக்குப் பிடிக்கக்கூடிய கல்வி முறை யொன்றின்மேம்பாட்டுக்கு மாறானதாகக் காணப் படுகின்றமை கடந்த கால அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. ஏனெனில் அவ்வாறான கொள்கைகள் ஒரு புறத்தில் உபயோகமற்றுப் போவதற்கும் மறுபுறத்தில் இம்முறையை முகாமைப்படுத்தும் அதிகாரவர்க்கத்தினரிடையே ஊழலுக்கும் இட்டுச்செல்வதே காரணமாகும். இதனால் இத்தகைய இலவச வசதிகளைப் பொருத்தமான இலக்குடனான உபாயமொன்றை மேற்கொள்வதன் மூலம் தகுதியுடைய மாணவர்களுக்கு மட்டுமே அவற்றைப் பெற்றுக்கொள்ளச் செய்வது முக்கியமானதாகும்.

2002ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியிடப்பட்ட பல்வேறு கல்விச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனத்தினால் நிதியிடப்பட்ட ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர்களைப் பதவியிலமர்த்தும் செயற்றிட்டம் இதில் ஒன்றாகும். இச் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆசிரியர் கல்வியைத் தரமுயர்த்தல், அலுவலர்கள் மற்றும் பாடசாலைகளின் முகாமையை வலுப்படுத்தல்

மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தரமுயர்த்தல் ஆகியனவாகும். பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனத்தினாலேயே நிதியிடப்பட்ட இரண்டாவது பொதுக்கல்விச் செயற்றிட்டமானது பாடவிதான அபிவிருத்தி, நூல்நிலையங்களை மேம்படுத்தல் மற்றும் வாசிக்கும் பழக்கத்தை அதிகரித்தல், பாடசாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், தரமான உள்ளீடுகளை வழங்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு 2002ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்ததோடு நிறைவடையும் தறுவாயிலுமுள்ளது. இரண்டாந்தரப் பாடசாலைக் கல்வித்தரத்தை அதிகரிப்பதற்காக 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாந்தரக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் ஐக்கிய இராச்சியத்திலுள்ள வெளிநாட்டு, பன்னாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நிதியிடப்பட்ட முதலாந்தரக் கணிதச் செயற்றிட்டம் மற்றும் முதலாந்தர ஆங்கில மொழிச் செயற்றிட்டமும், சேர்மனியினால் நிதியிடப்பட்ட அடிப்படைக்கல்வித்துறை நிகழ்ச்சித் திட்டமும், ஜப்பானின் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரால் நிதியிடப்பட்ட கனிஷ்ட பாடசாலை முன்னேற்றச் செயற்றிட்டமும் 2002ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன.

தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்துறையில் கிடைக்கக்கூடிய குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் சமூக வாய்ப்புக்களைக் கவனத்துக்கெடுக்கையில் நிறுவன ரீதியான ஆதரவு வழங்கப்படுவதனூடாக இத் துறையில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு அரசு முதன்மையான சலுகையை வழங்கியது. மாணவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார மற்றும் சமூகச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அதிகரித்த

**அட்டவணை 5.4**

**பொது மற்றும் பல்கலைக் கழகக் கல்வி**

| வியடம் | 2000 (எண்ணிக்கை) | 2001 (எண்ணிக்கை) | 2002(அ) (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| **பொதுக் கல்வி** | | | |
| 1. மொத்தப் பள்ளிக்கூடங்கள் | 10,615 | 10,552 | 10,505 |
| 1.1 அரச பள்ளிக்கூடங்கள்(ஆ) | 9,976 | 9,891 | 9,826 |
| தேசிய பள்ளிக்கூடங்கள் | 317 | 320 | 323 |
| 1.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | 639 | 661 | 679 |
| தனியார் | 78 | 78 | 80 |
| பிரிவேனா | 561 | 583 | 599 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) | 4,340,412 | 4,337,258 | 4,178,118 |
| 2.1 அரச பள்ளிக்கூடங்கள் | 4,193,908 | 4,187,146 | 4,026,233 |
| 2.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | 146,504 | 150,112 | 151,885 |
| தனியார் | 95,383 | 97,206 | 96,917 |
| பிரிவேனா | 51,121 | 52,906 | 54,968 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | 332,892 | 330,316 | 325,667 |
| 4. ஆசிரியர்கள் எண்ணிக்கை | 194,773 | 198,397 | 201,235 |
| 4.1 அரச ஆசிரியர்கள் | 186,097 | 189,485 | 191812(இ) |
| 4.2 ஏனையவர்கள் | 8,676 | 8,912 | 9,423 |
| 5. மாணவர்கள்/ஆசிரியர்கள் விகிதம் (அரச பள்ளிக்கூடம்) | 22 | 22 | 21 |
| 6. கல்விக்கான மொத்தச் செலவினம் (ரூபா மில்லியன்) (ஈ) | 30,929 | 28,286 | 37,209 |
| 6.1 நடைமுறை | 23,794 | 23,448 | 31,161 |
| 6.2 மூலதன | 7,135 | 4,835 | 6,048 |
| **பல்கலைக்கழகக் கல்வி** | | | |
| 1. பல்கலைக் கழகங்கள் (எண்ணிக்கை) | 13 | 13 | 13 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) (உ) | 48,296 | 48,212 | 48,666 |
| 3. விரிவுரையாளர்கள் (எண்ணிக்கை) (ஊ) | 3,241 | 3,268 | 3,390 |
| 4. பட்டதாரிகள் (எண்ணிக்கை) | 9,374 | 8,896 | வி.கி |
| 4.1 கலைகளும் கீழைத்தேச கற்கைகளும் | 3,656 | 3,256 | வி.கி |
| 4.2 வர்த்தக, முகாமைத்துவக் கற்கைகள் | 2,448 | 2,367 | வி.கி |
| 4.3 சட்டம் | 173 | 182 | வி.கி. |
| 4.4 விஞ்ஞானம் | 1,264 | 1,052 | வி.கி |
| 4.5 பொறியியல் | 548 | 653 | வி.கி. |
| 4.6 மருத்துவம் | 904 | 801 | வி.கி |
| 4.7 பல் வைத்தியம் | 77 | 71 | வி.கி |
| 4.8 விவசாயம் | 249 | 365 | வி.கி |
| 4.9 மிருக வைத்தியம் | 0 | 70 | வி.கி |
| 4.10 கட்டடக் கலை | 37 | 79 | வி.கி |
| 4.11 கணிய அளவீடு | 18 | | |
| 5. அடிப்படைப் பட்டப் படிப்புகளுக்கு புதிதாக | 11805 | 11,962 | 12,144 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இயங்காமல் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த.
(இ) தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் அரச தவிர்ந்தஏனைய நிறுவனங்களால் கொடுப்பனவு பெறும் ஆசிரியர்கள் உட்பட
(ஈ) உயர் கல்விக்கான அரச செலவினத்தையும் உள்ளடக்கும்.
(உ) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த
(ஊ) ஆண்டின் தொடக்கத்தில்

மூலங்கள்: மனிதவள அபிவிருத்தி அமைச்சு
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு.
இலங்கை மத்திய வங்கி.

அளவில் கணனி அறிவைப்பெற்றிருக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதனோடு இணைந்த வகையில் பாடசாலைக் கல்வியில் தகவல் தொழில்நுட்பத்துக்கான தேசியக் கொள்கையொன்று 2002ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பாடசாலை மட்டத்தில் கணனிக் கல்வியை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2002ஆம் ஆண்டின் இறுதியளவில் 220 கணனி பயிலும் நிலையங்களும் அடையாளங் காணப்பட்ட பாடசாலைகளில் 700 பல்லூடக அறைகளும் நிறுவப்பட்டனவெனினும் இது மொத்தப் பாடசாலைகளில் 10 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் நாடாளவிய ரீதியில் மொத்தமாக 7.2 கணனி மூலவள நிலையங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தகவல் தொழில்நுட்பத்தை 12ஆந்தர மாணவர்களுக்கான பொதுப் பாடமொன்றாக அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்ட வேளையில் மாகாண ரீதியிலான 8 மாகாண தகவல் தொழில் நுட்ப நிலையங்கள் நிறுவப்பட்டன. தொழில்நுட்ப பாடங்களின் கற்பித்தலை முன்னேற்றுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளிலுள்ள 6,400 ஆசிரியர்கள் 2002ஆம் ஆண்டில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

கஷ்டப் பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்கும் விதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதிகள் வழங்கப்படும் போது பின்தங்கிய பகுதிகளிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிக வாய்ப்புக்கள் வழங்குவதெனத் தீர்மானிக் கப்பட்டது. அத்தோடு பாடசாலைகளுக்கிடையில் ஒழுங்கு முறைப்படியான ஆசிரியர் பரிமாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்வதெனவும், கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. எனினும், பாடசாலைகளின் சீரான தொழிற்பாட்டுக்கு ஆசிரியர் இடமாற்றங்களைப் பொறுத்தவரையில் உறுதியானதும் பாரபட்ச மற்றதுமான தேசியக் கொள்கையொன்று தேவையானதாகும்.

உயர் கல்வியை உள்ளடக்கி கல்வி மீதான மொத்த அரச செலவினம் 2002ஆம் ஆண்டில் ரூ. 37,209 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டை விட 32 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினம் 2001ஆம் ஆண்டின் 2.0 சதவீதத்துடனொப்பிடுகையில் 2.4ஆகக் காணப்பட்டது. 1996/97 நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டின் படி, கல்வி மீதான மொத்தத் தனியார் செலவினம் 1996/97 விலைகளில் ரூ.10,552 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**உயர் கல்வி**

திறந்த பல்கலைக்கழகம் உட்பட தேசிய பல்கலைக்கழகங்களின் மொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டின் இறுதியில் 13ஆக விளங்கியது. இப் பல்கலைக்கழகம் தவிர்ந்த பல்வேறு கற்கை நெறிகளுக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் சிறிதளவில் அதிகரித்து 48,666ஆக விளங்கியது. திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த புதிய பல்கலைக் கழகங்களுக்கான அனுமதிகள் 2 சதவீதத்தால் விரிவடைந்து 2002ஆம் ஆண்டில் 12,144ஆக விளங்கின. எனினும், பல்கலைக்கழகமொன்றுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான ஆகக்குறைந்த தேவைப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 13 சதவீத மாணவர்கள் மட்டுமே 2002ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மொன்றில் இடத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது. 2002ஆம் ஆண்டில் மொத்தமாக 208,503 மாணவர்கள் க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றியிருந்துடன் அவர்களில் 44 சதவீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றனர்.

பாடவிதான அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல், தரத்தின் உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரம் ஒன்றுபட்ட திட்டமிடல் மற்றும் சட்டமியற்றல் தொடர்பான தேவைப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்கலைக்கழகக் கல்விச் சீர்திருத்தங்கள் 2002ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் தொடர்பான நடவடிக்கைகள், சுய அபிவிருத்தி நடவடிக்கைகள், உயர் கல்வியை அதிகரித்த அளவில் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பட்டப்பின்படிப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியவற்றில் கூடுதலான கவனஞ் செலுத்தப்பட்டது.

பட்டப்படிப்பினை வழங்கக்கூடிய தகுதியைப் பெற்ற பல்வேறு தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் பட்டதாரி/ டிப்ளோமா மற்றும் பட்டப் பின் படிப்புக் கற்கை நெறிகளுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொண்டன. இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தில் 1,065 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்படிப்பு/டிப்ளோமா மற்றும் பட்டப்பின்படிப்புக் கற்கைநெறிகளைத் தொடர்வதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். திறந்த பல்கலைக் கழகத்துக்கான புதிய அனுமதிகள் 9,523 ஆக விளங்கி 2001 ஆம் ஆண்டை விட 9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. திறந்த பல்கலைக்கழகத்தில் பல்வேறு கற்கைநெறிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 20,995ஆகக் காணப்பட்டிருந்தது. கல்வி, முகாமை, சட்டம், சமூக அறிவியல், கைத்தொழிற் பொறியியல் கட்டடவாக்க முகாமை, பொறியியல் தொழில்நுட்பம், இயற்கை அறிவியல் மற்றும் தாதிப் பயிற்சிநெறி ஆகிய பல்வேறு பயிற்சிகளில் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் 2002ஆம் ஆண்டில் திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து பட்டதாரிகளாயிருந்தனர்.

உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் போதிய அளவில் காணப்படாமையானது பல வகைப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளை உருவாக்குவதுடன் நாட்டிலுள்ள இளைஞரிடையே சமூக அமைதியின்மை ஏற்படுவதற்கும் வழிவகுக்கக்கூடியதாகக் காணப்படுகிறது. இரண்டாந்தரக்கல்வியில் சார்பு ரீதியில் அதிகளவில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதலானது, பெரும்பாலும் அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் கிடைக்கக்கூடியதாயிருக்கும் மிக மட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்கு கடுமையான அழுத்தத்தைக் கொடுக்கின்றன. நாட்டில் மூன்றாந் தரக் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவடையச் செய்வதற்கும் போதியளவு நிதி அரசிடம்

காணப்படாதவிடத்து, உயர் கல்விக்கான வாய்ப்புக்களை வழங்குவதில் தனியார்துறை முன்னணி வகிப்பது தற்போது தவிர்க்க முடியாததொன்றாகியுள்ளது. எனவே ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட வரைச்சட்டத்துக்கான அங்கீகாரம், கண்காணிப்பு மற்றும் மீள நிறுவுகை ஆகியனவே இதற்குத் தேவைப்படுபவையாகும். இந்நாட்டுக்குள்ளேயே போதிய வாய்ப்புக்கள் காணப்படாமையினால் மிக அதிகமான செலவில் கடல் கடந்த நாடுகளில் பல வகையான பாடநெறிகளைப் பயில்வதற்காக 2002ஆம் ஆண்டில் கல்வி நோக்கங்களுக்கான வெளிநோக்கிய வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப்பல்கள் ஏறக்குறைய ஐ.அ.டொலர் 16 மில்லியனாகக் காணப்பட்டன.

1990களின் பிற்பகுதியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வியில் உலகளாவிய முன்னேற்றமொன்று காணப்பட்டமையின் காரணமாக பொருளியல், முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி ஆகிய வற்றில் முன்னேற்றமடைந்த தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினூடாக பட்டதாரி மாணவர்களின் கற்கை நெறிகளை தொலைவிலிருந்து வழங்கக்கூடியதாகக் காணப்பட்டது. இது செலவு குறைந்ததும் சரளமான உபயோகம் மற்றும் உலகளாவிய நிலையில் விரிந்தநேர்சந்திப்பாக வைத்திருக்கக்கூடிய திறமை ஆகியன அமைந்துள்ள படியால், மேற்கு நாடுகளிலுள்ள பிரபல்யம் பெற்ற பல பல்கலைக்கழகங்கள் குறிப்பாக அ.ஐ.நாடுகள் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியன இத்தெரிவை மேற்கொண்டுள்ளன. அத்துடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்ரேலியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள், வெளிச்சந்தைகளை விரிவடையச் செய்யும் நோக்குடன் விருத்தியடையும் மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளிலுள்ள உள்நாட்டு நிறுவனங்களுடன் முன்னேற்றப் போக்கான அங்கீகாரத்தை ஆரம்பித்தன. இதனால், மரபு ரீதியான முறையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்டி பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கச் செய்தலானது, உயர்கல்வியை விரும்பும் மாணவர்களுக்கு அதனை வழங்கும் முறையாக மட்டும் இது இனிமேல் இருக்கப் போவதில்லை. இவ் விருப்பத்தெரிவினை இலங்கை முக்கியமாக ஆராய வேண்டியுள்ளது. இலங்கையானது உயர்கல்வி பெறத் தகுதியுடைய அனைவருக்கும் உயர்கல்விக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு கடுமையான குறைபாட்டை எதிர்நோக்கியுள்ளது.

தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கான அதிகரித்துச்செல்லும் உலகளாவிய கேள்வியினாலும், இத்துறையில் தொழில்வாய்ப்பை அதிகரிக்கச் செய்வதற்காக சிறந்த பலாபலன்களினாலும் நாட்டில் தகவல் தொழில்நுட்பக்கல்விக்கான கேள்வி விரைவாக அதிகரித்துச் செல்கின்றது. பல பல்கலைக்கழகங்கள் டிப்ளோமா, பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்புக்களுக்கு இட்டுச் செல்லும் வகையில் கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகளை ஆரம்பித்துள்ளன. மொறட்டுவ பல்கலைக்கழகம் தகவல் தொழில்நுட்பத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்துள்ள வேளையில், கொழும்புப் பல்கலைக்கழகம் இயங்கிக் கொண்டிருந்த கணனித் தொழில்நுட்ப நிறுவனத்தை கணனிப் பாடசாலை என மீறல் பெயரிட்டு 2002 ஆம் ஆண்டில் நிறுவியது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் படி, திறந்த பல்கலைக்கழகம் தவிர, தகவல் தொழில் நுட்பம் அல்லது கணனி அறிவியல் பட்டப் படிப்புக்களைத் தொடர்வதற்காக மொத்தமாக 106 மாணவர்கள் 2002 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை விருத்தி செய்வதற்காக ரூ.200 மில்லியன் கொண்ட தொகையொன்று ஒதுக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொடர்பூட்டல் உட்கட்டமைப்பு முன்னேற்ற மடைந்ததனால் மின்கற்கை அல்லது இணைய அடிப்படையிலான கற்கை முறைகள் மற்றும் தூரக் கற்கை முறைகள் ஆகியன அறிவை வழங்கும் மாதிரிகளாக அமையும்.

## தொழில் நுட்பக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சியானது இது தொழில் அடிப்படையிலான பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி ஆகியவற்றினைக் கொண்டிருந்தது. பொது மற்றும் பல்கலைக்கழகக் கல்வியில் இருப்பதுபோல தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சித்துறைக்கு 1997ஆம் ஆண்டில் விரிவான அடிப்படையிலான சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆலோசனை வழங்கப்பட்ட சீர்திருத்தங்களுக்கு இசைவாக அரச மற்றும் தனியார்துறைப் பயிற்சி நிறுவனங்களில் தரம் மற்றும் பயிற்சியின் பொருத்தப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பல்கலைக் கழக மட்டத்திலான தகைமைகளுக்கு மணவர்களைத் தயார் செய்யும் நோக்குடன் தொழில் நுட்பக்கல்வி நிறுவனமொன்றை நிறுவுவதற்காக உதவி வழங்கும் பன்னாட்டு முகவர் நிலையங்களிடமிருந்து தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மூன்றாந்தர மற்றும் தொழிற் பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவானது, கொள்கை உருவாக்குதல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையினை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றுக்கான உச்ச அமைப்பாக விளங்குகின்றது. தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், முன்னேற்றமடைந்த இலங்கை தேசிய தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் போன்ற அதிக எண்ணிக்கையிலான அரசதுறை நிறுவனங்கள் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 2002ஆம் ஆண்டில் பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு விடயங்களிலும் தொடர்ச்சியாக நடத்தின.

தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களமானது அரசதுறையில் தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சியை வழங்கும் முக்கிய நிறுவனமாகக் காணப்படுவதுடன் நாடு முழுவதிலும் அமைந்துள்ள 36 தொழில்நுட்பக்கல்லூரிகளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் கற்கை நெறிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 17,622ஆகக் காணப்பட்டது. முன்னேற்ற

மடைந்த இலங்கைத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம், கணக்கீடு, வேளாண்மை, வர்த்தகம் மற்றும் வணிகக் கற்கைகள் ஆகியவற்றில் உயர் மற்றும் தேசியமட்ட டிப்புளோமா கற்கைநெறிகளை 11 கல்லூரிகளில் நடத்தியதுடன், 2002ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் தொகை 5,094 ஆகக் காணப்பட்டது. தொழிற்பயிற்சி அதிகாரசபை இவ்வாண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள 230 பயிற்சி நிலையங்களினூடாக கிராமப் பகுதிகளில் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 25,290 மாணவர்களுக்கு நடத்தியது. தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆசிரியர் பயிற்சி மற்றும் பாடவிதான அபிவிருத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளதுடன் 1,306 ஆசிரியர்களுக்கும் மற்றும் போதனாசிரியர்களுக்குமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்தரங்குகளையும் 2002ஆம் ஆண்டில் நடத்தியது. அதே வேளையில், தேசிய தொழிற் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையானது, தொழில்நுட்பவியலாளர் மற்றும் கைத்திறன் மட்டத்தில் நிறுவன அடிப்படையிலான தொழிற்பயிற்சியினூடாக 180 கற்கை நெறிகளை 16,652 மாணவர்களுக்கு வழங்கியது.

## 5.4 தொடர்பூட்டல் பணிகள்

### தொலைத்தொடர்பூட்டல்

வாடிக்கையாளர் வலையமைப்பு, நவீன மயப்படுத்தல், தனியார்துறையின் பங்கேற்பு மற்றும் நிறுவனரீதியான சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் நியதிகளில் தொலைத்தொடர்பூட்டல் துறையானது கடந்த பத்தாண்டுகளில் முக்கிய மாற்றங்களைக் கொண்டு விளங்கியிருந்தது. செலுலர் என அழைக்கப்படும் கையடக்கத் தொலைபேசிப் பணிகளில் மிக அதிகமான வளர்ச்சி காணப்பட்டதுடன் நிலையான தொலைபேசி இணைப்புக்கள், 1992 இல் இருந்து ஆறு மடங்குக்குக்கும் அதிகமாக வளர்ச்சியடைந்தன. தனியார் துறையின் பங்கேற்புடன் பெறுமதி கூட்டப்பட்ட பணிகள் பலவும் அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய தொடர்பூட்டல் கொள்கை மற்றும் அதிகளவில் தாராளமயமாக்கப்பட்ட சுற்றாடல் ஆகியன இடம் பெற்றிருப்பதால் தொலைத்தொடர்பூட்டல்துறை எதிர்வரும் ஆண்டுகளில் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பன்னாட்டு குரல் பணிகளுக்கும், கம்பி வழித் தொழிற்பாடுகளுக்கும் வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் அனுபவித்த தனியுரிமை நிலையானது 2002ஆம் ஆண்டு ஓகத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையுடன் முழு தொலைத் தொடர்பூட்டல் துறையும் தற்போது போட்டியை எதிர்நோக்கியுள்ளது. அதே சமயத்தில், இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக் குழுவானது போட்டித் தன்மையை அதிகரித்தல் மற்றும் ஒழுங்கு விதிகளை வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக புதிய தொலைத்தொடர்பூட்டல் கொள்கையொன்றை முன்கொண்டு வந்துள்ளது. நிலையான தொலைபேசி இணைப்புப் பணிகள் தற்போது சிறீலங்கா ரெலிகொம்மினால் மட்டுமே வழங்கப்படும் வேளையில், இரு தனியார் துறைத் தொழிற்பாட்டாளர்கள் நிலையான கம்பியில்லாத் தொலைபேசிப் பணிகளை வழங்குவதற்காக உரிமம் பெற்றுள்ளனர். அதேவேளையில் நடமாடும் செலுலர் தொலைபேசிப் பணிகளை வழங்குவதற்காக நான்கு தனியார் கம்பனிகள் உரிமம் பெற்றுள்ளன. மேலதிகமாக வெளி வழித் தொழிற்பாட்டாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேரத்தில், நியாயமான தீர்வை முறையொன்றை நிறுவும் நோக்குடன் 2003ஆம் ஆண்டு யூலையிலிருந்து அழைப்பை மேற்கொள்ளும் ஆட்கள் பணத்தைச் செலுத்தும் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கான தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. விரிவடைந்து செல்லும் போட்டியின் காரணமாக தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பின் தரம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அழைப்பை முடிக்கும் வீதம் அதிகரிக்கும் வேளையில் தவறுகைக்கான வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

நிலையான தொலைபேசிப் பணிகளின் வளர்ச்சி அண்மை ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கியமாக, பாரிய விரிவாக்கச் செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமையே காரணமாகும். கம்பியில்லா உள்நாட்டுத் தொலைபேசிப் பணிகளுக்கான வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கை கடந்த இரண்டாண்டுகளாக வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப் பட்டுள்ளது. இதற்கு சில நுகர்வோர் ஏனைய தொலைத்தொடர்பூட்டல் பணிகளுக்கு மாறியமையே முக்கிய காரணமாகும். ஒப்பிடுகையில் இடம் பெயரும் செலுலர் தொலைத்தொடர்பூட்டல் பணி அண்மைய ஆண்டுகளில் மிக விரைவாக வளர்ச்சியடைந்தது. நிலையான தொலைபேசி வலையமைப்பு 7 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தவேளையில் தொலைபேசி வலையமைப்பு 2002ஆம் ஆண்டில் 36 சதவீதத்தால் விரிவடைந்தது. செலுலர் தொழில்நுட்பத்தில் காணப்பட்ட முன்னேற்றம், கடுமையான போட்டி, தாக்குப் பிடிக்கக் கூடிய ஆரம்பச் செலவு, விரைவான வழங்கல் மற்றும் உள்ளடக்கத்திலான விரிவு ஆகியன இத்துறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கான முக்கிய காரணங்களாகும். இதன் விளைவாக, செலுலர் போன்களை உள்ளடக்கி தொலைபேசி அடர்த்தி, (100 ஆட்களுக்கான தொலைபேசி) 2001ஆம் ஆண்டின் 8 இலிருந்து 2002ஆம் ஆண்டில் 9.5க்கு அதிகரித்ததுடன் நிலையான தொலைபேசிகளுக்கான இடம் பெயரும் தொலைபேசிகளின் விகிதம் 2001ஆம் ஆண்டின் 81இலிருந்து 2002ஆம் ஆண்டில் 103க்கு அதிகரித்தது. இணையம்/ மின்னஞ்சல் பணிகளும் விரைவாக வளர்ச்சியடைகின்றன. 29 தொழிற்பாட்டாளர்களினால் வழங்கப்பட்ட இணைய மற்றும் மின்னஞ்சல் பணிகளுக்கான வாடிக்கையாளர் தொகை 2002இல் 14 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளையில், பணஞ் செலுத்தும் பொதுத்தொலைபேசிக் கூடுகளின் எண்ணிக்கை மற்றும் வானொலி பேஜிங் பணிகளுக்கான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தது.

சிறீலங்கா ரெலிகொம்மின் வாடிக்கையாளர் தளமானது, 69,258 வாடிக்கையாளர்களை வலையமைப்புக்குச் சேர்த்துக் கொள்வதன் மூலம் 9 சதவீதத்தால் அதிகரித்து 758,620 ஆக விளங்கியது. சிறீலங்கா ரெலிகொம்மினால் வழங்கப்பட்ட நிலையான தொலைபேசி இணைப்புக்களுக்கான கேள்வி கொழும்பு

## அட்டவணை 5.5
## அஞ்சல் தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

| விடயம் | 2000 | 2001 | 2002(அ) | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2001 | 2002(அ) |
| 1. தொலைத் தொடர்பூட்டல் பணிகள; | | | | | |
| 1.1 நிலையான இணைப்புக்கள் | | | | | |
| வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் | | | | | |
| தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 653,144 | 708,200 | 768,620 | 8 | 9 |
| வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 90,647 | 77,535 | 69,258 | -14 | -11 |
| இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் (எண்ணிக்கை) | 248,486 | 257,707 | 306,268 | 4 | 19 |
| கம்பி இல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 2 | 2 | 2 | 0 | 0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 114,267 | 121,082 | 114,488 | 6 | -5 |
| தொலைபேசி பரம்பல்கள்(தொலைபேசி தலா 100 பேருக்கு) | 4.2 | 4.4 | 4.7 | 5. | 7 |
| 1.2 ஏனைய பணிகள் | | | | | |
| செலூலர் தொலைபேசிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 4 | 0 | 0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 430,202 | 667,662 | 907,422 | 55 | 36 |
| பொதுப் பே போன் தொலைபேசிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 6 | 6 | 6 | 0 | 0 |
| தொலைபேசி கூண்டு (எண்ணிக்கை) | 8,222 | 7,281 | 6,681 | -11 | -8 |
| வானொலி பேஜிங் பணிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 4 | 0 | 0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 7,009 | 6,535 | 5,516 | -7 | -16 |
| இணையமும் மின்னஞ்சலும் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 21 | 27 | 29 | 29 | 7 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 40,497 | 61,532 | 70,082 | 52 | 14 |
| 2. அஞ்சல் பணிகள் | | | | | |
| அஞ்சல் வழங்கும் பரப்புக்கள் (எண்ணிக்கை) | 6,729 | 6,729 | 6,729 | 0 | 0 |
| அஞ்சல் நிலையங்கள் (எண்ணிக்கை) | 4,488 | 4,556 | 4,616 | 2 | 1 |
| அரசு | 4,049 | 4,042 | 4,046 | 0 | 0 |
| பிரதான அஞ்சல் அலுவலகங்கள் | 597 | 602 | 614 | 1 | 2 |
| உப அஞ்சல் அலுவலகங்கள் | 3,452 | 3,440 | 3,432 | 0 | 0 |
| தனியார் | 439 | 514 | 570 | 17 | 11 |
| முகவர் அஞ்சல் அலவலகங்கள் | 316 | 360 | 379 | 14 | 5 |
| கிராமிய முகவர் | 113 | 144 | 156 | 27 | 8 |
| பெருந்தோட்ட முகவர் | 10 | 10 | 35 | 0 | 250 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட பரப்பு (சதுர கி.மீற்றர்) | 14.6 | 14.4 | 14.2 | -1 | -1 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | 4,243 | 4,103 | 4,102 | -3 | 0 |
| குடியிருப்பாளர் ஒருவருக்குக் கிடைக்கும் கடிதங்கள் | 25 | 26 | 25 | 4 | -4 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: அஞ்சல் திணைக்களம்.
வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம்.
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

பெருநகரப் பகுதிக்கு வெளியே விரைவாக அதிகரித்து வழங்கலிலேற்பட்ட சமமின்மையைக் குறைத்தது. கொழும்பு பெருநகரப் பகுதியில் பணியிலிருந்த சிறீலங்கா ரெலிகொம் தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 7 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் மற்றைய பிரதேசங்களில் அது 9 சதவீதத்தால் அதிகரித்தது. 2002ஆம் ஆண்டின் இறுதியில் சிறீலங்கா ரெலிகொம்மின் தொலைபேசி வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 45 சதவீதமானவை கொழும்பு பெருநகரப்பகுதியிலேயே அமைந்திருந்தன. நிலையான தொலைபேசிகளுக்கான தேசிய தொலைபேசி அடர்த்தி (100 ஆட்களுக்கான தொலைபேசிகள்) 2002ஆம் ஆண்டின் இறுதியில் 4.7 ஆக விளங்கியது.

2002ஆம் ஆண்டில் சிறீலங்கா ரெலிகொம் கடத்தல் வலையமைப்பு விசை ஆழி இயலளவு மற்றும் வெளிப்பொறி இயலளவு வலயமைப்பு ஆகியவற்றை விரிவடையச்செய்து பல்வேறு வலையமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தியது. நாட்டின் அநேகமான பகுதிகளை உள்ளடக்கி 2002ஆம் ஆண்டின் இறுதியில் நான்கு கண்ணாடி இழை வளையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சிறீலங்கா ரெலிகொம், சமச்சீரற்ற இலக்க வாடிக்கையாளர் இணைப்பு எஸ். எல். ரி. பாஸ்போட் மற்றும் குளோப் லிங்க் போன்ற புதிய ஐ.டி.டி. உற்பத்திகள் ஆகிய புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட பணிகளை அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இணையத்தள ஒழுங்குமுறைகள் இணையத் தனியார்துறை வலையமைப்பு இணையத் தரவு நிலையம், இணையப் பரிவர்த்தனை நிலையம் ஆகியன விரைவில் அறிமுகப் படுத்தப்படவுள்ளன. அதேவேளையில், கடல்கடந்த தொலைத் தொடர்பூட்டல் பணிகள் 2002ஆம்

ஆண்டில் மேலும் விரிவடைந்தன. ஐ.டி.டி. வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கை 27 சதவீதத்தால் அதிகரித்தது. வெளிச்செல்லும் போக்குவரத்து ஏறக்குறைய அதே மட்டத்தில் காணப்படும் வேளையில், உள்வரும் போக்குவரத்து 19 சதவீதத்தால் அதிகரித்தது. சிறீலங்கா ரெலிகொம்மின் பன்னாட்டுச் சுற்றுக்கள் 2002ஆம் ஆண்டில் 82 சதவீதத்தால் உயர்த்தப்பட்டு 5,858ஆக விளங்கின.

**வரைபடம் 5.2**
**தொலைபேசி அடர்த்தி**
(ஒவ்வொரு 100 ஆளுக்கும் தொலைபேசி)




சிறீலங்கா ரெலிகொம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றாக விளங்கியதுடன், 2002ஆம் ஆண்டு நவெம்பர் 28இல் பூர்த்தி செய்யப்பட்ட ஆரம்பப்பொது வழங்கலில் 12 சதவீதமான பங்கு மூலதனத்தை (216.6 மில்லியன் பங்குகள்) வழங்கியிருந்தது. இதுவே, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வழங்கப்பட்ட ஆகக்கூடிய ஆரம்பப் பொது வழங்கலாகும்.

2002ஆம் ஆண்டில் சிறீலங்கா ரெலிகொம் தனது தீர்வை மீளச்சமப்படுத்தல் செய்முறையைத் தொடர்ந்தும் மேற்கொண்டு அதிகளவிலான பயன்பாட்டாளருக்கும் மற்றும் பன்னாட்டு அழைப்பாளர்களுக்கும் சார்புரீதியில் அதிகமாகக் காணப்பட்ட செலவினைக் குறைத்தது. இதன்படி, உள்நாட்டு அழைப்புக் கட்டணங்கள் 15 சதவீதங் கொண்ட சராசரி வீதமொன்றால் உயர்த்தப்பட்ட வேளையில் வெளிநாட்டு நேரடி அழைப்புக்கட்டணங்கள் 2002ஆம் ஆண்டு மேயிலிருந்து ஏறக்குறைய 8 சதவீதத்தால் குறைக்கப்பட்டன.

## அஞ்சல் பணிகள்

அஞ்சல் பணியானது, முக்கியமான சமூக மற்றும் பொருளாதார தொழிற்பாடுகளை மேற்கொள்வதனால், நவீன உட்கட்டமைப்பில் நம்பிக்கையானதும் பயன்தரக் கூடியதுமான அஞ்சல் முறையொன்று மிக முக்கியமான கூறாகக் காணப்படுகிறது. அஞ்சல் உட்கட்டமைப்பு நாட்டிலுள்ள பணி வழங்கல் முறையின் மிகப்பெரும் வலையமைப்புக்களில் ஒன்றைப் பிரதிபலிக்கின்ற தெனினும் இது பெருமளவுக்கு குறைப்பயன் பாடுடையதாகவே காணப்படுகின்றது. வேகமாக வளர்ச்சியடைந்து செல்லும் தகவல் தொழில்நுட்பம், தொடர்புட்டல் பணிகளுக்காக விரைவில் மாற்றமடையும் கேள்வி, பொருளாதாரத்தின் வேறு விடயங்களில் நிறுவனரீதியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் மிகவும் முக்கியமாக சந்தைகளைத் தாராளமயப்படுத்துதல் ஆகியன அஞ்சல் பணிகளில் மாற்றத்தினை மிக உறுதியாக வேண்டி நிற்கின்றன. எனவே, அஞ்சல் அலுவலகங்கள் தமது உற்பத்திகளைப் பன்முகப்படுத்த வேண்டியிருப்பதுடன் நீண்டகாலத்துக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய பணியினைக் கருத்திற் கொண்டு புதிய முறையிலான பணிகளைப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். அஞ்சற் பணியானது நிதியியற் பணிகள், மின்னியற் பண மாற்றுக்கள் காப்புறுதி மற்றும் ஓய்வூதியம் தொடர்பான பணிகள், பயன்பாட்டு உண்டியல் கொடுப்பனவுகள், மின்- அரச பணிகள் (கடவுச்சீட்டு, உரிமப்பத்திரங்கள், பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்கள்) மின் வர்த்தகத்தோடு தொடர்புடைய தகவல் ஆய்வு, தரவு வங்கித் தொழில் ஆகியன போன்ற நடவடிக்கைகள் போன்ற புதிய பணிகளை வழங்க முடியும். இதனைப் பொறுத்தவரையில் பரந்த அடிப்படையிலான நிறுவனரீதியிலான சீர்திருத்தங்கள் மற்றும் பணி நவீன மயப்படுத்தல் ஆகியவற்றை அமைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

அஞ்சல் அலுவலக வலையமைப்பு, அரச உடமையான 4,046 அஞ்சல் அலுவலகங்களையும் 570 தனியார் அஞ்சல் அலுவலகங்களையும் உள்ளடக்கி 2002ஆம் ஆண்டில் சிறிதளவான விரிவொன்றினைப் பிரதிபலித்தது. இவ் வலையமைப்பு மாதிரி அஞ்சல் அலுவலகங்களாக 1999இல் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட அஞ்சல் கடைகளை உள்ளடக்கும். அஞ்சல் அலுவலகமொன்றின் பணிக்குட்படுத்தப்பட்ட சராசரி நிலப்பரப்பு 2002ஆம் ஆண்டில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து 14.2 சதுர சதுர கிலோமீட்டர்களாக விளங்கிய வேளையில் அஞ்சல் அலுவலகமொன்றின் பணியினைப் பெற்ற மக்கள் தொகையும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து 4,102ஆக விளங்கியது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அஞ்சல் விடயங்களின் கையாளுகை 2002ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட இந் நாட்டில் வசிக்கும் ஒருவருக்கான கடிதங்களின் சராசரி எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து 25 ஆக விளங்கியது.

அஞ்சல் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட பணிகள் 2002ஆம் ஆண்டில் மேலும் விரிவடைந்தன. 2002ஆம் ஆண்டின் இறுதியில் 14 அஞ்சல் அலுவலகங்கள் மின்னஞ்சல் வசதிகளுடனும் 40 அஞ்சல் அலுவலகங்கள் மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகளுடனும் காணப்பட்டிருந்தன. தொலைபேசி மற்றும் தந்தி வசதிகளை வழங்கும் தொலை அஞ்சல் பணி அனைத்து துணை அஞ்சல் அலுவலகங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. பன்னாட்டு கடுகதி அஞ்சல் பணி மற்றும் உள்நாட்டு விரைவு அஞ்சல் பணி ஆகியனவும் தொடர்ந்து விரிவடைந்தன.

அஞ்சல் திணைக்களம் தொடர்ந்தும் இழப்புக்களைப் பெற்றது. அஞ்சல் திணைக்களத்தின் மொத்த வருவாய் 16 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 2,125 மில்லியனாக விளங்கியமைக்கு 2002ஆம் ஆண்டில் அஞ்சல் கட்டணங்களிலேற்பட்ட அதிகரிப்பே முக்கியமான காரணமாகும். அஞ்சல் திணைக்களத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவு ரூ 2819 மில்லியனுக்கு 9 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் விளைவாக,

அரசினால் ஆதரவு வழங்கப்பட்ட அதன் தொழிற்பாட்டு இழப்பு ரூ. 694 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது செலவை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான முயற்சிகளையும் இறை அதிகரிக்கும் உத்தியையும் தெளிவாக வேண்டிநிற்கிறது.

## 5.5 வலு

2002ஆம் ஆண்டில் வர்த்தக வலுத்துறை, நடைமுறையிலுள்ள செயற்திறனின்மை, வழங்கல் பற்றாக்குறைகள், ஒழுங்கு முறைப்படுத்தப்படாத விலையிடற் கொள்கைகள் ஆகியவற்றைக் கவனத்திலெடுத்து வலுவுக்கான போட்டிச் சந்தையொன்றை உருவாக்குதற்காக இலக்காகக் கொண்டுள்ள சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர்காலத்தில் நிலையானதும் நம்பிக்கையானதுமான வலு வழங்கலினை உறுதிப்படுத்தும் நோக்குடன் நாட்டின் வலுத்துறையினை மீளமைப்புச் செய்வதற்காக 2002ஆம் ஆண்டில் புதிய மின்வலுச் சீர்திருத்தச் சட்டமொன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இச் சீர்திருத்தங்களின் கீழ் இலங்கை மின்சபையின் முக்கியமான நடவடிக்கைகள் பிரிக்கப்படும் வேளையில் இது தனியார்துறை குறிப்பாக வலு உருவாக்கம் மற்றும் வழங்கல் விடயங்களில் மிக அதிகளவில் பங்கேற்பதற்கான வழியையும் வகுக்கும். அதேவேளையில் தற்போது நிலவும் வலு பற்றாக்குறைகளுக்கு உடனடியான தீர்வைக் காணும் முகமாக இரண்டு ஆண்டுக்குரிய ஆணையுடன் 2002ஆம் ஆண்டின் முற்பகுதியில் வலு வழங்கல் குழுவொன்று அமைக்கப்பட்டது. எனினும், நடுத்தரக்காலத்திலிருந்து நீண்ட காலம் வரையில் இயலக்கூடிய மற்றும் போட்டி நிலையில் மின்வலுவை வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட வலுச்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். வலுப்பற்றாக்குறைகளின் பொருளாதார மற்றும் சமூக செலவு அதிகளவில் உயர்வாகக் காணப்பட்டமையைக் கடந்த கால அனுபவங்கள் தெளிவாகக் காட்டுவதுடன், மிதமிஞ்சிய மின்வலுத்தீர்வையானது வலு அதிகளவில் தேவைப்படும் கைத்தொழில்களையும் மற்றும் நாட்டின் வெளிநாட்டு வர்த்தகப் போட்டித்தன்மையையும் பாதகமான முறையில் பாதிக்கக்கூடும்.

அதேவேளையில், பெற்றோலியத்துறையினை மீளமைப்பதற்கு ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் போட்டிக்காகவும் இது திறந்து விடப்பட்டது. இந்திய எண்ணெய் கூட்டுத் தாபனத்துடன் அரசு உடன்படிக்கையொன்றை மேற்கொண்டதுடன் இதன் கீழ் திருகோணமலையிலுள்ள எண்ணெய்த்தாங்கிப் பண்ணை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்குக் குத்தகையில் வழங்கப்படும். இதனால், உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளைச் சில்லறையாக விற்பனை செய்வதற்கு இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் அனுமதிக்கப்படும். உள்நாட்டுப் பெற்றோலியச் சந்தையில் அரசு மூன்றாவது தரப்பினர் ஒருவருக்கும் உரிமம் வழங்குவதற்கு எண்ணியுள்ளது. 2002ஆம் ஆண்டு சனவரியிலிருந்து ஆரம்பிக்கும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான நெகிழ்ச்சியுடைய விலையிடற் கொள்கையொன்றின் அறிமுகமானது ஊக்கமளிக்கக் கூடிய முன்னேற்றமொன்றாகக் காணப்படுகின்றது. ஒழுங்குமுறை அடிப்படையிலான விலையிடற் கொள்கையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அவ்வப்போதான தலையீடு எதுவுமின்றி பெற்றோலிய உற்பத்திகளுக்கான நெகிழ்ச்சியுடைய விலையிடற் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது முக்கியமானதாகும். நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட கப்பல் எரிபொருள் வழங்கலின் தாராள மயமாக்கலும் நிறைவடைந்ததுடன் வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் நிறுவனமும் 2002ஆம் ஆண்டு ஒகத்தில் தனியார் மயப்படுத்தப்பட்டது.

### மின்வலு

2002ஆம் ஆண்டின் இறுதியில் நிறுவப்பட்ட மொத்த இயலளவு 1,930 மெ.வா.வாக விளங்கி, 29 மெ. வா. கொண்ட சிறிதளவால் அதிகரித்தது இவ்வதிகரிப்பு வரையறுக்கப்பட்ட ஏசீஈ பவர் நிறுவனத்தினால் ஹொரணையில் 20 மெ.வா. வெப்பவலுப் பொறியொன்றும் 10 மெ.வா. இயலளவுடன் சில சிறு நீர்மின் வலுப்பொறிகளும் தொடங்கப்பட்டமையின் காரணமாகவே முழுமையாக ஏற்பட்டது. ஏற்பட்ட வலு முறை நீர்மின்வலுவில் தங்கியிருத்தல் 2001 இறுதியின் 61 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்துக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. தொடர்ச்சியான வலுப் பற்றாக்குறையின் காரணமாக 2001ஆம் ஆண்டு யூலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்வெட்டுக்கள் 2002ஆம் ஆண்டு மே வரையும் தொடர்ந்தன. தனியார்துறையிடமிருந்து 290 மெ.வா. கொண்ட அவசர தேவைக்கான குறுங்கால வலுப் பொறிகள் கையேற்றுக் கொள்ளப்பட்டமையின் பின்பு 2002ஆம் ஆண்டு மேயில் மின்வெட்டுக்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட நீரின் கிடைப்பனவில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டமையும் மின் வெட்டுக்களை நிறுத்துவதற்கு உதவியாக அமைந்தன. 2002ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் நீர்த்தேக்கங்களில் நீர் தாழ்மட்டங்களில் காணப்பட்டது. ஆண்டுத் தொடக்கத்தில் ஏறக்குறைய 30 சதவீதத்தில் காணப்பட்ட நீர் சேரிப்பு, ஏப்ரலில் மிகக்குறைவாக 12 சதவீத மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்ததெனினும், 2002ஆம் ஆண்டு மே மாதமளவில் 31 சதவீதத்துக்கு அதிகரித்து ஆண்டின் இறுதியில் 62 சதவீதத்துக்கு மேலும் அதிகரித்தது. வழமையான சந்தர்ப்பங்களின் கீழ் வலுவுக்கான கேள்வி ஆண்டுக்கு 8–10 சதவீதத்தால் அதிகரிக்கின்றமையால், வளர்ச்சியடைந்து செல்லும் கேள்வியினை ஈடு செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 100 மெ.வாட்டினால் நிறுவப்பட்ட இயலளவை விரிவடையச் செய்வது அவசியமானதாகும். 5– 6 சதவீதத்தை விஞ்சிய பொருளாதார வளர்ச்சியின் உயர்வீதமொன்று அடையப்பட வேண்டுமெனில் மின்வலு இயலளவினை விரைவான வீதத்தில் விரிவடையச் செய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. எனவே, கவனமாக வரையப்பட்ட வலு விரிவாக்கத் திட்டமொன்றினை உறுதியான முறையில் மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

மொத்த மின்வலு உருவாக்கம் முன்னைய ஆண்டின் 3 சதவீத வீழ்ச்சிக் கெதிராக 2002ஆம் ஆண்டில் 5 சதவீதத்தால் அதிகரித்து 6,951 கி.வா.ம ஆக விளங்கியது. தனியார் துறை இவ்வதிகரிப்புக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்திருந்தது. தனியார் வெப்பவலு மற்றும் சிறிய நீர்மின்வலுப் பொறிகளால்

10 சதவீதத்தினால் அதிகரித்து 1,357 கி.வா.ம. ஆக விளங்குகையில் இலங்கை மின்சபைக்குச் சொந்தமான வலுப் பொறிகளிலிருந்தான வலு உருவாக்கம் 4,546 கி.வா.ம. இற்கு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மொத்த மின் உருவாக்கத்தில், அவசரகால வலு மற்றும் சுய உருவாக்கப்பட்ட தனியார்துறையின் பங்கு சென்ற ஆண்டின் 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு அதிகரித்தது. இலங்கை மின்சபையின் நீர் மின்வலு உருவாக்கம் 2589 கி.வா.ம. ஆக விளங்கியது. இது 1992 இன் பின்னர் ஏற்பட்ட மிகக்குறைந்த அளவாகும். நீரேந்து பகுதிகளில் காணப்பட்ட மிகக் குறைவான மழைவீழ்ச்சியின் விளைவாக நீர்மின்வலு உருவாக்கத்திலேற்பட்ட சரிவானது கேள்வியை ஈடுசெய்வதற்காக இலங்கை மின்சபையை விலையுயர்ந்த வெப்பவலு உருவாக்கத்துக்கும் அவசரமாக வாடகை வலுவினைப் பெற்றுக்கொள்வதற்கும் வழிவகுத்தது. இலங்கை மின்சபையின் வெப்பவலு உருவாக்கம் 3 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் வாடகைக்குப் பெறப்பட்ட பொறிகளிலிருந்தான வலு உருவாக்கம் 168 சதவீதத்தால் அதிகரித்து 913 கி.வா.ம. வாக விளங்கி, சராசரி வெப்பவலுக் கொள்வனவு விலையை விட சராசரி வலுத்தீர்வையானது குறைவாகக் காணப்பட்டமைக்கு காரணமாகி இலங்கை மின் சபையின் மீது பாரிய நிதி வெளியேற்றத்தினை ஏற படுத்தியது. ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வலு நிலைமை முன்னேற்றமடைந்து காணப்பட்ட போதிலும் வாடகைக்குப் பெறப்பட்ட வலுப்பொறிகள் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டன. வாடகைக்குப் பெறப்பட்ட வலுப்பொறிகளுக்காக இலங்கை மின்சபையானது இன்னமும் இயலளவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. அதேவேளையில், இலங்கை மின் சபையின் சுய உருவாக்க நிகழ்ச்சித் திட்டங்களின் கீழான மின்வலு உருவாக்கம் 141 கி.வா.ம. வாக

அட்டவணை 5.6
வலுத்துறைச் செயலாற்றம்

| விடயம் | அலகு | 2000 | 2001 | 2002(அ) | சதவீத மாற்றம் 2001 | சதவீத மாற்றம் 2002(அ) |
|---|---|---|---|---|---|---|
| கிடைக்கத்தக்க இயலளவு | மெ.வா. | 1,837 | 1,999 | 2,230 | 9 | 12 |
| நிறுவப்பட்ட இயலளவு | " | 1,779 | 1,901 | 1,930 | 7 | 2 |
| இலங்கை மின்சார சபை | | | | | | |
| நீர் மின் | " | 1,137 | 1,137 | 1,137 | 0 | 0 |
| வெப்ப மின் | " | 453 | 563 | 563 | 24 | 0 |
| காற்றாலை மின் | " | 3 | 3 | 3 | 0 | 0 |
| தனியார் | | | | | | |
| நீர் மின் | " | 12 | 24 | 34 | 100 | 42 |
| வெப்ப மின் | " | 174 | 174 | 193 | 0 | 11 |
| வாடகைக்குப் பெறப்பட்ட தனியார் வலு | " | 58 | 98 | 300 | 69 | 206 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | கி.வா.ம. | 6,844 | 6,625 | 6,951 | -3 | 5 |
| இலங்கை மின்சார சபை | | | | | | |
| நீர் மின் | " | 3,154 | 3,045 | 2,589 | -3 | -15 |
| வெப்ப மின் | " | 2,205 | 1,896 | 1,953 | -14 | 3 |
| காற்றாலை மின் | " | 3 | 3 | 4 | 0 | 33 |
| தனியார் | | | | | | |
| நீர் மின் | " | 43 | 65 | 103 | 51 | 58 |
| வெப்ப மின் | " | 917 | 1,170 | 1,248 | 28 | 7 |
| வாடகைக்குப் பெறப்பட்ட தனியார் வலு | " | 364 | 341 | 913 | -6 | 168 |
| சுய உற்பத்தி | " | 158 | 105 | 141 | -34 | 34 |
| மின்சபையின் மொத்த விற்பனைகள் | " | 5,259 | 5,238 | 5,502 | 0 | 5 |
| வீடு, வணக்கத்தலம் | " | 1,732 | 1,798 | 1,821 | 4 | 1 |
| கைத்தொழில் (ஆ) | " | 1,755 | 1,719 | 1,866 | -2 | 9 |
| வர்த்தகம் | " | 895 | 859 | 921 | -4 | 7 |
| லங்கா எலக்ரிகல் கம்பனி மொத்தக் கொள்வனவு | " | 825 | 802 | 811 | -3 | 1 |
| தெரு விளக்குகள் | " | 52 | 60 | 83 | 15 | 38 |
| லங்கா எலக்ரிகல் கம்பனியின் விற்பனை உள்ளமைப்பு | " | 744 | 743 | 763 | 0 | 3 |
| வீடு, வணக்கத்தலம் | " | 366 | 366 | 370 | 0 | 1 |
| கைத்தொழில் (ஆ) | " | 189 | 188 | 194 | -1 | 3 |
| வர்த்தகம் | " | 142 | 141 | 149 | -1 | 6 |
| தெரு விளக்குகள் | " | 17 | 19 | 20 | 12 | 5 |
| ஏனையவை | " | 30 | 29 | 30 | -3 | 3 |
| செயல்முறை இழப்பு | | | | | | |
| இலங்கை மின்சபை | % | 21.3 | 20.9 | 19.5 | -2 | -7 |
| லங்கா எலக்ரிகல் | " | 8.5 | 6.7 | 8.9 | -21 | 33 |
| மொத்தம் | " | 22.4 | 21.8 | 22.3 | -3 | 2 |
| பாவனையாளர்களின் எண்ணிக்கை (இ) | எண்ணிக்கை | 2,817,770 | 3,028,506 | 3,185,588 | 7 | 5 |
| வீடு, வணக்கத்தலம் | " | 2,493,183 | 2,690,735 | 2,821,272 | 8 | 5 |
| கைத்தொழில் | " | 31,231 | 32,473 | 33,857 | 4 | 4 |
| வர்த்தகம் | " | 293,356 | 305,298 | 330,459 | 4 | 8 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சுய உற்பத்தி நீங்கலாக.
(இ) லங்கா எலக்ரிகல் கம்பனியின் நுகர்வு உட்பட.

மூலங்கள்: இலங்கை மின் சபை.
வரையறுக்கப்பட்ட லங்கா எலக்ரிகல் கம்பனி.

விளங்கியது. மொத்த வலு உருவாக்கத்தில் வெப்ப வலுவின் பங்கு 2001ஆம் ஆண்டின் 53 சதவீதத்திலிருந்து 61 சதவீதத்துக்கு அதிகரித்தது.

2002ஆம் ஆண்டு ஏப்பிரலிலிருந்து தீர்வை கணிசமாக அதிகரித்த போதிலும் இலங்கை மின்சபையின் மின்வலு விற்பனைகள் 2001ஆம் ஆண்டின் விற்பனைகளை விட 5 சதவீதத்தால் அதிகரித்து 5,502 கி.வா.ம. வாக விளங்கின. மின்வெட்டுக்களின் காரணமாக குறைக்கப்பட்ட கேள்வியானது 2001ஆம் ஆண்டில் 289 கி.வா.ம. ஆகவும் 2002ஆம் ஆண்டில் 525 கி.வா.ம. வாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. நுகர்வோர் வலையமைப்பு 2001ஆம் ஆண்டின் 7 சதவீத விரிவுக்குப் பின்னர் 2002ஆம் ஆண்டின் 5 சதவீதத்தால் மேலும் விரிவடைந்தது. உள்நாட்டுத்துறையில் தலைக்குரிய மின்நுகர்வு சிறிதளவில் அதிகரித்து மாதமொன்றுக்கு 65 கி.வா.ம. வாக விளங்கியது. வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளில் மின் நுகர்வும் முறையே 9 சதவீதத்தாலும், 7 சதவீதத்தாலும் விரிவடைந்தன. வலு உருவாக்கத்துக்கும் விற்பனைகளுக்கும் இடையிலான வேறுபாடாக வரையறுக்கப்பட்டுள்ள மின்முறை இழப்பானது 2002ஆம் ஆண்டில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து 19.5 சதவீதமாக விளங்கிய போதிலும் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டது.

2002ஆம் ஆண்டில் மின்வலு உருவாக்கச் செலவுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தன. இதற்கான முக்கிய காரணங்கள் வெப்பவலுவின் மீது குறிப்பாக வாடகைக்குப் பெறப்பட்ட வலுவின் மீது அதிகளவில் தங்கியிருந்தமை மற்றும் எரிபொருளின் உயர் விலைகள் ஆகியனவேயாகும். இலங்கை மின்சபையின் வெப்பவலு உருவாக்கத்துக்கான எரிபொருள் செலவு (டீசல், உலை எண்ணெய் மற்றும் நப்தாவுக்கு) ரூ. 9,816 மில்லியனாக 2002ஆம் ஆண்டில் விளங்கி மின்வலு அலகொன்றுக்கு ரூ. 5.00 கொண்ட சராசரி எரிபொருட் செலவினையும் கொண்டிருந்தது. வாடகைக்குப் பெறப்பட்ட வலுப் பொறிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மின்வலுவின் சராசரிச் செலவு அலகொன்றுக்கு ரூ. 10.75ஆக விளங்கிய வேளையில், தனியார் வலுவின் சராசரிக் கொள்வனவு விலை 2002ஆம் ஆண்டில் அலகொன்றுக்கு ரூ. 7.32 ஆக விளங்கியது. இலங்கை மின்சபையால் விற்பனை செய்யப்பட்ட மின்வலுவின் மொத்தச்செலவு, அலகொன்றுக்கு ரூ. 7.21 ஆகக் காணப்பட்ட சராசரித் தீர்வையுடனொப்பிடுகையில், அலகொன்றுக்கு ரூ. 8.85 ஆகக் காணப்பட்டது.

**வரைபடம் 5.3**
**மின்வலு உருவாக்கமும் நுகர்வும் (1990 = 100)**




இலங்கை மின்சபையின் மொத்த வருவாய் 2002ஆம் ஆண்டில் 41 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 40,789 மில்லியனாக விளங்கியமைக்கு சராசரித் தீர்வையில் ஏப்பிரல் மாதத்திலிருந்து ஏற்பட்ட 37 சதவீதஅதிகரிப்பும் விற்பனையில் ஏற்பட்ட 4 சதவீத அதிகரிப்புமாகும். எனினும் தொழிற்பாட்டுச் செலவு முக்கியமாக அவசர தேவைக்காகப் பெறப்பட்ட வெப்பவலுப் பொறிகளின் உயர் செலவு காரணமாக 26 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 48, 250 மில்லியனாக விளங்கியதுடன் இலங்கை மின்சபை 2001ஆம் ஆண்டின் ரூ. 8,993 மில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்புக் கெதிராக 2002ஆம் ஆண்டில் ரூ. 7,461 மில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பை அறிவித்திருந்தது. தொடர்ச்சியாக ஏற்பட்ட இழப்புக்களை நிதியிடுவதற்காக இலங்கை மின்சபை ரூ. 15 பில்லியன் (மொத்தம்) கொண்ட அளவினை 2002ஆம் ஆண்டின் இறுதியில் வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுத் தனது கடன் சுமையினையும் உயர்த்திக் கொண்டது. இந் நிலமையானது குறைந்த செலவிலான நிலக்கரி வலு போன்ற வலு மூலங்களை விருத்தி செய்வதனால் நியாயமான தீர்வையொன்றால் நுகர்வோருக்கு நம்பத்தகுந்த வலு வழங்கலை உத்தரவாதப்படுத்துதல் மற்றும் நீண்ட காலத்தில் வலுத்துறையின் நிதியியலில் நீடித்து நிலைத்து இருப்பதை பாதுகாத்தல் என்பன மிக முக்கியம் என்ற கருத்தினை வலியுறுத்துவதாக அமைகின்றது. இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் குறைந்த செலவிலான இரு வலு உருவாக்கச் செயற்றிட்டங்களான நிலக்கரி வலுப்பொறி மற்றும் மேல் கொத்மலை நீர்மின்வலுப் பொறி ஆகியவற்றை பொருளாதார ரீதியற்ற காரணங்களுக்காகப் பிற்போடுவது வலுத்துறை மீது சுமையேற்றுவதாகக் காணப்படுவதுடன் மேலும் தாமதமின்றி மாற்று வலுப் பொறிகள் விருத்தி செய்யப்படாவிட்டால் எதிர்காலத்தில் வலுப்பற்றாக்குறைகளுக்கே இது இட்டுச் செல்லும்.

**வரைபடம் 5.4**
**மின்வலு: சராசரி தீர்வைகளும் அலகுச் செலவும்**




இலங்கை மின்சபை மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் மின் கடத்தல் மற்றும் வழங்கல் செயற்றிட்டங்களை உள்ளடக்கி பல்வேறு வலுச் செயற்றிட்டங்களின் கட்டுமானம் 2002ஆம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 70 மெ.வா. இயலளவைக் கொண்ட குகுளே கங்கை நீர்மின்வலுப் பொறியின் கட்டுமான வேலை நிறைவை நெருங்கிக் கொண்டிருப்பதுடன் 2003ஆம் ஆண்டின் இறுதியளவில் இது தொடக்கி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மின்சபை 2002ஆம் ஆண்டில் பல்வேறு கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டம் III 2002ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. இதன் மொத்த செலவு ரூ. 3,200 மில்லியனாகும். கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டம் III க்கான விரிவாக்கம் 640 மில்லியன் செலவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட கிராமிய மின்னூட்டல் IV செயற்றிட்டமும் (ரூ. 2,360 மில்லியன்) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிராமிய மின்னூட்டல் VIசெயற்றிட்டமும் (ரூ. 5,200 மில்லியன்) சீனாவினால் நிதியிடப்பட்ட (ரூ.2,700 மில்லியன்) கிராமிய மின்னூட்டல் VII செயற்றிட்டமும் 2003 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன. குவைத்தால் நிதியிடப்படப்பட்டு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிராமிய மின்னூட்டல் Vசெயற்றிட்டம் ரூ.992 மில்லியன் செலவைக் கொண்டுள்ளது. இச் செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்படுவதுடன் மின்னூட்டப்பட்ட வீடுகளின் விகிகதாசாரம் தற்போதுள்ள 62 சதவீதத்திலிருந்து கணிசமான அளவிற்கு அதிகரிக்கும். இலங்கை மின்சபை 2002ஆம் ஆண்டில் பல்வேறு மின்கடத்தல் மற்றும் வழங்கல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதேவேளையில் வரையறுக்கப்பட்ட ஏ.ஈ.எஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட 163 மெ.வா. இணைந்த சுழற்சி வலுப்பொறியானது 2003ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவிருந்தது. மேலும், இலங்கை மின்சபை ஒவ்வொன்றும் 20மெ.வா. இயலளவினைக் கொண்ட இரண்டு காற்று வலுப்பொறிகளை அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் மாவட்டங்களில், கட்டு, தொழிற்படுத்து, உடமையாக்கு என்ற அடிப்படையில் நிறுவுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### பெற்றோலியம்

2002ஆம் ஆண்டு சனவரியிலிருந்து பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளைத் தீர்மானிப்பதற்காக நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட விலை சீராக்கப் பொறிமுறையின் அறிமுகமும், உள்நாட்டுப் பெற்றோலியத் துறையினைப் போட்டிக்காகத் திறந்து விடுவதென்ற அரசின் தீர்மானமுமே 2002ஆம் ஆண்டில் பெற்றோலியத் துறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இரண்டு மேம்பாடுகளாகக் காணப்படுகின்றன. 2002ஆம் ஆண்டு ஏப்பிரலிலிருந்து பன்னாட்டு எண்ணெய் விலைகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து நெகிழ்ச்சியுடைய விலையிடற் கொள்கையின் தொடர்ச்சியானது சவாலுக்குரிய விடயமாகக் காணப்பட்டமைக்கு அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகள் பொருட்கள் மற்றும் பணிகளின் உள்நாட்டு விலைகளில் கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தன. எனினும் விலையிடற் கொள்கையானது சூத்திரமொன்றுக்கான சில பக்க நடவடிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட சில சீராக்கங்களுடன் 2002ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. சூத்திரத்தின் அடிப்படையிலான விலையிடற் கொள்கை ஏற்படுத்தப்பட்டமையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தடைசெய்யக் கூடியதாயிருந்ததெனினும் திட்டமிட்டபடி இதன் படுகடன் இருப்பினைக் குறைக்க முடியாமற் போனமைக்கு விலையிடற் கொள்கையிலிருந்து படுகடன் மீளப்பெறும் கூறு 2002ஆம் ஆண்டு யூலையிலிருந்து மீளப் பெறப்பட்டமையே காரணமாகும்.

வரைபடம் 5.5
பெற்றோலியம்: உள்ளூர் விலைகள் - 2002




அரசானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அதன் தொழிற்பாடுகளை பரவலாக்குதல் மற்றும் களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் போட்டியுடனான சூழலில் சில்லறை விற்பனை ஆகிய விடயங்களில் தனியார் துறையைப் பங்கேற்பதற்காக அழைத்தல் ஆகியவற்றின் மூலம் மீளமைப்புச் செய்வதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது. அரசு இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தை சந்தையில் பிரவேசிப்பதற்காக ஏற்கனவே அழைத்துள்ளது. அரசு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன மற்றும் இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத் தாபனத்துக்குமிடையே 2002ஆம் ஆண்டு திசெம்பரில் இடைக்கால உடன் படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டமை, 100 நிரப்பும் நிலையங்களைக் கையேற்பதனையும், பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விற்பனையை ஆரம்பிப்பதனையும் இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு இயலச் செய்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான வேறு 100 நிரப்பும் நிலையங்கள் அடையாளங் காணப்பட்டு விரைவில் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மூன்றாவது தரப்பினர் ஒருவருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வசதிகள் போன்ற பெற்றோலியம் பொதுப் பாவனையாளர் வசதிகளை உடமை வசதிகளை உடைமையாக்கவும் தொழிற்படுத்தவுமென கூட்டு முயற்சிக் கம்பனியொன்று நிறுவப்பட்டது. திருகோணமலையிலுள்ள எண்ணெய் தாங்கிப் பண்ணையை இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக் கைத்தொழிலின் தாராள மயமாக்கலுக்கு ஆதரவளிக்கவும் அதனை இலங்கைப் பொது வசதிகள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வருவதற்குமென புதிய பெற்றோலியத்துறைச் சட்டமொன்று வரையப்பட்டுக்

அட்டவணை 5.7

## பெற்றோலியத்துறைச் செயலாற்றம்

| விடயம் | அலகு | 2000 | 2001 | 2002(அ) | சதவீத மாற்றம் 2001 | சதவீத மாற்றம் 2002(அ) |
|---|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் அளவு | | | | | | |
| மசகெண்ணெய் | '000 மெ.தொன்கள் | 2,330 | 1,955 | 2,280 | -16 | 17 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | " | 1,266 | 1,419 | 1,344 | 12 | -5 |
| திரவப் பெற்றோலிய வாயு | " | 134 | 126 | 137 | -6 | 9 |
| இறக்குமதிகளின் பெறுமதி (கொ.க.) | | | | | | |
| மசகெண்ணெய் | ரூ.மில். | 39,343 | 32,004 | 40,404 | -19 | 26 |
| | ஐ.அ.டொ.மில். | 519 | 358 | 422 | -31 | 18 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ரூ.மில். | 24,452 | 27,284 | 27,781 | 12 | 2 |
| | ஐ.அ.டொ.மில். | 323 | 305 | 290 | -6 | -5 |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ.மில். | 4,172 | 4,295 | 3,773 | 3 | -12 |
| | ஐ.அ.டொ.மில். | 55 | 48 | 39 | -13 | -19 |
| மசகெண்ணெயின் சராசரி விலை (கொ.க.) | ரூ. பீப்பா | 2,181 | 2,207 | 2,394 | 1 | 8 |
| | ஐ.அ.டொ. / பீப்பா | 28.77 | 24.47 | 25.13 | -15 | 3 |
| ஏற்றுமதி அளவு | '000 மெ.தொன்கள் | 227 | 148 | 154 | -35 | 4 |
| ஏற்றுமதிப் பெறுமதி | ரூ. மில்லியன் | 5,346 | 3,561 | 3,981 | -33 | 12 |
| | ஐ.அ.டொ. / மில் | 71 | 40 | 42 | -44 | 4 |
| உள்நாட்டு விற்பனைகள் | '000 மெ.தொன்கள் | 3,303 | 3,305 | 3,423 | 0 | 4 |
| சிறப்புப் பெற்றோல் | " | 220 | 244 | 278 | 11 | 14 |
| ஈயக் கரியம் நீக்கிய பெற்றோல் | " | 4 | 5 | 9 | 25 | 80 |
| தன்னியக்க டீசல் | " | 1,715 | 1,675 | 1,752 | -2 | 5 |
| சிறப்பு டீசல் | " | 47 | 49 | 47 | 4 | -4 |
| மண்ணெண்ணெய் | " | 229 | 228 | 229 | 0 | 0 |
| உலை எண்ணெய் | " | 785 | 811 | 780 | 3 | -4 |
| அவுட்டூர் | " | 157 | 138 | 114 | -12 | -17 |
| நப்தா | " | - | 14 | 57 | - | 307 |
| திரவப் பெற்றோலிய வாயு | " | 146 | 141 | 157 | -3 | 11 |
| உள்நாட்டு விலை | ரூ. / லீற்றர் | | | | | |
| சிறப்புப் பெற்றோல் | " | 50.00 | 50.00 | 49.00 | 0 | -2 |
| ஈயக் கரியம் நீக்கிய பெற்றோல் | " | 53.00 | 53.00 | 52.00 | 0 | -2 |
| தன்னியக்க டீசல் | " | 24.50 | 26.50 | 30.00 | 8 | 13 |
| சிறப்பு டீசல் | " | 29.80 | 31.80 | 35.30 | 7 | 11 |
| மண்ணெண்ணெய் | " | 18.40 | 17.40 | 24.00 | -5 | 38 |
| உலையெண்ணெய் | " | | | | | |
| 500 செக்கன்ட் | " | 15.90 | 17.80 | 22.90 | 12 | 29 |
| 800 செக்கன்ட் | " | 15.10 | 17.00 | 21.90 | 13 | 29 |
| 1000 செக்கன்ட் | " | 14.60 | 16.50 | 21.20 | 13 | 28 |
| 1500 செக்கன்ட் | " | 14.00 | 15.80 | 20.70 | 13 | 31 |
| 3800 செக்கன்ட் | " | 12.40 | 14.10 | 18.90 | 14 | 34 |
| திரவப் பெற்றோலிய வாயு | | | | | | |
| செல் வாயு | ரூ. / கி.கி. | 40.72 | 40.72 | 47.84 | 0 | 17 |
| லவ் வாயு | " | - | 32.72 | 41.20 | - | 26 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட செல் வாயு லங்கா கம்பனி.
வரையறுக்கப்பட்ட லாவ் லங்கா வாயு

கொண்டிருக்கின்றது. இம்முன்னேற்றங்களுடன் பெற்றோலிய உற்பத்திகளுக்கான போட்டிச் சந்தையொன்று விரைவில் தோன்றும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் நாட்டின் வலுப்பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது தேவைக்கு அதிகமான தொழிற்படையினைக் குறைக்கவும் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளை உள்நாட்டுப் பெற்றோலியச் சந்தையில் ஏற்பட்டுவரும் போட்டியை எதிர்கொள்ளக்கூடிய வகையில் திறனுடையவையாக மேற்கொள்வதற்குமென தனது ஊழியர்களுக்கு சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது.

முக்கியமான பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட சிறிதளவான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டில் 4 சதவீதம் கொண்ட மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. பொதுவாக, பெற்றோலிய நுகர்வு, அண்மைய ஆண்டுகளில் ஏறக்குறைய 12 சதவீதங்கொண்ட சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்து வந்தது. 2002ஆம் ஆண்டில் பெற்றோலிய நுகர்விலேற்பட்ட குறைவான விரிவுக்கு முக்கியமாக பொருளாதார நடவடிக்கைகளிலேற்பட்ட மெதுவான வளர்ச்சியே காரணமாகும். மொத்தப் பெற்றோலிய நுகர்வில் ஏறக்குறைய 51 சதவீதத்தினைப் பிரதிபலித்த டீசல் நுகர்வு 2001ஆம் ஆண்டின் 2 சதவீத

வீழ்ச்சிக்கெதிராக 2002ஆம் ஆண்டில் 5 சதவீதத்தால் அதிகரித்தது. வெப்பவலு உருவாக்கத்துக்கான கேள்வியிலேற்பட்ட அதிகரிப்பே இவ் விரிவுக்குப் பொறுப்பான முக்கிய காரணியாகும். பெற்றோல் நுகர்வு 14 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் உலை எண்ணெய் நுகர்வு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2.3 மில்லியன் மெற்றிக் தொன் மசகெண்ணையையும் 1.3 மில்லியன் மெற்றிக் தொன் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளையும் இறக்குமதி செய்தது. மசகெண்ணெய் இறக்குமதிக்கான மூலநாடுகளாக ஈரான் (51 சதவீதம்) மலேசியா (21 சதவீதம்) சவூதி அரேபியா (20 சதவீதம்) மற்றும் ஐக்கிய அரபு எமிறேற்ஸ் (8 சதவீதம்) ஆகியன விளங்கின. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலும் தனியார் துறையினாலும் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தப் பெற்றோலிய உற்பத்திகள் 2002ஆம் ஆண்டில் 29 மில்லியன் பீப்பாய்களாக விளங்கி 2001ஆம் ஆண்டைவிட 8 சதவீத அதிகரிப்பைப் பிரதி பலித்தன.

ஐ.அ. டொலர் நியதிகளில் மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை (செலவு மற்றும் கப்பற் கட்டணம்) சிறிதளவால் அதிகரித்து 2002ஆம் ஆண்டில் பீப்பாயொன்று 25.13 ஐ.அ. டொலர்களாக விளங்கின. ஆண்டின் முதலரைப்பகுதியில் பீப்பாயொன்று 23 ஐ.அ. டொலர்களாக விளங்கிய சராசரி இறக்குமதி விலையானது, இரண்டாம் அரைப்பகுதியில் பீப்பாயொன்று 27 ஐ.அ. டொலர்களாக அதிகரித்தது. ஈராக்குக்கெதிரான இராணுவ நடவடிக்கை பற்றிய அதிகரித்துச் செல்லும் அபாய எச்சரிக்கையாலும் மற்றும் வெனிசூலாவில் காணப்பட்ட அரசியல் குழப்ப நிலையால் திசெம்பரிலிருந்து அந்நாடுகளிலிருந்து எண்ணெய் ஏற்றுமதிகள் தடைப்பட்டதுமே குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் எண்ணெய் விலைகள் அதிகளவில் அதிகரித்தமைக்குப் பெருமளவில் பொறுப்பான காரணியாக காணப்படுகின்றது. பெற்றோலிய இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 2002ஆம் ஆண்டில் 8 சதவீதத்தால் அதிகரித்து ஐ.அ.டொலர் 789 மில்லியனாக விளங்கியமைக்கு இறக்குமதி அளவு மற்றும் விலைகளிலேற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

பெற்றோலிய உற்பத்திகளுக்கான தன்னியக்க விலைச் சீராக்கப் பொறிமுறையொன்று காணப்பட்டமையினால், இலங்கைப் பெற்றோலியக்

**வரைபடம் 5.6**

**பெற்றோலியம்: பன்னாட்டு விலைகளும் இ.பெ.கூ.இறக்குமதி விலைகளும் - 2002**




கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை 2002ஆம் ஆண்டில் கணிசமான அளவில் முன்னேறியது. 2002ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் சேகரிக்கப்பட்ட படுகடன் மீட்புக் கட்டணங்களையும் உள்ளடக்கி ரூ. 5 பில்லியன் கொண்ட இலாபமொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது ஒன்று சேர்ந்த இழப்புக்களை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்துக்குக் குறைக்க முடியாமற் போனதுக்கு படுகடன் மீட்புக் கூற ானது அரசின் தீர்மானமொன்று அடுத்து 2002ஆம் ஆண்டு யூலையிலிருந்து விலையிடல் சூத்திரத்திலிருந்து நீக்கப்பட்டமையே காரணமாகும். இதன் விளைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கடன்பாடுகள் 2002ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 16.2 பில்லியனாக விளங்கின. படுகடன் மீட்புக்கூறு, விலையிடல் சூத்திரத்திலிருந்து நீடிக்கப் பட்டிருக்காவிட்டால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது படுகடன் இருப்பினை மற்றொரு ரூ. 2.5 பில்லியனால் என்றாலும் குறைக்கக் கூடியதாயிருந்திருக்கும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் திறைச்சேரித் தொழிற்பாடுகளிலான மேம்பாடுகள் மற்றும் தனியார் வங்கிகளை அணுகக்கூடிய நிலைமையை ஆரம்பித்தமை ஆகியனவும் இக்கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்குத் துணைபுரிந்தன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக ரீதியான வாய்ப்பான தன்மையைப் பேணவும், உயர் கடன்பாடுகளின் வாயிலாக வங்கித் தொழில்முறை மீதான அழுத்தங்களைக் குறைத்தல் மற்றும் தன்னியக்க விலைப்பொறிமுறையின் நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்புதல் ஆகிய நோக்கங்களுக்காகவும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான தன்னியக்க விலைச் சீராக்க முறையினை எத்தகைய குறிப்பிட்ட மாற்றங்களுமின்றி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமென்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

## திரவப் பெற்றோலிய வாயு

உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு சந்தையில் போட்டிச் சந்தையொன்று உருவாகிக் கொண்டிருக் கின்றது. ஏற்கனவே இரண்டு விநியோகத்தர்கள் காணப்படுகையில் மூன்றாவது விநியோகத்தர் ஒருவரும் விரைவில் சந்தையில் பிரவேசிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. 2002ஆம் ஆண்டில் எண்ணெய் விலைகளில் காணப்பட்ட அதே போக்கினைத் தொடர்ந்து உலகச் சந்தையில் திரவப் பெற்றோலிய வாயுவின் விலையும் மேயிலிருந்து உறுதியாக அதிகரித்தது. 2002ஆம் ஆண்டு சனவரியில் மெற்றிக் தொன்னொன்றுக்கு ஐ.அ. டொலர் 205 ஆகக் காணப்பட்ட விலை, ஏப்பிரலில் மெற்றிக் தொன்னொன்றுக்கு ஐ.அ. டொலர் 185ஆக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. எனினும், அதன் பின் 2002ஆம் ஆண்டு திசெம்பர் வரையில் மெற்றிக் தொன்னொன்றுக்கு ஐ.அ. டொலர் 370க்கு உறுதியாக அதிகரித்திருந்தது. உலகச் சந்தை விலைகளுடன் இசைந்து செல்லும் வகையில் உள்நாட்டுச் சில்லறை விற்பனை விலைகளும், வரையறுக்கப்பட்ட ஷெல் காஸ் லங்கா மற்றும் வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் லங்கா காஸ் ஆகிய இரண்டு வழங்குநர்களினாலும் அதிகரிக்கப் பட்டன. வரையறுக்கப்பட்ட ஷெல் காஸ் லங்கா தனது விலைகளை 2002ஆம் ஆண்டில் 39 சதவீதத்தால்

கிலோகிறாமொன்றுக்கு ரூ. 53.20 ஆல் (12.5 கிலோ கிறாம் உருளையொன்று ரூ. 665க்கு) அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் லங்கா காஸ் நிறுவனமும் தனது விலையை 63 சதவீதத்தால் அதிகரித்து வரையறுக்கப்பட்ட ஷெல் காஸ் லங்காவின் விலையுடன் சமநிலைப்படுத்தியது. எனினும், தன்னியக்க வாயு விலையானது மாற்றம் எதுவுமின்றி இவ்வாண்டில் இருப்பதற்கு ஏற்கனவே சந்தையில் இதன் விலை சார்பு ரீதியில் அதிகமாக இருப்பதே காரணமாகும். விலையதிகரிப்புக்கள் காணப்பட்ட நிலையிலும் திரவப் பெற்றோலிய வாயுவின் விற்பனைகள் 11 சதவீதத்தால் அதிகரித்து 2002ஆம் ஆண்டில் 157,458 மெற்றிக் தொன்களாக விளங்கின. திரவப் பெற்றோலிய வாயுவின் உள்நாட்டுத் துறைக்கான விற்பனைகள் 15 சதவீதத்தால் விரிவடைந்து 121,421 மெற்றிக் தொன்களாக விளங்கிய வேளையில், கைத்தொழில் துறைக்கான விற்பனைகள் 2 சதவீதத்தால் அதிகரித்து 28,481 மெற்றிக் தொன்களாக விளங்கின. அதே வேளையில், தன்னியக்க வாயு விற்பனைகள் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 7,626 மெற்றிக் தொன்களாக விளங்கின.

## 5.6. போக்குவரத்து

### வீதிகள்

நிலங்களைக் கையேற்றல் மற்றும் நிதியங்களின் போதாமை ஆகியன தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக சில செயற்றிட்டங்கள் மேலும் தாமதித்த போதிலும் உத்தேசிக்கப்பட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டங்களை 2002ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்காக ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளையில் வீதிகளைப் பராமரித்தல் மற்றும் புனரமைப்பு வேலைகள் குறிப்பாக மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் உள்நாட்டு வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடுகளின் காரணமாகக் குழப்பமடைந்திருந்தன. வீதிப் பராமரித்தலுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள் தொடர்பான உறுதியான பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் 2002ஆம் ஆண்டில் வீதி நிதியம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இந் நோக்கத்துக்காக வாகனங்கள் மீது சிறப்புத் தீர்வையொன்று விதிக்கப்படும். வாகனங்களின் உரிமப்பத்திரங்கள் வழங்கப்படும் போது அல்லது புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படும் போது இத்தீர்வை விதிக்கப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது முக்கியமாக “ஏ”மற்றும் “பி” தர வீதிகளின் 11,650 கிலோ மீற்றர்களைக் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புக்குப் பொறுப்பாகக் காணப்படுகின்றது. அத்துடன் தேசிய நெடுஞ் சாலைகளின் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் கட்டுமான வேலைகளுக்கும் பொறுப்பானதாகக் காணப்படுகின்றது. 2002ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வெளிநாட்டு நிதியங்களுடன் பல்வேறு முக்கிய வீதிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தது. இவ்வாண்டில் 'பேஸ்லைன்' வீதி முன்னேற்றச் செயற்றிட்டத்தின் III ஆம் கட்டம் யப்பானிய பன்னாட்டுக் கூட்டுத்தாபன முகவர் நிலையத்திலிருந்தான உதவியுடன் நிறைவு செய்யப்பட்டது. எனினும், கிருலப்பனையிலிருந்து காலிவீதி வரையுமான செயற்றிட்டத்தின் III ஆம் கட்டமானது, நிலக் கையேற்புக்கெதிராக பொது மக்களிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் 31 பாலங்களை மீளமைக்கவும் ஒரு வீதிச் செயற்றிட்டத்துக்குமென நிதியுதவியை வழங்கியது. கொரியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வங்கி இரத்தினபுரி -பண்டாரவளை வீதியின், இரத்தினபுரி - பலாங்கொடை பிரிவினை (42 கிலோமீட்டர்கள்) புனரமைப்புச் செய்வதற்காக நிதிகளை வழங்கியது. 2002 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் வேலையின் 75 சதவீதம் நிறைவு செய்யப்பட்டிருந்தது.

2003ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள தெற்கு நெடுஞ்சாலையின் நிருமாண வேலைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பானிய வங்கி (பஒஜவ) இனாலும் இணைந்த முறையில் நிதியிடப்பட்டன. குருந்துக கேட்டகமவிலிருந்து கொடகம வரையிலான (56 கிலோமீட்டர்கள்) செயற் றிட்டத்தின் ஆசிய அபிவிருத்தி வங்கியினது சிவில் வேலை ஒப்பந்தமானது 2002ஆம் ஆண்டு திசெம்பரில் வழங்கப்பட்டதுடன், 2003ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிருமாண வேலைகள் ஆரம்பிக்கப்படவும் உள்ளன. கொட்டாவவிலிருந்து குருந்துகட்டகம வரையிலான (67கிலோமீட்டர்கள்) பஒஜவ பிரிவினைப் பொறுத்தவரையில், சிவில் வேலை ஒப்பந்தங்களின் முதல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

2000ஆம் ஆண்டில் கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் நிருமாண வேலைகள் திரண்ட நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிதியங்களுடன ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 11 பில்லியனாகும். அதேவேளையில் அரசு இச் செயற்றிட்டத்திற்கு நிதியிடுவதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பு வெளிப்பாட்டினைக் கோரியிருந்தது. பெறப்பட்ட அத்தகைய எடுத்துரைப்பொன்று தற்போது மீளாய்வின் கீழுள்ளது.

உத்தேசிக்கப்பட்ட வெளிச்சுற்று நெடுஞ்சாலையானது மத்துகம கடவத்தை மற்றும் கடுவலவினூடாக கெரவலப்பிட்டியவிலிருந்து தெற்கு நெடுஞ்சாலை வரைக்கும் கொட்டாவவிலிருந்து ஆரம்பிக்கும். இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 17 பில்லியனாகும். அடிப்படை வடிவமைப்புக்கள் நிறைவு செய்யப்பட்டு சுற்றாடல் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. கொழும்பு, கண்டி மாற்று நெடுஞ்சாலைச் செயற் திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 29 பில்லியனாகும். இச் செயற்றிட்டத்தின் கீழேயே கடவத்தையிலிருந்து கண்டி வரையிலான புதிய நெடுஞ்சாலை செல்கின்றது. விபரமான சாத்திய வள ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டதுடன் கட்டு, தொழிற்படுத்து, உடைமையாக்கு / கட்டு, தொழிற்படுத்து, மாற்றல் செய் என்ற அடிப்படையில் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விருப்ப வெளிப்பாடுகளுக்கான அழைப்பை அரசு விடுத்துள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையானது, 345 கிலோமீட்டர்கள் கொண்ட வீதிகளையும் 47 பாலங்களையும் புனரமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பஒஜவ இடமிருந்தான உதவியுடன் வீதிவலையமைப்பு

முன்னேற்றச் செயற் றிட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது.

வெளிநாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்புச் செயற்றிட்டங்களுடன் அனைத்து மாகாணங்களையும் சேர்த்து உள்நாட்டு நிதியங்களுடனான குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு உதவியை உள்ளடக்கி வீதி அபிவிருத்தி அதிகார சபை பல வீதிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. எனினும், வீதிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் கட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முக்கியமாக நிலக் கையேற்புடன் இணைந்த பல்வேறு பிரச்சனைகளை எதிர் நோக்கியுள்ளது. இதனால் நடைமுறைப்படுத்தலில் அளவுக்கதிகமான தாமதங்கள் ஏற்படவும் வழிவகுத்தது. நெடுஞ்சாலை அதிகாரசபைகள் மற்றும் பயன்பாட்டு முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கிடையேயான இணைப்பு போதிய அளவில் காணப்படாமையும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் விளைவித்துள்ளது.

2002ஆம் ஆண்டில் வீதி பராமரிப்பு மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தி ஆகிய வற்றுக்கான மொத்தச் செலவு ரூ. 9,877 மில்லியனாக விளங்கியது. இது முன்னைய் ஆண்டை விட 6 சதவீத வீழ்ச்சியாகக் காணப்படுகிறது. இம் மொத்தச் செலவில், 58 சதவீதமானவை திரண்ட நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வேளையில் எஞ்சியவை வெளிநாட்டு உதவியாகப் பெறப்பட்டன.

## பயணிகள் போக்குவரத்து

வீதி மற்றும் புகை வண்டிப் பயணிகள் போக்குவரத்து 2002இல் மந்தமடைந்திருந்தது. அரச தனியார் பங்குடமைகளின் கீழ் பிரதேச போக்குரத்துக் கம்பனிகளின் முகாமையை மீளமைப்புச் செய்வதற்கான ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையிலான பேரூந்துக் கட்டணக் கொள்கை 2002ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் நிச்சயமற்ற தன்மையைக் குறைத்தல் மற்றும் முதலீடுகளை ஊக்குவித்தல் என்பனவாகும். அதேவேளையில், புகைவண்டிப் பயணிகள் பணியானது தரம் மற்றும் நம்பிக்கைத் தன்மை ஆகிய நியதிகளில் மேலும் வீழ்ச்சியடைந்தமைக்கு நிதியியல் ரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டுக் குறைபாடுகள் ஆகியனவே காரணமாகும். எனினும், புகை வண்டிப் பயணிகளை அரச -தனியார் பங்குடமைகளுடன் சேர்த்து மீளப் புத்துயிரளிப்பதற்கான வழிகள் மற்றும் உபாயங்கள் ஆகியவற்றை அறிவதற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புகைவண்டிக் கட்டணங்கள் தொடர்ந்தும் ஐந்தாவது ஆண்டாக மாற்றமின்றியிருந்ததுடன் அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மிகவும் கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்து. புகைவண்டிச் சரக்குப் பணிகள் எவ்வாறாயினும் இவ்வாண்டில் மிதமான முன்னேற்ற மொன்றைப் பிரதிபலித்தன.

## வீதிப்பயணிகள் போக்குவரத்து

தொழிற்பாடுகளின் அளவு நியதிகளில் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளினால் நிருவகிக்கப்படும் அரசதுறைப் பயணிகள் போக்குவரத்தோ அல்லது தனியார் பேருந்துத் தொழிற்பாடுகளோ 2002ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் காட்டியிருக்கவில்லை. தனியார் துறைத் தொழிற்பாட்டாளர்கள் மற்றும் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளுக்குச் சொந்தமான பேருந்துத் தொகுதிகள் 2002ஆம் ஆண்டில் 24,689 ஆக விளங்கின. மொத்தத் தொகுதியில் தனியார் பேருந்துத் தொழிற்பாட்டார்களின் பங்கு ஏறக்குறைய 64 சதவீதமாகக் காணப்பட்டது. நாளொன்றுக்குத் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துக்களின் சராசரி எண்ணிக்கை 2001ஆம் ஆண்டின் 16,587இலிருந்து 2002இல் 16,393க்கு வீழ்ச்சியடைந்தது. நாளொன்றுக்குத் தொழிற்படுத்தப்பட்ட பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் சராசரி எண்ணிக்கை 310ஆல் வீழ்ச்சியடைந்து 5,412ஆக விளங்கியிருக்கையில், தனியார் பேருந்துக்கள் 117 ஆல் அதிகரித்து 10,981 ஆக விளங்கின. வாகனங்களின் பயன்பாட்டு நியதியினால், சராசரியாக பிரதேச போக்குரத்துக் கம்பனிகளின் பேருந்து ஒன்று நாளொன்றுக்கு 200 கிலோமீட்டர்கள் ஓடியிருக்கையில், தனியார்துறைப் பேருந்து நாளொன்றுக்கு 132 கிலோமீட்டர்களே ஓடியிருப்பதுடன் சார்பு ரீதியில் தனியார் பேருந்துகள் பயனற்றுக் காணப்பட்டன என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. இது முக்கியமாக தனியார் பேருந்துத் தொழிற்பாடுகளில் தனி பணியாட்கள் முறை காணப்படுவதன் விளைவேயாகும். மாறாக பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் பொதுவில் பங்கு கொள்ளும் முறையைப் பின்பற்றி பேரூந்து தொழிற்படும் காலப்பகுதியை விரிவடையச் செய்தன. தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்களை முறைசார் முறை யொன்றில் மீள ஒழுங்கமைத்தலானது பேருந்துக்களின் சாதகமான பயன்பாடு, அதேபோல கண்காணிப்பு மற்றும் ஒழுங்கமைப்பு ஆகியவற்றை எளிதாக்குதல் ஆகியவற்றுக்கு உதவியாக இருக்குமென எடுத்துக் கூறப்பட்டுள்ளது

இவ்வாண்டில் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் மற்றும் தனியார் தொழிற்பாட்டாளர் ஆகிய இருபகுதியினரதும் தொழிற்பட்ட கிலோமீட்டர்கள் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 925 மில்லியன் கிலோமீட்டர்களாக விளங்கின. இவ் வீழ்ச்சியானது தனியார் பேருந்துக்களின் தொழிற்பாட்டிலேற்பட்ட சிறிதளவிலான அதிகரிப்புக்களினதும் பிரதேச போக்குவரத்துச்சபைகளின் தொழிற்பாட்டில் ஏற்பட்ட மெதுவான வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகவும் காணப்பட்டது. பயணி கிலோமீட்டர்களின் நியதிகளில் இரு துறைகளும் சிறிதளவிலான அதிகரிப்பை பதிவு செய்திருந்தன.

2002ஆம் ஆண்டில் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் திரண்ட மொத்த வருவாய் மற்றும் செலவு சிறிதளவால் அதிகரித்து முறையே ரூ. 9,424 மில்லியனாகவும் மற்றும் ரூ.11,604 மில்லியனாகவும் விளங்கின. இதன்படி பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் ரூ. 2,180 மில்லியன் கொண்ட

தொழிற்பாட்டு இழப்பொன்றினைப் பதிவு செய்தன. எனினும், சில பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் இலாப நட்டமின்றி தொழிற்பட்டன. இழப்பை மேம்படுத்தும் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் தமது நிதி இடைவெளியினை வழங்குநர் கொடுகடன், ஊழியர்களின் பணி முடிவின் போதான நன்மைகள், வங்கிக் கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் மற்றும் வரவுசெலவுத்திட்ட மாற்றல்கள் ஆகியவற்றினைக் கொண்டு நிதியிட்டின. இச் சூழ்நிலைகளின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2002ஆம் ஆண்டு யூலையில் வழங்கப்பட்ட கட்டண அதிகரிப்பை ஏற்றுக் கொள்ளாதநிலைமையானது பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் நிதிநிலைமையை மேலும் சீர்கேடடையச் செய்தது. பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளுக்கான அரசின் நடைமுறை மாற்றல்கள் 2002ஆம் ஆண்டில் ரூ.1,155 மில்லியனாக விளங்கின. மேலும், சலுகை வீதத்தில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பருவ காலப் பயணச்சீட்டுக்களை வழங்கவும் கிராமப் பகுதிகளில் சிக்கனமற்ற வழிகளில் பேருந்துப் பணிகளைத் தொழிற்படுத்துவதற்குமென ரூ.525 மில்லியன் கொண்ட தொகையை பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் திறைசேரியிலிருந்து இவ்வாண்டில் மானியமாகப் பெற்றன.

போக்குவரத்து அமைச்சு இத்துறையில் காணப்படும் பரந்த அளவிலான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தனியார் மற்றும் அரச வீதிப் பயணிகள் போக்குவரத்துத் துறைகளுக்காக, பயணக்கட்டணக் கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தியது. இதுவரை காலமும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த அவ்வப்போதான கட்டணத் திருத்தங்கள் தரத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பேருந்துப் பணியின் இயலளவினை விரிவடையச் செய்வதற்கும் பாரிய இடையூறாகக் காணப்பட்டன. இதனால் இக்கட்டணக் கொள்கையானது, பேருந்துத் தொழிற்பாட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி பயன்தரத்தக்க வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

**அட்டவணை 5.8**
**போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள்**

| விடயம் | அலகு | 2000 | 2001 | 2002(அ) | சதவீத மாற்றம் 2001 | சதவீத மாற்றம் 2002(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | எண்ணிக்கை | 91,929 | 72,634 | 113,351 | -21.0 | 56.1 |
| பேருந்துகள் | " | 2,298 | 1,310 | 1,429 | -43.0 | 9.1 |
| தனியார் சொகுசு வண்டிகள் | " | 13,848 | 8,426 | 12,003 | -39.2 | 42.5 |
| தனியார் ஊர்திகள் | " | 11,656 | 10,274 | 20,876 | -11.9 | 103.2 |
| முச்சில்லு வண்டிகள் | " | 7,928 | 5,864 | 8,591 | -26.0 | 46.5 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | " | 39,987 | 34,119 | 54,762 | -14.7 | 60.5 |
| உந்து ஈருருளிகள் | " | 8,585 | 6,013 | 8,127 | -30.0 | 35.2 |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | " | 7,530 | 6,546 | 7,524 | -13.1 | 14.9 |
| நில ஊர்திகள் | " | 97 | 82 | 39 | -15.5 | (-52.4) |
| ஏனையவை | " | | | | | |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | '000 | 8,585 | 8,860 | 8,470 | 3.2 | -4.4 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | மில்லியன் | 3,208 | 3,979 | 4,079 | 24.0 | 2.5 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் | " | 88 | 109 | 131 | 23.9 | 20.2 |
| மொத்த வருவாய் | ரூ.மில்லியன் | 1,015 | 1,200 | 1,362 | 18.2 | 13.5 |
| நடைமுறைச் செலவு | " | 2,686 | 3,020 | 3,328 | 12.4 | 10.2 |
| தொழிற்பாட்டு இழப்பு | " | 1,671 | 1,820 | 1,966 | 8.9 | 8.0 |
| மூலதனச் செலவு | " | 5,040 | 4,425 | 2,015 | -12.2 | -54.5 |
| 3. பிரதேச பேருந்துக் கம்பனிகள் | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | மில்லியன் | 387 | 420 | 397 | 8.5 | -5.5 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | " | 19,864 | 21,204 | 21,067 | 6.7 | -0.6 |
| மொத்த வருவாய் | ரூ.மில்லியன் | 6,941 | 9,113 | 9,424 | 31.3 | 3.4 |
| தொழிற்பாட்டுச் செலவு | " | 8,491 | 11,516 | 11,604 | 35.6 | 0.8 |
| தொழிற்பாட்டு இழப்பு | " | 1,550 | 2,403 | 2,180 | 55.0 | -9.3 |
| 4. சிறிலங்கன் எயார்லைன்ஸ் | | | | | | |
| பறந்த மணித்தியாலங்கள் | மணித்தியாலம் | 52,819 | 47,402 | 42,115 | -10.3 | -11.2 |
| பறந்த பயணிகள் கிலோமீற்றர்கள் | மில்லியன் | 6,860 | 6,556 | 6,180 | -4.4 | -5.7 |
| பயணிகள் சுமைக் காரணி | % | 67 | 67 | 76 | 0.6 | 13.4 |
| நிறைச் சுமைக் காரணி | % | 56 | n.a | n.a | - | - |
| சரக்கு | மெ.தொன்'000 | 55 | 50 | 45 | -9.1 | -10.0 |
| தொழில் நிலை | எண்ணிக்கை | 4,886 | 4,086 | 3,944 | -16.4 | -3.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: உந்து ஊர்திகள் திணைக்களம்.
இலங்கைப் புகைவண்டிப் பகுதி.
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு.
இலங்கை சிவில் வான் போக்குவரத்து அதிகாரசபை
சிறிலங்கன் எயார்லைன்ஸ்.

பேருந்துக் கட்டணக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் ஒகத்து மாதம் 1ஆந் திகதியிலிருந்து பேருந்துக் கட்டணங்களில் ஆண்டுக்கொரு முறை திருத்தம் மேற்கொள்வது பற்றிக் கவனத்திலெடுக்கப்படும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது செலவு அதிகரிப்பைக் கண்காணிப்பதுடன் சூத்திரத்தின் ஒவ்வொரு செலவுக் கூறிலுமுள்ள விலை அசைவுகளைக் கணிப்பீடு செய்து பொருத்தமான கட்டணத்திருத்தங்களுக்கான விதந்துரைப்பை மேற்கொள்ளும். சூத்திரத்தின் முக்கியமான கூறுகள் எரிபொருள் செலவு (27 சதவீதம்) பணியாளர் செலவு (22 சதவீதம்) திருத்த வேலைகள் (12 சதவீதம்) பணி, உராய்வுப் பொருள், ரயர் மற்றும் ரியூப்புக்கள் (11 சதவீதம்) பெறுமானத் தேய்வு (10 சதவீதம்) நிதிச் செலவு மற்றும் இடர்நேர்வு (10 சதவீதம்) மற்றும் நலன்புரிச் செலவு (8 சதவீதம்) ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. ஒரு ஆண்டினுள் டீசல் விலைகளில் விரைவான அதிகரிப்பொன்று ஏற்படும் பட்சத்தில் இடைக்கால விலைத்திருத்தமொன்று வழங்கப்படும். கட்டண நிலைகளில் தற்போதுள்ள ஒழுங்கற்ற தன்மையினைப் படிப்படியாக நீக்குவதும் அனைத்துப் போக்குவரத்து வழிகளுக்கும் பொருந்தக் கூடிய கட்டண நிலைகளில் மீள் சீராக்கம் செய்யப்படுவதுமே கட்டணக்கொள்கையிலான மேலதிக நன்மைகளாகும். சூத்திரங்களின் நியதிகளில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது 2001ஆம் ஆண்டு சனவரியில் வழங்கப்பட்ட முன்னைய கட்டணத்திருத்தங்களையும் கணக்கிலெடுத்த பின்னர் 2002ஆம் ஆண்டு யூலை 1ஆந் திகதியிலிருந்து 15 சதவீதமான பேருந்துக் கட்டண அதிகரிப்பொன்றை அனுமதித்தது. எனினும், பிரதேச போக்குவரத்துச் சபைகள் இழப்பில் தொழிற்பட்டுக் கொண்டிருந்த போதிலும் அரசின் வழிகாட்டலின் படி 2002ஆம் ஆண்டில் பேருந்துக் கட்டணங்களில் திருத்தம் செய்வதைத் தவிர்த்துக் கொண்டன.

அரச துறைப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளின் மீளமைப்பு 2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அரச தொழில் முயற்சிச் சீர்திருத்த ஆணைக்குழு 11 பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் 39 சதவீதமான பங்குகளைக் கையேற்பதற்காக, தனியார் முதலீட்டாளர்கள் விருப்பு வெளிப்பாட்டினைத் தெரிவிப்பதற்கான அழைப்பை விடுத்திருந்தது. அக் கம்பனிகளின் முகாமைத்துவம் கோரலில் வெற்றி பெறுவோருக்கு வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து 6 பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளை முகாமை செய்வதற்காக முதலீட்டாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதுடன் இதன் நடவடிக்கைகள் பற்றி 2003ஆம் ஆண்டின் முற்பகுதியில் இறுதித்தீர்மானம் எடுக்கப்படவேண்டியிருந்தது. தற்போது எஞ்சியுள்ள பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள் மயப்படுத்தபபட்ட போக்குவரத்துப்பணி மற்றும் வரையறுக்கப்பட்ட வட பிராந்திய போக்குவரத்துக் கம்பனி ஆகியவற்றைப் பன்முகப்படுத்துவதற்கான நடவடிக்கை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் போக்குவரத்து நெரிசலை, குறிப்பாக முக்கிய நகரங்களில் பாடசாலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறைப்பதற்காக பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2002ஆம் ஆண்டில் வீதியில் பயணஞ் செய்யும் ஊர்திகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்குடன் போக்குவரத்து அமைச்சு மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகியன கல்வியமைச்சுடன் இணைந்து குறிப்பாக கொழும்பிலுள்ள 10 பாடசாலைகளை உள்ளடக்கி 49 பாடசாலைப் பேருந்துக்களைத் தொழிற்படுத்தின. எனினும், முக்கிய நகரங்களில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு நியாயமான நீண்டகாலக் கொள்கையும் ஒருமித்த முயற்சிகளும் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

தனியார் பேருந்துகளின் தொழிற்பாடுகள் அடிக்கடி பொதுமக்களின் கண்டனங்களுக்கு உள்ளாகின்றமைக்கு கவனமில்லாத செலுத்துகை, பேருந்துப் பணியாட்களின் கீழ்ப்படியாத நடத்தை, தொழில்நுட்ப ரீதியில் பொருத்தமற்ற ஊர்திகள், மற்றும் போக்குவரத்து விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை மீறுதல் ஆகியனவே முக்கிய காரணங்களாகும். இவ்வாண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போக்குவரத்து வழிகளின் அனுமதி நிலைமை மீறப்படுவதைக் கண்டு பிடிப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பேருந்துகள் மீது சரிபார்த்தலை மேற்கொண்டது.

2002ஆம் ஆண்டில் உந்து போக்குவரத்துத் திணைக்களம் 2001ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 72,634 ஊர்திகளுக்கெதிராக 113,351 ஊர்திகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும் 2001ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஊர்திகளின் பதிவே, கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டவற்றில் ஆகக் குறைந்ததாகக் காணப்பட்டது. இதற்கு 2001ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சுருக்கமே காரணமாகும். சலுகை அடிப்படையிலான தீர்வை அனுமதிப்பத்திரங்கள் 2000ஆம் ஆண்டில் முடிவுற்றமையும் இவ்வீழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. 2002ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஊர்திகளின் மொத்த எண்ணிக்கை 1,429 பேருந்துக்களையும் 20,876 முச்சில்லு வண்டிகளையும் 54,762 உந்து ஈருருளிகளையும் மற்றும் 12,003 உந்து வண்டிகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் உந்துப் போக்குவரத்துத் திணைக்களம் தனது வாடிக்கையாளர்களுக்கு உதவும் முகமாக பல்வேறு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. இதன்படி, திணைக்களமானது, ஒரு நாள் பணியை ஊர்தி மாற்றல்களுக்கும் ஒரு நாள் பணியை புதிய பதிவுகளுக்குமான கிறீன் சனல் பணி எனப்படும் பணிக்குமென அறிமுகப்படுத்தியது. பதிவுகளில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்கும் நோக்குடன் புதிய பதிவுகள் மேற்கொள்ளப்படும் போதான ஊர்திப் பரிசோதனையை உந்துப் போக்குவரத்துத் திணைக்களம் மீளப் பெற்றுக் கொண்டது. அதேவேளையில் உந்து ஈருருளிகளின் புதிய பதிவானது, பதிவு செய்யும் அதிகாரத்தை உரிய பிரதேச செயலகங்களுக்குக் கையளிப்பதன் மூலம் பன்முகப்படுத்தப்பட்டது.

### புகைவண்டிப் போக்குவரத்து

நிதியியல் நெருக்கடிகள் மற்றும் தொழிற்பாட்டுத் திறனின்மை ஆகியன காணப்பட்ட நிலையிலும் இலங்கைப் புகைவண்டிப் பகுதியானது 2001ஆம்

ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டில் தொழிற்பாடுகளின் அளவு நியதிகளில் சிறிதளவான முன்னேற்றமொன்றைக் காட்டியிருந்தது. பொருட்களைக் கொண்டு செல்லல் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை எடுத்துக் காட்டியுள்ளது.

இலங்கை புகையிரதப் பகுதியின் பயணிப் போக்குவரத்துப் பிரிவில் பல்வேறு தொழிற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் தர அடிப்படையிலான பின்னடைவுகள் காணப்பட்ட நிலையிலும் இது 106 மில்லியன் பயணிகளைக் கொண்டுசென்று முன்னைய ஆண்டை விட 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன் விளைவாக இலங்கை புகையிரதப் பகுதியின் பயணி கிலோமீட்டர்கள் 3 சதவீதத்தால் அதிகரித்தன. இம் மேம்பாடுகளுக்கு பேருந்துகளில் பயணம் செய்தல் சார்பு ரீதியில் செலவு கூடியதாகக் காணப்படுகின்றமையினால் சில பயணிகள் வீதிப் போக்குவரத்திலிருந்து புகை வண்டிப் போக்குவரத்துக்குப் பெயர்ந்து சென்றமையே ஓரளவுக்குக் காரணமாகும். 2001ஆம் ஆண்டு செத்தெம்பரிலிருந்து சரக்குக்கட்டண வீதங்கள் 50இலிருந்து 250 சதவீதத்துக்கு உயர்த்தப்பட்ட நிலையிலும் பொருட்களைக் கொண்டு செல்லல் 2002ஆம் ஆண்டில் 20 சதவீதங் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியிருந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, புகைவண்டிப் பயணிகள் வடக்குப் பாதையில் வவுனியா வரையிலும், மன்னார் பாதையில் மதவாச்சி வரையிலும் மற்றும் கிழக்குப் பாதையில் வாழைச்சேனை வரையிலும் மட்டும் தொழிற்பட்டமைக்கு பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளின் விளைவாக புகைவண்டிப் பாதை சேதமடைந்தமை அல்லது அழிக்கப்பட்டமையே காரணமாகும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதான முன்னெடுப்புக்களால் இப்பாதைகளில் புகைவண்டிப் பணிகளை மீள ஏற்படுத்துதல் சவாலுக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. கிழக்குப் புகையிரதப் பாதையில் மட்டக்களப்பு வரையிலுமான பாதையை மீள அமைப்பதற்கான முயற்சிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வவுனியாவிலிருந்து காங்கேசன் துறை வரையிலுமான வடக்குப் பாதையிலும் (155 கிலோ மீட்டர்கள்) மற்றும் மன்னார்ப் பாதையிலும் (107 கிலோ மீட்டர்கள்) முழுமையான மீளமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. வடக்கு மற்றும் தெற்குப் புகைவண்டிப் பாதைகளில் மீள அமைப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்காலிக மதிப்பீடுகளின் படி, மீளமைப்பு நடவடிக்கைகளுக்கும் இப்பாதைகளில் புகைவண்டிப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்குமாக ரூ.8,000 மில்லியன் கொண்ட தொகையொன்று தேவைப்படுகின்றது. மட்டக்களப்புப் பாதை மீதான மீளமைப்பு வேலைகள் (30 கிலோ மீட்டர்கள்) ஏற்கனவே 2002ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை புகையிரதப் பகுதியின் செயற்றிறனற்ற தொழிற்பாடு தொடர்பாக தொடர்ச்சியான தடைகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. கேள்வியை ஈடு செய்யவும் நேர அட்டவணைகளின் படி தொழிற்படவும் 151 புகைவண்டி எந்திரங்கள் தேவைப்பட்ட போதிலும் இலங்கைப் புகையிரதப் பகுதியிடம் நாளாந்தத் தொழிற்பாடுகளுக்கான 133 புகை வண்டி எந்திரங்களும் பவர் செட்டுக்களும் மட்டுமேயுள்ளன. தற்போதுள்ள பழையதும் பாவனைக்குதவாதவையுமான புகைவண்டிப் பெட்டிகள் மற்றும் தேய்வடைந்து செல்லும் புகைவண்டிப் பாதை, தரம் குறைந்த கிடைக் கட்டைகள், சிலிப்பர்க் கட்டைகள், சரளைக் கற்களுக்கான தட்டுப்பாடு மற்றும் பழைய முறைகளிலான சமிக்ஞை விளக்குகள் ஆகியனவே திருப்திகரமான பணியினை வழங்குவதையும் பாதுகாப்பு நியமங்களைப் பேணுவதையும் பாதகமாகப் பாதித்த காரணிகளாகும். 2002ஆம் ஆண்டில் 104 தடம்புரள்தல்களும், 543 புகைவண்டி எந்திரங்கள் இயங்காமையும் காணப்பட்டிருந்தன. ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 96 தடம்புரள்தல்களும், 671 புகைவண்டி எந்திரங்கள் இயங்காமையும் ஏற்பட்டிருந்தன. பயணிகளுக்கான புகைவண்டிப் பணிகளின் காலந்தவறாத தன்மையானது 2002ஆம் ஆண்டில் ஏறக்குறைய 80 – 85 சதவீதத்தில் காணப்பட்டது. மாதமொன்றுக்கு சராசரியாக புகைவண்டி எந்திரங்கள் இயங்காமை வீதமானது 2001ஆம் ஆண்டின் 56 இலிருந்து 2002ஆம் ஆண்டில் 54க்கு வீழ்ச்சியடைந்தது. இயங்கும் எந்திரங்களைப் பராமரிப்பதற்கான செலவு, அநேகமான எந்திரங்கள் மற்றும் பவர் செட்டுக்களின் பழைய தன்மை காரணமாக மிக அதிகமாகக் காணப்பட்டது. சில புகை வண்டிப் பெட்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் சந்தையில் கிடைக்கக்கூடியதாக இல்லாமையினால், அவற்றை மீள உருவாக்குவதற்காக அதிக அளவிலான பணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அரசினால் இலங்கை புகைவண்டிப் பகுதிக்காகப் பெறப்பட்ட மூலதனம் குறைவாகக் காணப்படுகின்றமை புகை வண்டிப் பணியை மேலும் வீழ்ச்சியடையச் செய்தது. அரச மற்றும் தனியார் பங்குடமையின் அடிப்படையில் சுயநிதியிடல் பொறிமுறையுடனான பரந்த அடிப்படையிலமைந்த மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மீது அதிகளவு சுமையினை ஏற்படுத்தாமல் புகையிரதப் பகுதியின் தொழிற்பாடுகளைத் தீர்ப்பதற்கு உதவுவதாக அமையும்.

இலங்கை புகையிரதப் பகுதியின் நிதியியற் செயற்பாடுகள் 2002ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இழப்புக்களைப் பிரதிபலித்தன. மொத்த வருவாய் 14 சதவீதத்தாலும் தொழிற்பாட்டுச் செலவு 10 சதவீதத்தாலும் அதிகரித்தன. கட்டணப் பணிகள் அதிகரித்த வருவாயில் 40 சதவீதத்துக்கு பொறுப்பாயிருந்தன. தொழிற்பாட்டுச் செலவிலேற்பட்ட அதிகரிப்புக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள் (10 சதவீதத்தால்) மற்றும் எரிபொருள் செலவு (26 சதவீதத்தால்) ஆகியவற்றிலேற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இதன் விளைவாக, இலங்கை புகையிரதப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு 2002ஆம் ஆண்டில் 8 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 1,966 மில்லியனாக விளங்கியது. அண்மைய ஆண்டுகளில் தொழிற்பாட்டுச் செலவு நிலையாக அதிகரித்துச் செல்லும் நிலைமையொன்றில் தொழிற்பாட்டு இழப்புக்களை ஓரளவுக்காவது ஈடுசெய்யும் வகையில் 1996 இலிருந்து புகைவண்டிக் கட்டணங்கள் சீராக்கஞ் செய்யப்படாமையை நியாயப்படுத்துவது மிகவும் கடினமாகும்.

2002இல் புகையிரதப் பகுதியின் முகாமையை குறிப்பாக திட்டமிடல் மனித மூலவள அபிவிருத்தி

மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், புகை வண்டிப் பணிகளின் செயற்றிறன் மற்றும் தரம் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இந்திய ஆய்வுக் குழுவொன்று புகை வண்டித் தொழிற்பாடுகளில் அரச தனியார் பங்குடமைகளை அறிமுகஞ் செய்வதற்கான விருப்பத் தெரிவுகள் மற்றும் உபாயங்களை அடையாளங் கண்டு கொள்வதற்காக ஆய்வொன்றினை மேற்கொண்டது. இக் குழுவின் விதந்துரைப்புக்கள் 2003ஆம் ஆண்டின் முற்பகுதியில் எதிர் பார்க்கப்படுகின்றன.

## சிவில் விமானப் போக்குவரத்து

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் மிக அவசரமாகத் தேவைப்பட்ட சீர் திருத்தங்கள் 2002ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தை மாற்றியமைப்பதன் மூலம் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அமைக்கப்பட்டதுடன் இச்சபை அதிக சுதந்திரத்துடன் வர்த்தகத் தீர்மானங்களை எடுக்கவும் உதவியது. தொழிற்பாட்டுப் பக்கத்தில் சிவில் விமானப் போக்கு வரத்துத்துறை கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செத்தெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் ஆகியவற்றின் காரணமாக முன்னைய ஆண்டில் அனுபவித்த கடுமையான பின்னடைவினைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டில் சிறிதளவிலான மேம்பாட்டினைக் காட்டியது. மிகவும் முக்கியமாக, யுத்த நிறுத்த உடன்படிக்கையுடனும் மற்றும் முன்னேற்ற மடையும் சமாதான நிலைமையிலும் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் தனியார் உள்நாட்டு விமானப் பறப்புத் தொழிற்பாடுகளுக்கு அனுமதியளித்ததுடன் 2002ஆம் ஆண்டில் பல்வேறு புதிய உரிமப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

2001ஆம் ஆண்டு யூலையில் கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல், சிறீலங்கன் எயர்லைன்சின் விமானத் தொகுதியை அரைவாசியாக 6க்குக் குறைத்தது. இதனைத் தொடர்ந்து காப்புறுதிக் கட்டணத்திலேற்பட்ட அதிகரிப்பு வானூர்திக் கட்டணங்களில் வலுக்கட்டாயமான அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக பிரபல்யம் வாய்ந்த சில பன்னாட்டு வானூர்தி நிறுவனங்கள் தமது பணிகளை கொழும்பிலிருந்து விலக்கிக் கொண்டுள்ள வேளையில் ஏனையவை உயர்வான காப்புறுதிக் கட்டணத்தைத் தவிர்க்கும் வகையில் பறப்புக்களுக்கிடையிலான இடைவெளியைக் கூட்டியதுடன் குறைந்த தரமுடைய வானூர்திகளையும் ஈடுபடுத்திக் கொண்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செத்தெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் உலகலாவிய வான் பயணக் கைத்தொழிலை மோசமடையச் செய்து முக்கியமாக விமானப் போக்குவரத்தை பாதித்து சுற்றுலாக் கைத்தொழிலைக் குறைவடையச் செய்தது. இந்நிலைமையானது உலகப் பொருளாதாரத்தில் 2001 ஆம் ஆண்டிலேற்பட்ட மெதுவான போக்கினால் மேலும் மோசமடைந்தது. இக் காரணிகளின் ஒருமித்த தாக்கம் உலகளாவிய ரீதியில் 2002ஆம் ஆண்டிலுமசிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலை மோசமாகப் பாதித்தது.

2002ஆம் ஆண்டில் 3 உள்நாட்டு வானூர்தி நிறுவனங்களை உள்ளடக்கி 32 வானூர்தி நிறுவனங்கள் இலங்கையில் தொழிற்பட்டன. ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 27 வானூர்தி நிறுவனங்கள் பன்னாட்டுப் பயணிகளை மட்டுமே வழங்கியிருந்தன. கட்டுநாயக்க பன்னாட்டு விமானநிலையத்தினூடாகக் கடந்து செல்லும் பயணிகளின் எண்ணிக்கை 6 சதவீதத்தால் அதிகரித்து 2002ஆம் ஆண்டில் 2.9 மில்லியனாக விளங்கின. வான் பயணிகளின் மொத்த எண்ணிக்கையில், 60 சதவீதமானோர் சிறீலங்கன் எயர்லைன்சில் பயணஞ் செய்திருந்தனர். அதேவேளையில், பாதுகாப்புக் காரணிகளுக்காக 1998 ஆம் ஆண்டில் அரசினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 தனியார் உள்நாட்டு வானூர்திப் பயணிகள் 2002ஆம் ஆண்டில் தமது பணிகளை ஆரம்பித்ததுடன் இவ்வாண்டில் 41,034 பயணிகளைக் கொண்டு சென்றிருந்தன. கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் கையாளப்பட்ட மொத்த சரக்குத் தொன்கள் 2002ஆம் ஆண்டில் 6 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த சரக்குத் தொன்னில் 44 சதவீதமானவை சிறீலங்கா எயர்லைன்சினால் கையாளப்பட்டிருந்தன.

சிறீலங்கன் எயர்லைன்ஸ் இவ்வாண்டில் தனது வானூர்தித் தொகுதிக்கு வானூர்தியொன்றைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மொத்தத் தொகுதியினை 9 வானூர்திகளாக்கிக் கொண்டது. 2002ஆம் ஆண்டில் சிறீலங்கா எயர்லைன்ஸ் இரு புதிய வழிகளை இந்தியாவுக்கு அதாவது பெங்களூருக்கும் புத்தகாயாவுக்கும் ஆரம்பித்ததுடன் பிராங்போட்டுக்கான பணிகளையும் ஆரம்பித்தது. 2002ஆம் ஆண்டில் சிறீலங்கன் எயர்லைன்ஸ் 42 மில்லியன் கிலோமீட்டர்கள் பறந்திருப்பதுடன் இது முன்னைய ஆண்டை விட 5 சதவீத வீழ்ச்சியைக் கொண்டதாகவும் காணப்பட்டது. அதேவேளையில், பறந்த பயணி கிலோமீட்டர்கள் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

சிறீலங்கன் எயர்லைன்சின் நிதிச் செயலாற்றம் 2002ஆம் ஆண்டில் சிறிதளவான முன்னேற் றத்தைக் காட்டியிருந்தது. 2002ஆம் ஆண்டில் சிறீலங்கன் எயர்லைன்சின் மொத்த வருவாய் 12 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ரூ. 31,583 மில்லியனாக விளங்கிய வேளையில் மொத்த தொழிற்பாட்டுச் செலவு 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 31,558 மில்லியனாக விளங்கியது. இதன் விளைவாக சிறீலங்கன் எயர்லைன்ஸ் இவ்வாண்டில் வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபமாக ரூ.25 மில்லியனை அறிவித்திருந்தது.

இலங்கை சிவில் விமானப்போக்குவரத்து அதிகார சபையானது 2002ஆம் ஆண்டு திசெம்பர் 27 இலிருந்து இயங்கத் தொடங்கிய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்ட தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அனைத்தும் இலங்கை சிவில் விமானப் போக்கு வரத்து அதிகார சபையிடம் உரிமையளிக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் படி, நாட்டின் சிவில் விமானப் போக்கு

வரத்துத் தொழிற்பாடுகளில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையே முதன்மையான ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட அதிகார சபையாக விளங்கும். மேலும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது, தேசிய வான் போக்குவரத்துக் கொள்கையொன்றை உருவாக்குதல், விமானப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பினை வழங்குதல், உரிமப்பத்திரங்கள், சான்றிதழ்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ஆகியவற்றுடன் வர்த்தக ரீதியான வான் பணிகளையும் கண்காணிக்கும்.

நாட்டின் அனுகூலமான புவியியல் இட அமைவு மற்றும் சந்தை வாய்ப்பு ஆகியவற்றின் நோக்கில் சிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலானது விரிவாக்கத்துக்கும் மற்றும் பொருளாதாரத்துக்கு அதன் பெறுமதியை கணிசமான அளவில் சேர்ப்பதிலும் பரந்தளவிலான வாய்ப்பினைக் கொண்டுள்ளது. விமான சரக்குக் கையாளலும் ஆசிய பிரதேசத்தில் வேகமாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் சரக்குக் கையாளுந் திறனானது சிங்கப்பூர் மற்றும் டுபாய் போன்ற எமது போட்டியாளர்களின் மட்டங்களில் பேணப்பட வேண்டும். உள்நாட்டு விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலும் சுற்றுலாத் தொழிலில் காணப்பட்ட மேம்பாடுகளுக்கு இசைவாக இதனை விருத்தி செய்யக்கூடிய பிரமாண்டமான வாய்ப்புக் காணப்படுவதனால் சிறப்பான கவனஞ் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

### துறைமுகப் பணிகள்

2001ஆம் ஆண்டில் ஏற்பட்ட பின்னடைவினைத் தொடர்ந்து துறைமுகப்பணிகள் 2002ஆம் ஆண்டில் உறுதியாக மீட்சியடைந்தன. யுத்த இடர் நேர்வு மிகைக்கட்டணம் படிப்படியாக நீக்கப்பட்டமையுடனும் மற்றும் 2002ஆம் ஆண்டு மாச்சிலிருந்து இது முற்றாக நீக்கப்பட்டமையுடனும் துறைமுகப் பணிகள் முன்னைய மட்டங்களுக்கு முன்னேற்றமடைந்தன. மேலும் யுத்த நிறுத்த உடன் படிக்கையின் காரணமாக துறை முகத்துக்கான பாதுகாப்புஅச்சுறுத்தல் தளர்ந்தமை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அளவுகளிலான முன்னேற்றம் மற்றும் துறைமுக உற்பத்தியாக்கத்தை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறை கள் ஆகியனவும் 2002ஆம் ஆண்டில் துறைமுகத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்த காரணிகளாகும். 2001 ஆம் ஆண்டு யூலையில் கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் இலங்கைத் துறைமுகத்தை வந்தடையும் கப்பல்கள் மீது யுத்த இடர் நேர்வு மிகைக்கட்டணம் விதிக்கப்பட்டமையின் காரணமாக, பல முக்கியமான கப்பல் நிறுவனங்கள் தமது பணிகளை கொழும்பிலிருந்து அயலிலுள்ள துறை முகங்களுக்குத் திருப்பியமையைக் கவனத்திலெடுப்பது முக்கியமானதாகும். அதேநேரத்தில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளில் நாட்டின் வர்த்தக அளவு மற்றும் பன்னாட்டு வர்த்தகம் ஆகியன அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செத்தெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக துறைமுக நடவடிக்கைகள் 2001ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. எனினும், துறைமுக உற்பத்தியாக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட காலந்தவறாத வழிமுறைகள் மற்றும் துறைமுக அதிகார சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2002ஆம் ஆண்டில் இழக்கப்பட்ட பணிகளை மீண்டும் கவருவதனை இயலச்செய்தன.

கொழும்புத் துறைமுகத்தைவந்தடையும் அனைத்து வகையான கப்பல்களும் 2002ஆம் ஆண்டில் 6 சதவீதத்தால் அதிகரித்து 3,787 ஆக விளங்கின. எனினும் காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களை வந்தடையும் கப்பல்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளையில் கொள்கலன் போக்குவரத்து 2001ஆம் ஆண்டின் 2,891 இலிருந்து 5 சதவீதத்தால் அதிகரித்து 2002ஆம் ஆண்டில் 3,033 ஆக விளங்கிய வேளையில் வழமையான கப்பல்களின் வருகைகள் 7 சதவீத அதிகரிப்பை அறிவித்திருந்தன.

கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் கையாளல் 2 சதவீதத்தால் விரிவடைந்து 1,764,694 இருபது அடி சம அலகுகளாக விளங்கின. இதுவே கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலனில் பொருட்களை நேரடி இடுதலிலான கையாளலில் முன்னெப்போதும் காணப்படாத அதிகரிப்பாகக் காணப்படுகின்றது. இவ்வாண்டில் கப்பலுக்கு மாற்றியேற்றுதலும் 2 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் உள்நாட்டுக் கொள்கலன் கையாளல் 3 சதவீத வளர்ச்சியை அறிவித்திருந்தது. 2002ஆம் ஆண்டில் அனைத்து மூன்று துறைமுகங்களிலும் கையாளப்பட்ட மொத்தச் சரக்கு 5 சதவீதத்தால் அதிகரித்து 28 மில்லியன் மெற்றிக் தொன்களாக விளங்கியது.

2002ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் காணப்பட்ட மேம்பட்ட செயலாற்றத்துக்கு சவுத் ஏசியா கேற்வே ரேமினல்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்டினது தொழிற்பாடுகளே முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தன. மொத்த சரக்குக் கையாளலில் இந்நிறுவனத்தின் பங்குகள் மேலும் அதிகரித்து 2001ஆம் ஆண்டின் 13 சதவீதத்திலிருந்து 2002இல் 21 சதவீதத்தால் மேலும் அதிகரித்தன. இதன் விளைவாக கொள்கலனில் நேரடியாகப் பொருட்களை இடுதல் மற்றும் கப்பலுக்கு மாற்றியேற்றும் கொள்கலன் கையாளல் ஆகியவற்றின் நியதிகளில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயலாற்றமானது முறையே 14 சதவீதத்தாலும், 12 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. இலங்கை துறைமுக அதிகார சபையின் நடவடிக்கைகளின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாக ஜெயா கொள்கலன் முனைச்சோடி, மணல் வாருதல் மற்றும் விரிவாக்க வேலைகளுக்காக பல மாதங்களுக்கு மூடப்பட்டமை, கொழும்பு துறைமுகத்தில் சாமான்களை ஏற்றும் தளத்தில மேற்கொள்ளப்பட்ட யூனிற்றி கொள்கலன் முனைச்சோடியின் கட்டுமான மற்றும் ஏனைய கட்டுமான வேலைகளுக்காக இம்முனைச்சோடி மூடப்பட்டமை ஆகியன காணப்படுகின்றன. எனினும், சவுத் ஏசியா கேற்வே ரேமினல்ஸ் லிமிட்டெடடின் பொதுவான துறைமுக நடவடிக்கைகள் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்தன. சவுத் ஏசியா கேற்வே ரேமினல்ஸ், கொள்கலனில் சரக்குகளை நேரடியாக இடுதலில் 69

## அட்டவணை 5.9
## துறைமுகப் பணிகளின் செயலாற்றம்

| விடயம் | 2000 | 2001 | 2002(அ) | சதவீத மாற்றம் 2001 | சதவீத மாற்றம் 2002(அ) |
|---|---|---|---|---|---|
| 1. வருகை தந்த கலங்கள் (எண்ணிக்கை) | 4,232 | 4,014 | 4,062 | -5 | 1 |
| கொழும்பு | 3,832 | 3,570 | 3,787 | -7 | 6 |
| காலி | 97 | 117 | 76 | 21 | -35 |
| திருகோணமலை | 303 | 327 | 199 | 8 | -39 |
| 2. கையாளப்பட்ட மொத்தச் சரக்கு ('000 மெ.தொன்) | 27,535 | 27,062 | 28,313 | -2 | 5 |
| கொழும்பு | 25,222 | 24,741 | 26,273 | -2 | 6 |
| காலி | 597 | 662 | 526 | 11 | -21 |
| திருகோணமலை | 1,716 | 1,659 | 1,514 | -3 | -9 |
| 3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து ('000 இ.ச.அ.) | 1,733 | 1,727 | 1,765 | 0 | 2 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 1,432 | 1,397 | 1,207 | -2 | -14 |
| சவுத் ஏசியன் கேட்வே டேர்மினல் | 301 | 330 | 558 | 10 | 69 |
| 4. மாற்றி ஏற்றல் கொள்கலன் ('000 இ.ச.அ.) | 1,181 | 1,195 | 1,218 | 1 | 2 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 959 | 959 | 848 | 0 | -12 |
| சவுத் ஏசியன் கேட்வே டேர்மினல் | 222 | 236 | 370 | 6 | 57 |
| 5. அரசிறை (ரூபா மில்லியன்) (ஆ) | 14,717 | 16,389 | 15,667 | 11 | -4 |
| கொழும்பு | 14,079 | 15,625 | 15,105 | 11 | -3 |
| காலி | 320 | 390 | 332 | 22 | -15 |
| திருகோணமலை | 318 | 374 | 230 | 18 | -39 |
| 6. செலவு (ரூபா மில்லியன்) (ஆ) | 10,744 | 12,193 | 12,870 | 13 | 6 |
| கொழும்பு | 10,272 | 11,577 | 12,212 | 13 | 5 |
| காலி | 208 | 270 | 305 | 30 | 13 |
| திருகோணமலை | 264 | 346 | 353 | 31 | 2 |
| 7. வரிக்கு முன்னான தேறிய இலாபம் (ரூபா மில்லியன்) (ஆ) | 3,973 | 4,195 | 3,930 | 6 | -6 |
| கொழும்பு | 3,807 | 4,050 | 4,026 | 6 | -1 |
| காலி | 112 | 117 | 27 | 4 | -77 |
| திருகோணமலை | 54 | 28 | -122 | -48 | 336 |
| 8. தொழில் நிலை (எண்ணிக்கை) (ஆ) | 19,344 | 18,561 | 17,910 | -4 | -4 |
| கொழும்பு | 17,411 | 16,744 | 16,157 | -4 | -4 |
| காலி | 758 | 737 | 752 | -3 | 2 |
| திருகோணமலை | 1,175 | 1,080 | 1,001 | -8 | -7 |
| 9. உற்பத்திக் குறிகாட்டிகள் (முக்கிய கலன்கள்) | | | | | |
| மணித்தியாலத்திற்கு பாரம் தூக்கி (மொத்தம்) | 15 | 16 | 24 | 7 | 50 |
| மணித்தியாலத்திற்கு பாரம் தூக்கி (தேறிய) | 17 | 18 | 26 | 6 | 44 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்திலேயே கையாளப்படுகின்றன.
இ.ச.அ. இருபது அடி சமமான கொள்கலன் அலகுகள்.

மூலம்: இலங்கை துறைமுக மேலாண்மைச் சபை.

சதவீதஅதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் கப்பலுக்கு மாற்றியேற்றும் கையாளலில் 2002ஆம் ஆண்டில் 57 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

2002ஆம் ஆண்டில் துறைமுக உற்பத்தியாக்கக் குறிகாட்டிகள் முன்னேற்றங்களைப் பிரதிபலித்தன. பிரதான பாதைக் கப்பல்களைப் பொறுத்த வரையில், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பாரந்தூக்கிகள் மணித்தியாலமொன்றுக்கு 2001ஆம் ஆண்டில் 16 முறையும் 2002ஆம் ஆண்டில் 24 முறையும் அசைந்த வேளையில் சவுத் ஏசியா கேற்வே ரேமினலின் பாரந்தூக்கிகளின்அசைவுகள் 15 இலிருந்து 25க்கு அதிகரித்தன. இலங்கை துறைமுக அதிகாரசபை முனைச்கோடிகளில் கப்பலை நிறுத்தி வைப்பதிலேற்படும் சராசரியான தாமதம் 3.2 மணித்தியாலங்களிலிருந்து 1.9 மணித்தியாலங்களுக்கு விழ்ச்சியடைந்தது.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் முகாமைப்படுத்தப்படும் முனைக்கோடிகளில் நிரூபிக்கப்பட்ட உற்பத்தியாக்க மேம்பாடுகள் குறிப்பாக ஜெயா கொள்கலன் முனைக் கோடியில் காணப்பட்டமை இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட தொழிற்பாட்டு மீளமைப்புக்களினாலேயே ஏற்பட்டனவாகும். தொழிற்பாட்டு அலுவலர்களுக்கு கப்பல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட "விரைவுப்பணம்"முறை இல்லாதொழிக்கப்பட்டு இதற்கு மாற்றீடாக உற்பத்தியாக்க அடிப்படையிலான இலக்குடனான சிறப்புக் கொடுப்பனவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அரச விடுமுறை நாட்களில் சரக்குக் கையாளல் தொழிற்பாடுகள் மற்றும் ஊழியர்களுக்கான சிறந்த போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்ற ஏனைய வழிமுறைகள் என்பனவும் உற்பத்தியாக்க மேம்பாட்டுக்குப் பங்களித்த காரணிகளாகும். தாக்குப்பிடிக்கக் கூடிய அடிப்படையில் துறைமுக உற்பத்தியாக்கத்தை மேம்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கைத் துறைமுக அதிகார சபை தேவைக்கு மேலதிகமாகவுள்ள அலுவலரைக் குறைக்கும் வகையில் நிண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இலங்கை துறைமுக அதிகாரசபையானது 17,910 ஆட்களைக் கொண்ட தொழிற்படையினை 2002ஆம் ஆண்டின் இறுதியில் கொண்டிருந்தது. இது தேவைப்படும் மட்டத்தினை விட ஏறக்குறைய இரு

மடங்கு பெரியதாகக் காணப்படுகின்றது. சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் துறைமுகப் பணியிலிருந்து 2,993 ஊழியர்கள் ஓய்வுபெற்றனர்.

உற்பத்தியாக்கத்திலேற்பட்ட மேம்பாடுகளுடன் இலங்கைத்துறைமுக அதிகார சபையானது 2002ஆம் ஆண்டில் ஏழு புதிய பிரதான கப்பல் பணிகளைக் கவரக் கூடியதாயிருந்தது. இலங்கை துறைமுக அதிகார சபை, “ஹன்சின் சிப்பிங் லைன்”, “மேர்ஸ்க் சீலண்ட்”உலகிலேயே மிகப் பெரிய கொள்கலன் தொழிற்பாட்டாளர்) ஆகியவற்றுடனும் நான்காவது பெரிய கப்பற்படுத்தல் நிறுவனமான ஏபிஎல் லுடனும் முனைவுக்கோடி பணிகள் உடன்படிக்கையொன்றில் பிர வேசித்தது.

துறைமுகப் பணிகள் மற்றும் கப்பற்படுத்தல் துறையினைக் கவனத்திலெடுக்கையில் இலங்கையானது இந்து சமுத்திரத்தில் உபாய அடிப்படையிலான தனது கேந்திர நிலையமாக இருப்பதிலிருந்து ஆகக்கூடிய வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்படவில்லையென்பது பரந்த அளவில் கலந்துரை யாடப்பட்டுள்ளது. இதன் நோக்கில் அரசானது இர ண்டு முக்கிய துறைமுகச் செயற்றிட்டங்களான கொழும்பு தெற்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகியவற்றை ஆரம்பித்துள்ளது. 2002ஆம் ஆண்டில் இத்துறைமுகச் செயற்றிட்டங்களுக்கான முன் சாத்திய வள ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் நிதியியல் செயலாற்றம், 2002ஆம் ஆண்டில் மேம்பாடு எதனையும் காட்டவில்லை. மொத்த வருவாய் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 15,667 மில்லியனாக விளங்கிய வேளையில் தொழிற்பாட்டுச் செலவு 6 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 12,870 மில்லியன்களாக விளங்கியது. இதன் விளைவாக, இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் வரி மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளுக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம் ரூ.3,930 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 சதவீத வீழ்ச்சியை பிரதிபலித்தன.

## 5.7 நீர்ப்பாசனமும் குடியேற்றத் திட்டமும்

இவ்வாண்டில் உள்நாட்டு ரீதியாக நிதியிடப்பட்ட 19 செயற்றிட்டங்களின் மீது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ரூ.428 மில்லியன் கொண்ட தொகை செலவிடப்பட்டது. வெளிநாடுகளில் நிதியிடப்பட்ட இரண்டு முக்கிய செயற்றிட்டங்களான அம்பாந்தோட்டை நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டம் மற்றும் வெலிஓயா திசைதிருப்பும் திட்டம் என்பவற்றிற்காக 2002ஆம் ஆண்டில் ரூ.270 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் நீர்ப்பாசனத் திணைக்களம் அரசின் கொள்கையான “வப்கவுல” நிகழ்ச்சித்திட்டத்தினூடாக முக்கிய மற்றும் நடுத்தர திட்டங்களில் பங்குகொள்ளும் நீர்ப்பாசன முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தியது. “வப்கவுல” நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது வேளாண்மையாளரின் வருமானத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட, நன்மையளிக்கும் பங்கேற்புடன் முன்னேற்றமடைந்த நீர் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக வினைத்திறன், விளைவுதிறன் மற்றும் நிலைத்து நீடித்திருக்கக்கூடிய இணை முகாமைத்துவத்தை வசதிப்படுத்துவதாகும். தற்போது, மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 89,000 எக்டேயரை உள்ளடக்கும் 200 திட்டங்கள் காணப்படுகின்றன. இவ்வாண்டில், 1,143 குடும்பங்கள் உடவளவை முறையின் கீழ் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 5.8 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

### வீடமைப்பு

பொருளாதார மீட்சி மற்றும் வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களின் காரணமாக 2002ஆம் ஆண்டில் வீடமைப்புக்கான கேள்வி வேகமாக விரிவடைந்ததைக் காணக்கூடியதாயிருந்தது. அரசு, தனது வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களைக் குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களை இலக்கு வைத்தே விரைவு படுத்தத் தீர்மானித்துள்ளது. 2002ஆம் ஆண்டில் அரசு சிறப்பு வீடமைப்புக் கடன் திட்டமொன்றினை வட்டி உதவு தொகைக் கூறுடன் அறிமுகஞ் செய்தது. மேலும், அரசதுறை வீடமைப்பு நிதி நிறுவனங்கள் மற்றும் தனியார் வீடமைப்பு நிதி நிறுவனங்கள் தமது வீடமைப்பு நிதியிடல் செயற்றிட்டங்கள் மேலும் விரிவடையச் செய்தன. அனைத்து வீடமைப்பு நிதியிடல் நிறுவனங்களும் 2002ஆம் ஆண்டில் 83,698வீடமைப்புக் கடன்களை வழங்கியுள்ளன. ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 58,760 கடன்களை வழங்கியிருந்தன. நாட்டில் ஏறக்குறைய 400,000 வீடமைப்பு அலகுகளைக் கொண்ட பற்றாக்குறை இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள அதிக எண்ணிக்கையிலான வீடமைப்பு அலகுகள் நியமத் தரத்துக்குக் குறைந்தவையாகக் காணப்படுவதுடன் இவை மீளமைப்பை வேண்டி நிற்கின்றன.

அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களின் வீடமைப்புத் தேவைகளை ஈடுசெய்வதிலேயே முக்கிய கவனத்தைச் செலுத்துகின்ற வேளையில், தனியார்துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடுத்தர மற்றும் உயர் வருமானக் குடும்பங்களில் குறிப்பாக நகரத்துறையில் தமது கவனத்தைப் பெருமளவில் செலுத்தியுள்ளன. அரசானது, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அவை தமது வீடுகளைக் கட்டுவதற்கும் அல்லது தரமுயர்த்தவுமென நேரடியான உதவியினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. செலவினைத் தாங்கிக் கொள்ளக் கூடிய வீடமைப்பின் வழங்கலில் அதிகரிப்பையேற்படுத்தும் நோக்குடன் நடுத்தர அடர்த்தியுடைய வசிப்பிட வீடமைப்புச் செயற்றிட்டங்களின் கட்டடவாக்கத்தினைக் கையேற்கக் கூடிய தனியார் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுச்சபை கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்குகின்றது. அதேவேளையில், சேரிகள் மற்றும் சிறுகுடிசைகளில் வசிப்பவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்காக சிறப்பு வீடமைப்புச் செயற்றிட்டங்களை அரசு தொடர்ந்தும் கையேற்று முதன்மை வாய்ந்த நகரப்புற நிலங்களை வர்த்தக நோக்கங்களுக்காக விடுவித்தது.

வீடமைப்புக்கான நிலங்களின் பற்றாக்குறை, குறிப்பாக நகரப் பகுதிகளிலான பற்றாக்குறை, உரிமைபபத்திர ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதிலான தாமதங்கள் மற்றும் இடர்பாடுகள்

**அட்டவணை 5.10**
**அரச துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்**

| துணை நிகழ்ச்சித் திட்டம் | தொடங்கப்பட்ட அலகுகள் (எண்.) | | முற்றுப்பெற்ற அலகுகள் (எண்.) | | பகிர்ந்தளிக்கப்பட்டவை (ரூ. மில்லியன்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002(அ) | 2001 | 2002(அ) | 2001 | 2002(அ) |
| ஜன உதான நிகழ்ச்சித் திட்டம் | 2,095 | 9,162 | 5,212 | 9,029 | 84.2 | 208.6 |
| கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| பகுதிக் கடன்கள் மற்றும் கொடை நிகழ்ச்சித் திட்டம் | 16,493 | 13,446 | 19,326 | 12,726 | 108.9 | 11.4 |
| நகர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| பகுதிக் கடன்கள் மற்றும் கொடை நிகழ்ச்சித் திட்டம் | 1,615 | - | 2,230 | - | 8.3 | - |
| பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 1,113 | 3,325 | 1,192 | 3,391 | 34.6 | 64.2 |
| நேரடி கட்டடவாக்க நிகழ்ச்சித் திட்டம் | 490 | - | 1,226 | 705 | 350.0 | 196.7 |
| பேரழிவு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 492 | - | 536 | - | 15.7 | - |
| கடற்றொழில் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | - | - | 83 | - | 0.1 | - |
| பிரதேச கம்உதாவ நிகழ்ச்சித் திட்டம் | - | 583 | - | 294 | - | 8.4 |
| மொத்தம் | 22,298 | 26,516 | 29,805 | 26,145 | 601.8 | 489.3 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.

ஆகியன வீடமைப்பு நிதிச் சந்தையின் வளர்ச்சியைத் தடைசெய்தன. மேலும், சுவர்ண பூமி மற்றும் ஜயபூமி உறுதிகள் தனியார் நிதியிடல் நிறுவனங்களினால் ஈடாகப் பெறப்படுவதில் காணப்படும் கட்டுப்பாடும், தனியார் துறை வீடமைப்பு நிதி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றன. கூட்டாதிக்க உரிமைகளில் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன்கள் வழங்குவதிலும் நிதியியல் நிறுவனங்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளமைக்கு அத்தகைய வீடுகளின் சொத்துரிமைப் பத்திரங்கள் கூட்டாதிக்க உரிமை வீடுகள் கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் மட்டுமே கிடைக்கக் கூடியதாயிருப்பதே காரணமாகும்.

நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்காக 2002ஆம் ஆண்டில் அரசு சிறப்பு வீடமைப்புக் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீடமைப்பு நிதிநிறுவனங்களினூடாக ஒவ்வொன்றும் ரூ. 500,000 வரையிலான 10,000 வீடமைப்புக் கடன்களை 15 ஆண்டுகள் கொண்ட மீளச் செலுத்தும் காலப்பகுதியுடன் ஆண்டொன்றுக்கு 10.5 சதவீதங்கொண்ட உதவுதொகையளிக்கப்பட்ட வட்டி வீதத்தில் வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. 2003ஆம் ஆண்டில் வட்டி உதவுதொகைக் கூறுக்காக ரூ. 300 மில்லியனை அரசு ஒதுக்கியுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கடற்றொழில் மற்றும் சமுத்திர மூலவளங்கள் அமைச்சு மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு ஆகியன அரசதுறை வீடமைப்பு வழங்கலில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஜன உதான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆகிய முக்கியமான அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான உச்ச நிறுனமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை விளங்குகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் கிழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது ஆகக்கூடிய கடனாக ரூ. 50,000 கொண்ட தொகையினை நன்மை பெறுநர் ஒருவருக்கு வீடு கட்டுவதற்காக அல்லது தனது சொந்த வீட்டினைத் தரமுயர்த்துவதற்காக வழங்குகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னைய ஆண்டுடனொப்பிடுகையில் 2002ஆம் ஆண்டில் அதிகரித்த செயலாற்றத்தினை எடுத்துக் காட்டியிருந்தன. இச்சபை பிரதேச கம் உதாவ என அழைக்கப்படும் புதிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நுவரெலியா, அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் கிராமிய சமூகத்தின் வாழ்க்கை நிலைமைகளைத் தரமுயர்த்தும் நோக்குடன் 2002ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது கடன்கள் மற்றும் கொடைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை வழங்குவதனூடாக அவற்றுக்கு உதவியளித்தது. அடிப்படைப் பயன்பாட்டுப்பணிகள் மற்றும் பொது வசதிகளும் ஏனைய அரச முகவர் நிலையங்களின் உதவியுடன் வழங்கப்பட்டன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான மொத்தப் பகிர்வுகள் 2002ஆம் ஆண்டில் 19 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 489 மிலியனாக விளங்கின. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியிடல் தேவையானது முன்னைய கடன்களை மீளப் பெற்றமையினாலேயே ஓரளவுக்கு நிதியிடப்பட்டது. தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கான அரசின் மாற்றல்கள் 2002இல் ரூ. 230 மில்லியனாக விளங்கின. 2002இல் கட்டடவாக்கம் ஆரம்பிக்கப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 19 சதவீதத்தால் அதிகரித்தது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கடன் மீட்பு வீதமானது 2001ஆம் ஆண்டின் 70 சதவீதத்திலிருந்து 2002 இல் 84 சதவீதத்திற்கு முன்னேறியது.

கடற்றொழில் மற்றும் சமுத்திர மூலவள அமைச்சு தொடர்ந்தும் தியவரகம்மான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. 2002ஆம் ஆண்டில் 426 வீடமைப்பு அலகுகளுடனான

4 வீடமைப்புத் திட்டங்கள் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நிறைவு செய்யப்பட்டன. இந்நோக்கத்துக்காகக் கடற்றொழில் மற்றும் சமுத்திர மூலவள அமைச்சு ரூ. 3.5 மில்லியனை பகிர்ந்தளித்தது. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பானது பெருந்தோட்ட மனிதஅபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டத்துறையில் பல்வேறு வீடமைப்பு நிருமாணம் மற்றும் தரமுயர்த்தல் நிகழ்ச்சித்திட்டங்களை 2002ஆம் ஆண்டில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. பெருந்தோட்ட அபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நேரடியாக நிதியிடப்பட்ட வீடமைப்புநிருமாண நிகழ்ச்சித் திட்டம், தோட்டத்துறை ஊழியர் ஒருவருக்கான ரூ. 40,000 கொண்ட கொடையொன்றையும் ரூ. 45,200 கொண்ட கடன் கூறொன்றையும் உள்ளடக்கி ரூ. 85,200 கொண்ட தொகையை வழங்குகின்றது. மேலும், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடனும் வர்த்தக வங்கிகளுடனும் இணைந்து பல்வேறு ஏனைய வீடமைப்பு நிருமாண மற்றும் தரமுயர்த்தல் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. 2002 ஆம் ஆண்டில் 2,216 புதிய வீடமைப்பு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில், 511 அலகுகள் பெருந்தோட்ட அபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தர முயர்த்தப்பட்டன. மேலும், பெருந்தோட்ட அபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித்திட்டமும் பெருந்தோட்டப் பகுதியில் தற்போதுள்ள குடியிருப்புக்களுக்கு, நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் நலம் மற்றும் நலன்புரி வசதிகள் ஆகியவற்றையும் வழங்கியுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மொத்தச் செலவு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2002ஆம் ஆண்டில் ரூ. 167 மில்லியனாக விளங்கியது.

குறை வசதிகளைடைய குடியிருப்புக்களில் (சேரிகள் மற்றும் சிறு குடிசைகள்) வசிக்கும் மக்களின் வீடமைப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தாக்குப் பிடிக்கக் கூடிய நகர நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் றியல் எக்ஸ்சேன்ஜ் (பிறைவேட்) லிமிட்டட்டின் முகாமையின் கீழ் தொழிற்பட்டது. தாக்குப்பிடிக்கக்கூடிய நகர நிகழ்ச்சித் திட்டம் சுய நிதியீட்டில் மாதிரியொன்றாக 1999 இல் ஆரம்பிக்கப்பட்டது. குறை வசதிகளையுடைய குடியிருப்புக்களில் வசிக்கும் 66,000 குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும். லசகசள என அழைக்கப்படும் முதலாவது வீடமைப்புத் தொகுதி 671 வீடமைப்பு அலகுகளைக் கொண்டுள்ளதுடன் தற்போது இதன் வேலைகள் முடிவடையும் தறுவாயிலுள்ளன. இச் செயற்றிட்டமானது, கொழும்பு நகருக்குள் முதன்மை வாய்ந்த நிலங்களில் 9.74 ஏக்கர்களை விடுவிப்பதனை றியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஞ் (பிறைவேற்) லிமிட்டெட்டிற்கு இயலச் செய்தது. றியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஞ் லிமிட்டெட், 2003 - 2006 காலப்பகுதியில் 20,000 வீடுகளை நிர்மாணிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியன இணைந்து 25,124 வீடமைப்புக் கடன்களை 2002ஆம் ஆண்டில் வழங்கியிருந்தன. ஒப்பிடுகையில் 18,994 2001ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. அதேவேளையில், வர்த்தக வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நஷனல் வங்கி, செலான் வங்கி, வர்த்தக வங்கி ஆகியன இணைந்து 2002ஆம் ஆண்டில் 43,677 வீடமைப்புக் கடன்களை வழங்கிய வேளையில், 2001ஆம் ஆண்டை விட 92 சதவீத வளர்ச்சியை பிரதிபலித்தது.

## நகர அபிவிருத்தி

அரச துறையினால் நிதியிடப்பட்ட நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது 2002ஆம் ஆண்டில் நிதியங்களின் பற்றாக்குறை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டது. முக்கியமாக இறைக்கட்டுப்பாடுகளின் காரணமாக, முதன்மைச் செயற்றிட்டங்களுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் 2002ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மேற் கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த நகர அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ஒன்றில் பிற்போடப்பட்டோ அல்லது மெதுவாக முன்னேற்றமடைந்தோ காணப்பட்டதுடன் புதிய செயற்றிட்டங்களை ஆரம்பித்தலும் பிற்போடப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நாட்டிலுள்ள முக்கிய நகரப் பகுதிகளில் திட்டமிட்ட அபிவிருத்தியை மேற்கொள்ளும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதன் தொழிற்பாடுகள் நகர அபிவிருத்திக்கான புதுமையான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடலினூடாக வழிநடத்தல், இலகுவாக்கல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் சீரான தொழிற்பாடு மற்றும் நகரத்திலுள்ள சமூகங்களின் பொருளாதார மற்றும் சமூக நலன்கள் ஆகியவற்றுக்கு செயற்றிறன் வாய்ந்த நகர உட்கட்டமைப்பு முறையொன்று மிக இன்றியமையாததாகும். தற்போதைய குடித்தொகை வளர்ச்சி மற்றும் நகரமயப்படுத்தல் போக்கானது தொடர்ந்தும் காணப்படுமானால், 2010ஆம் ஆண்டளவில் நகரப் பகுதிகளில் மதிப்பிடப்பட்ட குடித்தொகையில் அரைப்பங்கினர் வசிக்கக் கூடியதாயிதருக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசதுறையில் காணப்படும் நிதியியல் ரீதியான கட்டுப்பாடுகளைக் கவனத்தில் எடுக்கையில் சாத்தியமான இடங்களில் நகரப் பொது வசதிகளை வழங்குவதில் தனியார்துறைப் பங்களிப்புக்காக உதவக்கூடிய குழுவொன்று உருவாக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

கொழும்பு நகரத்திலும் ஏனைய முக்கியமான நகரப்பகுதிகளிலுமான நகரப்பணிகளை மேலும் விரிவாக்குவதற்கு இடவசதி போதாமை முக்கியமான தடைகளுள் ஒன்றாகக் கூறப்படுகின்றது. இதனைப் பொறுத்தவரையில், நகரப்பணிகளின் விரிவாக்கத் துக்காக கொழும்பு நகரத்திலுள்ள உற்பத்தியாகமற்ற மற்றும் வெறுமையான காணிகளை அடையாளங் காண்பதற்காக செயற்றிட்டமொன்று வடிவமைக்கப் பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான அதிக அளவினையுடைய உற்பத்தியாக்கமற்ற நிலங்கள் அபிவிருத்தி வேலைக்குத் தடையாக அமைந்துள்ளமை அடையாளங் காணப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நகர பிரதேசஅமைப்புத்திட்டத்தில் வலியுறுத்தப் பட்டவாறு பெறுமதியான காணிகளை விடுவிக்கும் நோக்குடன் பெரும்பாலான நிருவாக நிறுவனங்களை

கொழும்புக்கு வெளியே மாற்றியமைத்து நகரத்தை வர்த்தக மையமொன்றாக விருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதுடன், இதனுடன் மிகத் தொடர்பான முறையில் வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் பாதுகாப்புப் பணிகளின் தலைமையகம் ஆகியவற்றைத் திட்டமிட்டபடி வேறு இடங்களில் அமைத்தலானது நிதியியல் வரையறைகளின் காரணமாக பிற்போடப்பட்டது. தாக்குப் பிடிக்கக்கூடிய நகரப்புற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொழும்பு நகரத்தில் ஏறக்குறைய 600 ஏக்கர்கள் கொண்ட காணியின் விடுவிப்பு வலியுறுத்தப்பட்டது. இதன் கீழ் 66,000 வசதிகள் குறைந்த குடும்பங்கள் வேறு இடத்தில் மீள அமைக்கப்படுவதன் மூலம் இக் காணி வேறு தேவைகளுக்கு பயன்படும்.

2002ஆம் ஆண்டில், பேரைவாவி மீள அபிவிருத்திச் செயற்றிட்ட வேலைகள், மாலபேயிலுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் கட்டுமான வேலை, புறக்கோட்டையிலுள்ள மொத்த விற்பனைச் சந்தையை வேறு இடத்தில் அமைத்தல் ஆகியன தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மாலபேயில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காவை அடைவதற்கான வீதி மற்றும் இதே செயற்றிட்டத்துக்கான உட்கட்டமைப்பு வசதியின் நிருமாணத்துக்காக காணியைக் கையேற்றல் ஆகியன 2002ஆம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இச் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 900 மில்லியன்னாகக் காணப்பட்டது. இப்பூங்காவில், இரண்டு தகவல் தொழில்நுட்பக் கம்பனிகள் ஏற்கனவே பூங்காவிற்கு நகர்ந்த வேளையில் 7 கம்பனிகள் பூங்காவில் காணிகளைப் பெறுவதற்குக் காத்திருக்கின்றன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான தொழிற்பாட்டு நடவடிக்கைகளாவன, நிருவாகத் தொகுதிகள், வர்த்தகத் தொகுதிகள், பட்டின முன்னேற்றச் செயற்றிட்டங்கள், கைத்தொழில் செயற்றிட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும் சமூக கலாச்சார செயற்றிட்டங்கள் ஆகியவற்றின் நிருமாணத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபை, அரச துறை நிறுவனங்களின் சார்பில் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியதுடன், காணி வங்கியைத் தொடர்ந்தும் பேணியது. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கான மொத்தச் செலவு ரூ. 481 மில்லியனாக விளங்கி, முன்னைய ஆண்டைவிட 63 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இச் செயற்றிட்டங்களுக்கான நிதியை வழங்கும் மூலங்கள் திரண்ட நிதியம் (52 சதவீதம்), நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொந்த நிதியங்கள் (30 சதவீதம்) மற்றும் வாடிக்கையாளர் நிறுவனங்களிடமிருந்து பெற்ற நிதியங்கள் (18 சதவீதம்) ஆகியனவேயாகும். மொத்த முதலீட்டில் 66 சதவீதமானவை ( ரூ. 319 மில்லியன்) வாடிக்கையாளர் நிறுவனங்களின் சார்பில் கையேற்றுக் கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களுக்கானவையாகக் காணப்படும் வேளையில், 12 சதவீதமானவை வர்த்தகத் தொகுதிகளின் கட்டுமானத்துக்கானவையாகும். பட்டின மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் 17 பட்டினங்கள் அபிவிருத்திக்கென அடையாளங் காணப்பட்டுள்ளன. நான்கு நகரங்களுக்கான இறுதித் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன.

## நீர் வழங்கல்

சுத்தமான குடி தண்ணீர் வசதியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய குடும்பங்களின் விகிதாசாரமானது ஏறக்குறைய 70 சதவீதமாகக் காணப்படுகின்றமையை பல்வேறு அளவீடுகள் எடுத்துக் காட்டியுள்ளதுடன் இவற்றில் 35 சதவீதம் மட்டுமே குழாய் நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. தேசிய நீர்வழங்கல் கொள்கையின் முக்கியமான நோக்கம் என்னவெனில், 2010ஆம் ஆண்டளவில் அனைத்து வதிவாளர்களுக்கும் சுத்தமான குடி நீரைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதேயாகும். தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2005 ஆம் ஆண்டளவில் நீர்வழங்கல் மேற்கொள்ளப்படும் பகுதியை ஏறக்குறைய 80 சதவீதத்துக்கு விரிவாக்கத்தை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், தற்போது ஏறக்குறைய 31 சதவீதமாகக் காணப்படுகின்ற வருமான மற்ற நீர் விநியோகத்தில் கணிசமான அளவு குறைப்பையேற்பை ஏற்படுத்தல் மற்றும் 2005ஆம் ஆண்டளவில் நுகர்வோர் அனைவருக்கும் குடி தண்ணீர் வசதியை 24 மணித்தியாலமும் வழங்குதல் ஆகியனவே தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முக்கிய நோக்கங்களாகக் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10 பில்லியனிலிருந்து ரூ.12 பில்லியன் அளவிலான முதலீடு தேவைப்படுமென தேசிய நிர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மதிப்பிட்டுள்ளது. இலங்கை அரசு, நீர் வழங்கல் செயற்றிட்டங்களுக்கென ஆண்டொன்றுக்கு சராசரியாக ஏறக்குறைய ரூ. 5 பில்லியனை ஒதுக்குகின்றது. எனவே, முதலீட்டு இடைவெளியை நிரப்புவதற்காகவும் நிறுவப்பட்ட நோக்கங்களை அடையவும் நீர்வழங்கல் துறையில் தேவையான தொகையுடைய தனியார் முதலீடுகள் கவரப்பட வேண்டியது அவசியமாயுள்ளது. அதேநேரத்தில், சனசமூக நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசின் ஆகக் குறைந்த தலையீட்டுடன் , தொழில் நுட்ப உதவி மற்றும் அவசியமான நிறுவன ரீதியான ஆதரவு வழங்கல் ஆகியவற்றினூடாக கிராமியப் பகுதிகளில் அமைந்துள்ள நீர்ச் செயற்றிட்டங்களின் நீர் வழங்கல் மற்றும் பேணல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்க முடியும். சுத்தமான குடி தண்ணீர் கிடைக்கச் செய்வதை விரிவாக்குவதில் உள்ளூராட்சி சபைகளின் தீவிரமான பங்கும் சமமான அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தனியார் துறைப் பங்கேற்பினைக் கவனத்துக் கெடுக்கையில், பாரிய நீர்கொழும்பு மற்றும் களுத்துறையிலிருந்து காலி வரையுமான நீர் விநியோகச் செயற்றிட்டங்கள் ஆகிய இரு தனியார் துறைப் பங்கேற்புக்காக அரசினால் அடையாளங் காணப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இவ்விரு முன்னோடிப் பிரதேசங்களுக்கும் பொருத்தமான தனியார்துறைப் பங்கேற்பு மாதிரியின் சிறந்த வடிவத்தை ஆய்வு செய்வதற்காக மதியுரைஞர்கள் நியமனஞ் செய்யப்பட்டனர். 2004ஆம் ஆண்டின் முற்பகுதியில் தனியார் துறைத் தொழிற்பாட்டாளர் ஒருவரை நீர்கொழும்பில் தயார்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. தனியார்துறைப் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக, பயன்தரு செலவு மற்றும் நெகிழ்ச்சித் தன்மையுடைய விலையிடற் கொள்கை மற்றும் வலுவான ஒழுங்கு முறைப்படுத்தல் பொறிமுறை ஆகியவை நிறுவப்பட

வேண்டியது அவசியமானதாகும். இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழுவானது, அது நிறுவப்பட்டதுடன் நாட்டில் நீர்த்துறையின் ஒழுங்கமைப்புக்குப் பொறுப்பானதாயிருக்கும்.

குழாய் நீருக்கான தேவையானது குடித்தொகையிலேற்பட்ட விரிவு, நகரமயமாக்கல் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலான விரிவு ஆகியவற்றினாலும் நீர் மாசடைதல் மற்றும் இயற்கை நீர் மூலங்கள் வரண்டுபோனமை ஆகிய வற்றினாலும் உறுதியாக அதிகரித்தது. நீருக்கான பெருமளவு கேள்வி இன்னமும் ஈடுசெய்யப்பட முடியாமல் காணப்பட்டது. குழாய் நீர் தற்போது குடும்பங்களின் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதியினருக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாயுள்ளது. நீர் வழங்கல் குறைவாகக் காணப்படுகின்றமை நீர் மூலமான நோய்களின் இடர்நேர்வினை அதிகரிப்பதுடன், ஏனைய பொதுவான நல ஆபத்துக்களுக்கும் இட்டுச் செல்கின்றது.

வழங்கல் பக்கத்தில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக் சபையானது, நீர் வழங்கல் திட்டங்களின் அபிவிருத்தி, விநியோகம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான உச்ச நிறுவனமாகக் காணப்படுகின்றது. இச் சபையானது, 727,554 இணைப்புக்களைக் கொண்ட 275 நீர்வழங்கல் திட்டங்களைத் தொழிற்படுத்துகின்றது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த நீர் வழங்கல் முன்னைய ஆண்டை விட 2002 ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் அதிகரித்து, 350 மில்லியன் கன மீற்றர்களாக விளங்கியது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இவ்வாண்டில் 62,388 புதிய இணைப்புக்களை வழங்கியது.

இவ்வாண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 82 தரமுயர்த்தல் மற்றும் புனரமைப்புச் செயற்றிட்டங்களை ரூ. 406 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்தியது. இச் செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டவுடன் 1,265,000 மேலதிக மக்கள் நன்மையைப் பெறுவர்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நீர் வழங்கல் துறையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு, இரண்டு மடங்குக்கும் மேலாக பெருமளவில் அதிகரித்து 2001 ஆம் ஆண்டின் ரூ. 3,896 மில்லியனிலிருந்து 2002ஆம் ஆண்டில் ரூ. 8,159 மில்லியனாக விளங்கியது. மொத்த முதலீட்டில் 85 சதவீதமானவை புதிய செயற்றிட்டங்களுக்காவையாக காணப்பட்ட வேளையில், மிகுதியானவை தற்போதுள்ள செயற்றிட்டங்களின் புனரமைப்புக்கானவையாகக் காணப்பட்டன. ஏறக்குறைய இந்நிதியங்களின் 68 சதவீதமானவை ஆசிய அபிவிருத்தி வங்கி, பஜைவ, பன்னாட்டு அபிவிருத்தியமைப்பு மற்றும் கே.எவ்.டபிள்யு போன்ற வெளிநாட்டு நிதியிடல் முகவர் நிலையங்களிலிருந்து சலுகை நியதிகளில் பெறப்பட்டவையாகும்.

2002ஆம் ஆண்டில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பல்வேறு முக்கிய நீர்வழங்கல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறிய பட்டின நீர் வழங்கல் செயற்றிட்டம் 2002ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டம் களுத்துறை, கேகாலை, அனுராதபுரம், மொனராகலை, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 47 சிறிய பட்டினங்களில் (6,000 க்குக் குறைந்த குடித்தொகை) நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதையே இலக்காகக் கொண்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின் கீழ், நடைமுறைப்படுத்தல் நிலை, மற்றும் பேணலில் சமூகப் பங்கேற்பு எதிர்பார்க்கப்படுகிறது. 2002ஆம் ஆண்டில், 6 துணைச் செயற்றிட்டங்களின் நிருமாணவேலை தொடங்கப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, மேலே கூறப்பட்ட மாவட்டங்களில் வசிக்கும் ஒரு மில்லியன் மக்களின் நலம் மற்றும் நல்வாழ்வினை நீர்வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை முன்னேற்றுவதன் மூலமும் நலக்கல்வியின் மூலமாகவும் மேம்படுத்துவதாகும்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பஜைவ யினால் நிதியிடப்பட்ட கொழும்புக்குத் தெற்கிலுள்ள பட்டினங்களின் நீர்வழங்கல் செயற்றிட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இச் செயற்றிட்டத்தின் மீதான மொத்த மூலதன முதலீடு ரூ.2,560 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், செயற்றிட்டம் பூர்த்தியடையும் போது 260,000 பேர் நன்மையடைவார்கள். மேலும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, கொழும்புக்கு வடக்கேயுள்ள பட்டினங்களின் நீர வழங்கல் செயற்றிட்டம், நுவரெலியா நீர்வழங்கல் அதிகரிப்புச் செயற்றிட்டம், அம்பாறை மாவட்ட கிழக்குக் கரையோரப்பகுதி நீர்வழங்கல் அடையாளங் காணப்பட்ட பகுதிகளில் நீரை அனுப்புதல் மற்றும் கண்டிப் பொரும்பாக நீர் விநியோக வசதிகளைப் புனரமைத்தல் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுச் செயற்றிட்டம், களுகங்கை நீர் வழங்கல் செயற்றிட்டம் மற்றும் இரண்டாந்தரப் பட்டினங்களின் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டம் போன்ற பல நீர் வழங்கல் செயற்றிட்டங்களை 2002ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியது.

மேலும், கொழும்பிலுள்ள வருவாயற்ற நீர் விநியோகத்தினைக் குறைக்கும் நோக்குடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்றிடமொன்றை நிறைவேற்றியது. இச் செயற்றிட்டத்தின் கூறுகள் புனரமைப்பு கொழும்பிலுள்ள விநியோக வலையமைப்பினை வலுப்படுத்துதல், மாளிகாகந்த செயற்றிட்டம், எலிகவுஸ் நீர்த்தேக்கங்களைப் புனரமைத்தல் மற்றும் கொழும்பிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புக்களிலும், பொது நீர்த் தாங்கிகளிலும் நடைபெறும் வருமானமற்ற நீர் விநியோகத்தைக் குறைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

2002ஆம் ஆண்டில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த வருவாய் 13 சதவீதத்ததால் அதிகரித்து ரூ. 4,814 பில்லியனாக விளங்கியது. வருவாயிலேற்பட்ட இந்த அதிகரிப்புக்கு நுகர்வோர் வலையமைப்பிலேற்பட்ட விரிவு மற்றும் 2002ஆம் ஆண்டு யூனில் நீர்த்தீர்வையில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தம் ஆகியனவே பெருமளவு காரணங்களாகும். உள்நாட்டுத் துறைக்குப் பொருந்தக்கூடிய தீர்வை 12.5 சதவீதத்துக்கும் 87.5 சதவீதத்துக்குமிடையில் உயர்த்தப்பட்ட வேளையில்

கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளுக்குப் பொருந்தக் கூடிய தீர்வை ஏறக்குறைய 20 சதவீதத்தால் உயர்த்தப்பட்டது. தீர்வையில் ஏற்படுத்தப்பட்ட திருத்தத்துக்கான முக்கிய நோக்கங்கள் தற்போதுள்ள தீர்வை முறையிலான குறுக்கு உதவுதொகைகளைக் குறைப்பதும் நீருக்கு பொருளாதாரப் பெறுமதியொன்றைக் கொடுப்பதன் மூலம் மக்களை நீரைக் சேகரிப்பதற்குத் தூண்டுவதுமாகக் காணப்படுவதுடன் அதிகரித்துச் செல்லும் தொழிற்பாட்டுச் செலவுகளை ஓரளவுக்காவது உள்ளடக்குவதுமாகும். 2002ஆம் ஆண்டில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, 2001 ஆம் ஆண்டின் ரூ. 389 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டில் ரூ. 112 மில்லியன் கொண்ட தொகையை தேறிய தொழிற்பாட்டு இலாபமாக அறிவித்திருந்தது.

### சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

நீண்ட காலமாகக் காணப்பட்டதும், அதிக அளவில் விவாதிக்கப்பட்டதுமான சமுர்த்தி நன்மை பெறுவோரை இலக்கு வைக்கும் விடயமானது 2002ஆம் ஆண்டில் நலன்புரி நன்மைச்சட்டம் இயற்றப் பட்டமையினால் கருத்திற் கொள்ளப்பட்டது. நன்மை பெறத் தகுதியானோரை அடையாளங் காணுதல், சரியான பதிவுகள் இன்மை மற்றும் வெளிச்செல்லும் பொறிமுறை மற்றும் அரசியல் தலையீடுகள் ஆகிய சச்சரவு நிறைந்த முறையானது, சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினை தனது நீண்ட காலத் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு அப்பால் அதிகளவில் விரிவடைவதற்கு இட்டுச்சென்றது. இன்னும், அதிக எண்ணிக்கையிலான வறிய குடும்பங்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத வேளையில், தகுதியற்ற பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்கியிருந்தன. நலன்புரி நன்மைச் சட்டமானது சுதந்திரமான குழுவொன்றினால் வழங்கப்பட்ட அளவொன்றின் படி தெரிவு செய்யும் முறையினை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. நலன்புரி நன்மைச்சட்டம் நடைமுறைப்படுத்துகையில் சமுர்த்தி நன்மை பெறுவோரின் எண்ணிக்கை குறைவடைந்து உண்மையானதொரு எண்ணிக்கையை அடைவதுடன் தகுதியான குடும்பங்களுக்கு அதிகரித்த நன்மைகளை வழங்குவதனை மேலாண்மையானவர்களுக்கு இயலச் செய்வதாகவும் அமையும் சிறப்புக் குறிப்பு 16ஐப் பார்க்கவும்.)

எனினும், இந்நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தகுதியற்ற குடும்பங்களை நீக்குவதற்கான இடைக்கால வழிமுறையாக, ரூ. 2 பில்லியனை மிச்சப்படுத்தும் நோக்குடன் 2002ஆம் ஆண்டில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன்படி, பின்வரும் வழிமுறைகள் செலவைக் குறைப்பதற்காக 2002ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. (அ) சமுர்த்தி நன்மைகளை 2002ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து பெறத் தகுதியுடையவர்கள் ஆக்குவதற்கு குடும்பமொன்றுக்கான மாதாந்த வருமான உச்ச எல்லை ரூ.1000 இலிருந்து ரூ. 1,500க்கு உயர்த்தப்பட்டது. (ஆ) மாவட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டன.

**அட்டவணை 5.11**
**சமுர்த்தி நலன்புரி நிகழ்ச்சித் திட்டம்**
**நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும் 2000–2002**

| பணக்கொடை தொகை (ரூபா) | 2000 | | 2001 | | 2002 (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | குடும் பங்களின் எண் ணிக்கை | பெறுமதி (ரூ.மில்.) | குடும் பங்களின் எண் ணிக்கை | பெறுமதி (ரூ.மில்.) | குடும் பங்களின் எண் (ஆ) ணிக்கை | பெறுமதி (ரூ.மில்.) |
| **சமுர்த்தி வருமான குறை நிரப்பு நிகழ்ச்சித் திட்டம்(இ)** | | | | | | |
| ரூ. 1,000 | 10,516 | 126 | 8,968 | 108 | 3,954 | 67 |
| ரூ. 700 | 897,863 | 6,285 | 858,902 | 7,215 | 589,460 | 5,663 |
| ரூ. 400 | 521,856 | 1,957 | 487,991 | 2,342 | 335,727 | 1,860 |
| ரூ. 350 | 359,211 | 1,132 | 363,752 | 1,528 | 320,759 | 1,400 |
| ரூ. 250 | 223,857 | 437 | 233,718 | 701 | 238,593 | 701 |
| ரூ. 140 | 382 | 0.6 | 9,282 | 16 | 398,244 | 242 |
| **மொத்தம்** | 2,013,685 | 9,938 | 1,962,613 | 11,910 | 1,886,737 | 9,933 |
| **மொத்தம் (குடும்பங்கள் பெற்றுக் கொள்ளும் ரூ.140 தவிர)** | 2,013,303 | 9,937 | 1,953,331 | 11,894 | 1,488,493 | 9,691 |
| **உலர் உணவு பங்கீட்டு நிகழ்ச்சித் திட்டம்** ரூ. 336-1260(ஈ) | 154,218 | 1,684 | 168,965 | 1,818 | 145,777 | 1,453 |
| **ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டம்** ரூ. 100 (2000 ஏப்பிறலிருந்து ரூ.150) | 83,575 | 108 | 109,202 | 138 | 83,171 | 80 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) 2002 நவெம்பரில் வழங்கப்பட்ட சமுர்த்தி அட்டையின் அடிப்படையில்
(இ) 2000 ஒகத்தில் காணப்பட்ட மட்டங்களுக்கு காசுக் கொடைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது
(ஈ) இவ்வாண்டு வழங்கப்பட்ட சமுர்த்தி அட்டைகளின் அடிப்படையில்

மூலம்: வறுமை நிவாரணத் திணைக்களம்.

(இ) வடக்கு மற்றும் கிழக்கில் தீவிர பணியிலிருந்த பாதுகாப்பு ஆளணியினரின் குடும்பங்களுக்கும், வன்முறைகளின் போது காணாமற் போன ஆட்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்ட படி அட்டைகள் இரத்துச் செய்யப்பப்பட்டன. (ஈ) ரூ. 700 பெறுமதியான படி அட்டைகள் 2002ஆம் ஆண்டு நவெம்பரிலிருந்து ரூ.600க்குக் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக, சமுர்த்தி வருமானக்குறை நிரப்புத் தொகையினைப் பெறும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2002ஆம் ஆண்டின் இறுதியல் 1,488,493ஆக விளங்கியது. எனினும், தகுதியற்ற குடும்பங்கள் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து வெளியேறுவதை ஊக்குவிக்கும் நோக்குடன் பிரிந்து செல்லும் குடும்பங்கள் கட்டாய வைப்பு (ரூ. 100), சமூகப் பாதுகாப்புத் தொகை (ரூ. 30) மற்றும் வீடமைப்பு சீட்டிழுப்பு (ரூ. 10) ஆகியவற்றை ஈடு செய்யும் விதத்தில் ரூ.140ஐ மாதாந்தம் பெற்றனர். எனவே இவர்கள் ஏனைய சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து தொடர்ந்தும் நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம், உதவி தேவைப்படும் குழுவினருக்கு நேரடியான உதவியை வழங்குதல் மற்றும் சிறிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பயிற்சி, நிதியியல் மற்றும் வறியவர்களிள் வருமான மட்டத்தை உயர்த்துவற்கான சமூகப்பாதுகாப்பு போன்ற ஏனைய வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதினூடாக வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதேயாகும். சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள முக்கிய நிறுவனங்களாவன: சிறிலங்கா சமுர்த்தி அதிகார சபை, சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் மற்றும் வறுமை நிவாரணத் திணைக்களம் என்பனவாகும்.

1995 இல் ஏறக்குறைய 1.5 மில்லியனாகக் காணப்பட்ட சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் ஏறக்குறைய 1.9 மில்லியனுக்கு அதிகரித்தது. மக்கள் தொகையில் ஏறக்குறைய 50 சதவீதமானோர் நேரடி நன்மைகளைப் பெறுவதையே இது காட்டுகின்றது. இதன் விளைவாக, நிகழ்ச்சித் திட்டத்தின் செலவும் விரைவாக அதிகரித்து 1995இன் ரூ. 8 பில்லியனிலிருந்து 2001இல் ரூ. 12 பில்லியனாக விளங்கியது. அதேநேரத்தில் நிகழ்ச்சித் திட்டத்தின் அதிகமான விரிவாக்கத்தினால் நிருவாகச் செலவுகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. முழு சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினதும் மொத்த நிருவகச் செலவுகள் 2002ஆம் ஆண்டில் ரூ.75. மில்லியனாக விளங்கின.

வறுமை நிவாரணத் திணைக்களத்தின் படி, 2002ஆம் ஆண்டு யூன் இறுதியில் வருமான குறைநிரப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் படிகளை சுமார் 1.9 மில்லியன் குடும்பங்கள் பெற்றதுடன், இவ்வாண்டுக்காக மதிப்பிடப்பட்ட செலவானது ரூ. 12 பில்லியனாகக் காணப்பட்டது. எனினும் 2002ஆம் ஆண்டு மேயிலிருந்து நலன்புரிக் கொடுப்பனவுகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கத்தினாலும், நன்மை பெறுபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமையினாலும் அரசின் உண்மையான செலவு 2002ஆம் ஆண்டில் 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூ. 9,933 ஆக விளங்கியது. சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுடன் ஊட்டச்சத்துப் படிகளைப் பெறும் 83,171குடும்பங்கள் 2002ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டிருந்தன. வழங்கப்பட்ட ஊட்டச்சத்து அட்டைகளின் மொததப்பெறுமதி 2002ஆம் ஆண்டில் 42 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 80 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், 145,777 குடும்பங்கள் சமுர்த்தி உலர் உணவுத் திட்டத்தின் கீழ் 2002ஆம் ஆண்டில் ரூ. 1,453 மில்லியன் பெறுமதி கொண்ட உதவியைப் பெற்றன. இதன்படி, அனைத்து வறுமை நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களினதும் மொத்தப் பெறுமதி ரூ. 11,466 மில்லியனாக விளங்கியது.

வறுமை நிவாரணத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வருமான குறை நிரப்பு நிகழ்ச்சித் திட்டத்தோடு, இலங்கை சமுர்த்தி அதிகார சபையானது வறியவர்களுக்கு மேலதிக வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை விருத்தி செய்யும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. கிராமிய அபிவிருத்தி, வேளாண்மை அபிவிருத்தி, கால்நடை மற்றும் கடற்றொழில் அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, மனித மூலவள மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி ஆகியனவே இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் 2002ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கியமான நிகழ்ச்சித் திட்டங்களாகும். இந் நிகழ்ச்சித் திட்டங்களின் மொத்தச்செலவு ரூ. 70 மில்லியனாகக் காணப்பட்டது.

சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியினைப் பேணுவதுடன் இது சமுர்த்தி உறுப்பினர்களுக்கு பிறப்புக்கள், இறப்புக்கள், திருமணங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படல் போன்ற நிகழ்வுகளில் நிதி உதவியை வழங்குகின்றது. உறுப்பினரொருவருக்கு மாதமொன்றுக்கான கட்டணம் ரூ.30 ஆக இருப்பதுடன், சமுர்த்திக் கொடுப்பனவுகளிலிருந்து இது கழிபடக்கூடியதாகும். 2002 ஆம் ஆண்டில் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதி 84,119 கோரல்களுக்கெதிராக ரூ. 128 மில்லியனை இழப்பீடாகச் செலுத்தியிருந்தது.

2002ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் 996 சமுர்த்தி வங்கித்தொழில் சமூக நிலையங்கள் தொழிற்பட்டன. சமுர்த்தி வங்கித் தொழில் சமூக நிலையங்களில் ஒன்று சேர்ந்த கட்டாய சேமிப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 8,047 மில்லியனாக விளங்கியது. இது, முன்னைய ஆண்டை விட 9 சதவீத அதிகரிப்பாகும். அதேவேளையில், சமுர்த்தி நன்மை பெறுவோரின் சுயவிருப்புச் சேகரிப்புக்கள் 2002ஆம் ஆண்டில் 78 சதவீதத்தால் அதிகரித்து ரூ.5,537 மில்லியனாக விளங்கின.

## 5.9. சுற்றாடல்

2002ஆம் ஆண்டில் பேரண்டப் பொருளாதார எல்லையிலான அபிவிருத்தி முழுமையான நோக்கில் சுற்றாடலில் சாதகமான தாக்கமொன்றையேற்படுத்தக்

கூடியதாயுள்ளது. குறைவான வட்டி வீதங்கள், குறைந்து செல்லும் பணவீக்கம், விலை தராளமயமாக்கல் மற்றும் 2002இல் அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் ஆகியன சுற்றாடலில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கையில் இறுக்கமான இறைக் கொள்கையானது, தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களில் சுற்றாடல் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் சுற்றாடல் கொள்கைகளை உருவாக்கும் நிறுவனமாக விளங்கும் சுற்றாடல் மற்றும் இலங்கை மூலவள அமைச்சு, சுற்றாடல் ஊக்குவிப்பு மற்றும் சுற்றாடல் மாசடைதலைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாண்டில் பல கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்திய வேளையில் மத்திய சுற்றாடல் அதிகார சபை தனது கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கமைப்புத் தொழிற்பாடுகள் ஆகியவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அதிக எண்ணிக்கையிலான அரச சார்பற்ற நிறுவனங்கள் சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்கு பற்றி விழிப்பை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.

சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு ஈயத்துடனான கசோலின் பயன்பாட்டினை இல்லாமற் செய்வதற்கும் 2002 ஆம் ஆண்டு யூனிலிருந்து ஈயமற்ற கசோலினை அறிமுகப்படுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசு மூன்றாண்டு நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் திண்மக்கழிவு முகாமைக்கான தேசிய உபாயமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதலளித்தது. திண்மக்கழிவு முகாமையில் தனியார் துறையின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கும் கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. பொது மக்களின் பங்களிப்புடன் வரையப்பட்ட தேசிய சுற்றாடல் கொள்கை ஆவணமானது அமைச்சரவை ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. தேசிய சுற்றாடல் கொள்கை வரைவானது, நிலைத்திருக்கக்கூடிய கூடிய பொருளாதார அபிவிருத்திக்கான பொருளாதாரக் கொள்கையுடன் சுற்றாடல் தொடர்பான விடயங்களை ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அபிவிருத்திச் செய்முறையில் தூய்மையான உற்பத்தித் தொழில் நுட்பங்களைப் புகுத்தும் நோக்குடன் சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு 2002ஆம் ஆண்டில் தேசிய தூய்மை உற்பத்தி நிலையத்துடன் இணைந்து தூய்மையான உற்பத்தி தொடர்பில் தேசியக் கொள்கை தயாரிப்பினை ஆரம்பித்தது. மேலும், விரைவாக வீழ்ச்சியடைந்து செல்லும் இயற்கைச் சுற்றாடல் மற்றும் மனித நடவடிக்கைகளினால் வன வாழ்க்கைக்கு ஏற்படக்கூடிய அதிகரித்த அச்சுறுத்தல் ஆகியனவற்றைக் கருத்திலெடுத்து சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு வட மத்திய மாகாணத்திலுள்ள அனவிலுந்தால சரணாலயம் மற்றும் கவுடுல்ல தேசிய பூங்கா ஆகியவற்றைப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகப் பிரகடனஞ் செய்தது.

சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு பல்வேறு சுற்றாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. பவித்திர கங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு 2002ஆம் ஆண்டில் தொடர்ந்தும் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு நீர் நிலைகளில் நீர்த்தரத்தினைக் கண்காணித்தது. களனி ஆற்றில் கிரமமான நீர்த்தர அறிவிப்பு முறையொன்று சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபைகளின் ஆதரவுடன் நிறுவப்பட்டது. சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு 2002ஆம் ஆண்டில் இடர்நேர்வு கழிவு முகாமைத் திட்டமொன்றையும் தயாரித்தது. அமைச்சரவைக் குழுவொன்று இடர்நேர்வு கழிவு முகாமைத் தொடர்பில் குறிப்பாக ஆசியப் பிரதேசத்திலான இடர்நேர்வு கழிவின் மாற்று எல்லை அசைவு தொடர்பில் நியமிக்கப்பட்டது. மேலும், நாட்டில் வான் மாசடைதல் விடயங்களைக் கவனிப்பதற்கென வான் மூலவள முகாமை நிலையமொன்று நிறுவப்பட்டது. வாகனத்திலிருந்து வெளியேறுவனவற்றைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினைப் பயன்தரு முறையில் நடைமுறைப்படுத்துவதற்கென பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, வாகனத்திலிருந்து வெளியேறுவனவற்றைக் குறைப்பதற்காக 500 இயந்திர வல்லுனர்களைப் பயிற்றுவிப்பதுடன் மூலவள ஆட்களாக 75 தொழில்நுட்பவியலாளர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் வாகனத்திலிருந்து வெளியேறுவனவற்றைப் பரீட்சிக்கும் நிலையங்களாகத் தொழிற்படுவதற்காக நிறுவன ரீதியான ஒழுங்கு முறையொன்று விருத்தி செய்யப்பட்டது.

சுற்றாடல் விடயங்களில் சில உலகளாவிய தொடர்புகளைக் கொண்டுள்ளன. இலங்கையானது பல பன்னாட்டு சுற்றாடல் உடன்படிக்கைகளை உறுதிப்படுத்தியுள்ளது. இதன்படி சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு ஓசோன் படையை இழக்கச் செய்கின்ற சாராம்சத்தின் பயன்பாடு மீதானமொன்றியல் ஒப்பந்தம் போன்ற பன்னாட்டு மரபுகளின் இணைப்பைத் தொடர்ந்து இடர்நேர்வு கழிவினது மாற்று எல்லை அசைவானது நில மதிப்புக் குறைதலை எதிர்த்தல் மற்றும் தகுதி பெறுதலுக்கான ஐக்கிய நாடுகளின் மரபு மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் வரைச்சட்ட மரபு என்பனவாகும். பன்னாட்டு உடன்படிக்கைகளை இணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக மரபு ரீதியான ஆலோசனை நிலையமொன்று சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சில் நிறுவப்பட்டது.

இலங்கை 2002ஆம் ஆண்டில் குளோட்டோ ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொண்டது. சேதன வாயுவை வெளியேற்றும் நாடாக இலங்கை காணப்படுவதால் தூய்மையாக்கல் அபிவிருத்திப் பொறிமுறையில் பங்கேற்றல் மற்றும் நன்மையடைதலுக்குத் தகுதியுடையதாகக் காணப்படுகிறது. தூய்மையாக்கல் அபிவிருத்திப் பொறிமுறையின் கீழ் தலைக்குரிய வெளியே செலுத்தும் மட்டமானது குறிப்பிடப்பட்ட மட்டத்தை விட அதிகமாகக் காணப்படும் நாடுகள் (பெரும்பாலும் அபிவிருத்தியடைந்த நாடுகள்) அபிவிருத்தியடையும் நாடுகளிலுள்ள வெளியே செலுத்துதலைக் கட்டுப்படுத்தும் முதலீட்டுச் செயற்றிட்டங்களுக்காக வெளியே செலுத்தல். கொடுகடன்களைக் கோரமுடியும். தூய்மையாக்கல் அபிவிருத்திப் பொறிமுறையின் கீழ் தனியார் துறை, சிநேக பூர்வமான சுற்றாடல் முதலீட்டுச் செயற்றிட்டங்களில் பங்குபற்றுவதனை ஊக்குவிக்கக்

கூடியதாயிருக்கும். வலு, வேளாண்மை, காணிப் பயன்பாடு, மீளக்காடாக்கல், வலு அடிப்படையில் திறன் வாய்ந்த தொழில் நுட்பத்தை ஏற்றுக் கொள்ளல், திண்மக் கழிவுச் சேகரிப்பு மற்றும் அகற்றல் ஆகிய விடயங்களில் முதலீடுகள் எதிர்பார்க்கப்படலாம். 2002 ஆம் ஆண்டில் சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சு, தேசிய தூய்மையாக்கல் அபிவிருத்திப் பொறிமுறை உபாயமொன்றினைத் தயாரித்தது.

சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவள அமைச்சின் ஒழுங்கமைப்புக்கான முக்கிய மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் மேற்கொள்ளல் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் சுற்றாடல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் முக்கியமாக ஈடுபட்டுள்ளது. 2002ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிடிகாரசபையானது 280சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைச் செயல்முறைப்படுத்தியதுடன் இவ்வாண்டில் 258 புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கியது. மத்திய சுற்றாடல் அதிகார சபையானது நிறுவப்பட்ட நியமங்களுக்கு இசைவாகத் தீர்மானிப்பதற்காக கழிவுகள் வெளியேற்றம், இரைச்சல், கழிவுநீர் வெளியேற்றம் தொடர்பாக வெளியேற்றத்துடன் தொடர்பான முறையில் கைத்தொழில்களின் செயலாற்றத்தினைத் தொடர்ந்தும் மதிப்பீடு செய்தது. இவ்வாண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபை 71 சுற்றாடல் பாதிப்பு மதிப்பீடுகளைச் செயல்முறைப்படுத்தியதுடன் 11 செயற்றிட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டன. 2002இல் சுற்றாடல் விடயங்கள் தொடர்பில் 885 பொது முறைப்பாடுகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை கையாண்டதுடன், 2001 இல் இவை 997 ஆகக் காணப்பட்டிருந்தன.